# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 ஆவணி 25 வெள்ளிக்கிழமை (10.09.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 288


# நம்பி வந்த எம். பிக்களுக்கு சலுகைகள், முன்னுரிமைகள்!

## அதில் தவறில்லை என்கிறார் அமைச்சர் ரம்புக்வெல



கொழும்பு, செப்டெம்பர் 10

அரசமைப்புத் திருத்தத்துக்கு ஆதரவாக வாக்களித்த எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு அரசு சலுகைகளையும் அவர்களது அபிவிருத்தித் திட்டங்களுக்கு முன்னுரிமையையும் வழங்கும். இதில் எந்தத் தவறும் இல்லை. எம்மை நம்பி வந்தவர்களை நாம் கவனிக்கவேண்டும் - என்று அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை வெளியிடும் செய்தியாளர் மாநாடு நேற்றுக் காலை தகவல் திணைக்கள கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. அங்கு அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் 17 கட்சிகளில் 15 கட்சிகள் அரசமைப்புத் திருத்தத்துக்கு ஆதரவாக வாக்களித்துள்ளன. ஜே.வி.பி., ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த 7எம்.பிக்கள் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வாக்களித்தனர்.

எதிர்க்கட்சியினர் அரசமைப்புத் திருத்தம் ஜனநாயகத்தைக் குழிதோண்டிப் புதைத்துள்ளது எனவும் சர்வாதிகாரப் போக்குக்கு வழிவகுப்பதாகவும் குற்றம்சுமத்துகின்றனர். இது தவறு. ஜனாதிபதியின் ஆட்சிக்காலம் இதனால் நீடிக்கப்பட்டுள்ளது என்பது தவறு.

இரண்டு தடவைகள் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்ற ஒருவர் மூன்றாவது தடவையாகவும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட (21 ஆம் பக்கம் பார்க்க)

## பல்டி அடித்த மறுநாளே ஹெலியில் சவாரி!

கொழும்பு, செப்.10

அரசமைப்புத் திருத்தத்துக்கு ஆதரவளித்து அரசுடன் இணைந்து கொண்ட மறுநாளே லக்ஷ்மன் செனவிரட்னவுக்கு ஹெலிக்கொப்டரில் பயணம் செய்யும் வாய்ப்பு கிட்டியுள்ளது.

பதுளை மாவட்டத்தில் கடந்த பொதுத்தேர்தலில் ஐ.தே.கட்சிப் (21 ஆம் பக்கம் பார்க்க)

## செட்டிகுளத்தில் தமிழ்ப்பெண் கைது தற்கொலைதாரி என்கின்றது பொலிஸ்

கொழும்பு, செப். 10

வவுனியா, செட்டிகுளத்தில் தமிழ்ப் பெண் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

விடுதலைப் புலிகளால் தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நடத்துவதற்காக இவர் பயிற்றுவிக்கப்பட்டுள்ளார் என பொலிஸார் சந்தேகம் (21 ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்பு 8 வீத மக்களையே பிரதிநித்துவப்படுத்துகிறதாம்

### கெஹலிய கூறுகின்றார்

கொழும்பு, செப். 10

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதி அல்ல. அது எட்டு சத வீத மக்களையே பிரதிநிதித்துவப்படுத்துகின்றது என்று அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை வெளியிடும் செய்தியாளர் மாநாடு நேற்றுக்காலை தகவல் திணைக்கள கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

வெளிநாட்டு செய்தியாளர் ஒருவர் எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதில் அளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (21 ஆம் பக்கம் பார்க்க)

## கட்சியிலிருந்து நீக்கப்பட்டால் சட்டநடவடிக்கை எடுப்போம்

### அரசுடன் இணைந்து கோண்ட ஐ.தே.கட்சி எம்.பிக்கள் எச்சரிக்கை

கொழும்பு, செப். 10

அரசமைப்புத் திருத்தத்துக்கு ஆதரவாக வாக்களித்துவிட்டு அரசுடன் இணைந்து கொண்ட ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் தாம் கட்சியிலிருந்து நீக்கப்பட்டால் சட்ட நடவடிக்கை எடுக்கப் போவதாக எச்சரித்துள்ளனர்.

அரசுடன் இணைந்துகொண்ட ஐ.தே. கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஏர்ள் குணசேகர இது தொடர்பாகக் கூறுகையில், ஐக்கிய தேசியக் கட்சியின் பல உறுப்பினர்கள் ஏற்கனவே அரசு தரப்புக்கு மாறி இன்னும் அரசுடன் உள்ள நிலையில் தமது உறுப்புரிமையை நீக்குவதற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப்பீடத்துக்கு உரிமையில்லை எனக் கூறினார்.

அரசு தரப்புக்கு மாறியதன் அடிப்படையில் கட்சி அங்கத்துவத்திலிருந்து நீக்கப்பட்ட ஓர் அங்கத்தவரின் பெயரையாவது கூறுமாறும் ஐ.தே.கட்சியின் தலைமைப் பீடத்துக்கு அவர் சவால் விடுத்துள்ளார்.

அத்தகைய நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதானால் (21 ஆம் பக்கம் பார்க்க)

## ரம்ழானில் பெற்ற அனுபவத்தை தொடர்ந்தும் பேணி நடப்போமாக

### யாழ்.ஜும்ஆ பள்ளிவாசல் மௌலவி வாழ்த்துச் செய்தி

யாழ்ப்பாணம், செப். 10

புனிதமான ரம்ழான் மாதத்தில் பெற்ற அனுபவத்தை முஸ்லிம் மக்களாகிய நாம் தொடர்ந்தும் பேணி நடப்போமாக !

இவ்வாறு யாழ். பெரிய ஜும்ஆ பள்ளிவாசல் மௌலவி ஐ.எம். சுகையில் நோன்புப் பெருநாள் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

மௌலவி சுகையில், தலைவர் எம்.எல்.லாபிர் ஆகியோர் இணைந்து வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது :-

புனிதமிகு ரம்ழான் மாதம் முழுவதும் நோன்பு நோற்றோம். பசித்திருந்தோம், விழித்திருந்தோம், தொழுகை, திருக்குர்ஆன் ஓதல் மற்றும் நல்அமல்கள் பல புரிந்தோம். இன்று ஈதுல்பித்ர் நோன்புப் பெருநாளைக் கொண்டாடுகின்றோம்.

மீள்குடியேறி கஷ்டங்களைச் சுமந்தும் நோன்பை நோற்றோம். நோன்பிற்குரிய கூலியை தானே வழங்குவதற்காக அல்லாஹ் குர் ஆனில் கூறியுள்ளார்கள். மீள்குடியேறியுள்ள மக்களின் (21 ஆம் பக்கம் பார்க்க)




ஈதுல் பித்ர் நோன்புப் பெருநாளை இன்று கொண்டாடும் எமது முஸ்லிம் பெருமக்களுக்கு உதயனின் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

## ஆயிரம் கைதிகளைத் தங்க வைக்கக் கூடிய சிறைச்சாலை யாழ்ப்பாணத்தில் நிறுவப்படும்

கொழும்பு, செப்.10

ஆயிரம் கைதிகளை தங்க வைக்கக் கூடிய சிறைச்சாலையை யாழ்ப்பாணத்தில் அமைக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் டியூ குணசேகரவின் ஆலோசனையை ஆராய்ந்த அமைச்சரவை அதற்கு அங்கீகாரம் வழங்கியது.

இரண்டரை ஏக்கரில் 272 மில்லியன் ரூபா செலவில் இந்தச் சிறைச்சாலை அமைக்கப்படவுள்ளது.

சிறைச்சாலை புனரமைப்புக் குறித்து அமைச்சர் தெரிவித்தவை வருமாறு:

500 ரூபா முதல் 2000 ரூபா வரை அபராதத் தொகையைச் செலுத்த முடியாத 10 ஆயிரம் பேர் சிறைக்கூடங்களில் இருக்கின்றனர். இவர்களைப் பொது நலப் பணிகளில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுப்பதன் மூலம் தற்போது தண்டனை பெற்றுவரும் 27 ஆயிரம் கைதிகளை, ஒரே நாளில் 17 ஆயிரம் ஆகக் குறைக்க் முடியும்.

ஒரு கைதிக்கு ஒரு நாளைக்கு சராசரியாக 261 ரூபா செலவாகின்றது. இத்தொகையை ஒரே நாளில் குறைப்பதுடன் பெரும் விரயத்தையும் தவிர்க்க முடியும்.

500 ரூபா அபராதம் செலுத்த வேண்டிய வரைமாதக்கணக்கில்(21 ஆம் பக்கம் பார்க்க)

## தொகுதி முறை, விகிதாசார முறை கலந்த உள்ளூராட்சித் தேர்தல்

### சட்டவரைவு தயாரிக்க அமைச்சரவை அங்கீகாரம்

கொழும்பு, செப். 10

தொகுதி முறை, விகிதாசார முறை இரண்டையும் இணைத்து உள்ளூராட்சித் தேர்தலை நடத்த வழிசெய்யும் சட்ட வரைவை தயாரிக்க அமைச்சரவை நேற்று அங்கீகாரம் வழங் கியதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை வெளியிடும் செய்தியாளர் மாநாட்டில் அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

இந்த சட்டவரைவை தயாரிக்கும் பொறுப்பு சட்டவரைஞர் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்படும். உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சர் ஏ.எல்.எம். அதாவுல்லா (21 ஆம் பக்கம் பார்க்க)




உள்ளூர் நிகழ்வுகளை உலகறியச்செய்வோம்!
நல்லைக் கந்தனின்
உற்சவ காலத் திருக்காட்சிகள்
தினமும் உங்கள் உதயனின்
வலைத் தளத்திலும்....
www.uthayan.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# ஆசார்யாபிஷேக அழைப்பு

அன்புடையீர்!

ஸ்வஸ்தி நிகழும் மங்களகரமான விகிர்தி வருஷம் ஆவணித் திங்கள் 25ஆம் நாள் (10.09.2010) வெள்ளிக்கிழமை அத்த நட்சத்திரமும் திருதியைத் திதியும் அமிர்தயோகமும் கூடிய காலை 9 மணி முதல் 10.30 மணிவரையுள்ள துலா லக்கின சுப வேளையில் எமது சிரேஷ்ட புத்திரன்

## சிரஞ்சீவி தி.ரவீந்திரன் ஐயா

(Cert.in.Sivacharya Education

அவர்களுக்கு அச்சுவேலி தீர்த்தாங்குளப் பிள்ளையார் ஆலய மண்டபத்தில், திருவருள் துணைகொண்டு ஆசார்யாபிஷேகம் (குருப்பட்டா பிஷேகம்) செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து விழாவில் கலந்துகொண்டு பெரியோர்கள் இளங்குருவை ஆசீர்வதித்தும் இளையோர் குருவின் ஆசியைப் பெற்றும் இவ்விழாவைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**ஆசார்யாபிஷேக பிரதம குரு (தீட்சா குரு)**

ஆகமக் கிரியா ஜோதி, துவஜாரோகண துரந்தரர், கிரியா கிரம விஷாரத

**சிவஸ்ரீ சது.மகாலிங்கசிவக் குருக்கள் J.P**

(பிரதம குரு, நாயன்மார்கட்டு அரசடிப் பிள்ளையார் ஆலயம், முதல்வர், சைவகுருமணிகள் பயிற்சிக் கல்லூரி)

**சர்வசாதகாசிரியர்**

செஞ்சொற்சாதகன்

**சிவஸ்ரீ மு.சசிதரக்குருக்கள்** (B.Sc (Hons)

(இயக்குநர், சைவக்குருமணிகள் கழகம், பயிற்சிக் கல்லூரி)

**சாதக இளவரசு**

**சிவஸ்ரீ சு.ஸ்ரீரங்கநாதக் குருக்கள்**

(பிரதம குரு, வழக்கம்பரை முத்துமாரி அம்பாள் கோயில்)

## ஆசியுரைகள்

**சிவஸ்ரீ ம.சிவானந்தராசாக் குருக்கள்**

(பிரதம குரு, வியாபாரிமூலை இன்பசிட்டி ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயம்)

**சிவஸ்ரீ கு.கிருபானந்தக் குருக்கள்**

(தலைவர், அகில இலங்கை சைவக்குருக்கள் அர்ச்சகர் சபை)

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள்**

(குரு முதல்வர், நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்)

இங்ஙனம்
தங்கள் நல்வரவை நாடும்:

திருமதி தையல்நாயகி திருஞானசம்பந்தக் குருக்கள்.
திரு.திருமதி தி.ஜெயச்சந்திரக்குருக்கள் குடும்பத்தினர்.
தீர்த்தாங்குளம், பத்தைமேனி, அச்சுவேலி.

# உங்கள் கல்வித் தகைமையை உயர்த்தி சர்வதேச தொழில் வாய்ப்பு அளிக்கும் விசேட கற்கை நெறிகளுக்கான இலவச வழிகாட்டல் கருத்தரங்கு

* சர்வதேச நாடுகளில் வேலை வாய்ப்புக்கான தகுதியை பெறல்.
* ஆங்கிலத்தில் சரளமாக உரையாடுவதற்கான பயிற்சியுடன் கூடிய கணனிப் பயிற்சி.
* எங்கள் விரிவுரையாளர் உதவியுடன் உங்கள் விருப்புப் பாடத்தை தெரிவு செய்தல்.
* சர்வதேச பல்கலைக் கழகங்களில் அனுமதி பெறலும், அதற்கான விசா பெறல் மற்றும் பிரயாண, தங்குமிட ஒழுங்குகள் செய்தல் போன்றன சம்பந்தமான வழிகாட்டல் கருத்தரங்கு.

U.K இல் இருந்து வருகை தந்துள்ள

**திரு.ஸ்ரீ.கந்தையா** (B.Sc.,MBA)

Visiting Professor Statistic Management in Leadership.
Contacting leactures, Workshops and Seminar in the U.K, Africa, Middle-East and Far-East.
Has Considerable working experience in both public and commercial sectors.

**திரு.வி.நிரஞ்சன்** (Consultant Bartleet Mallorys Stock Brokers)

ஆகியோரால் நடத்தப்படவுள்ளது.

காலம்: நாளை (11.09.2010) சனிக்கிழமை காலை 9.30-2 வரை

இடம்: Spectra Skills Hall

பெற்றோரும் பங்கு பெறலாம். அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**Spectra Skills**

19, Stanley Road, 2nd floor of People's Bank Building, Jaffna. T.P: 0212221422, 0212221423

(103161)

## உலகெங்கும் ஒரேநாளில் இம்முறை நோன்புப் பெருநாள்

மன்னார், செப் 10

நாடு முழுவதும் நேற்று ஷவ்வால் தலைப்பிறை தென்பட்டதால் இன்று முஸ்லிம் மக்கள் நோன்புப் பெருநாளைக் கொண்டாடுகின்றனர்.

இம்முறை உலகம் முழுவதும் ஒரே நாளில் முஸ்லிம் மக்கள் நோன்புப் பெருநாளைக் கொண்டாடுவது சிறப்பு அம்சம் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-ஐ-80)

## சாவகச்சேரி லயன்ஸின் இலவச வாராந்த வகுப்பு

தென்மராட்சி, செப் 10

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் க.பொ.த.சாதாரண தரம் அல்லது உயர்தரம் ஆகிய பரீட்சையில் ஆங்கில பாடத்தில் சித்திபெற்ற மாணவர்களின் வாசிப்பு, எழுத்து மற்றும் பேச்சுத் திறனை விருத்தி செய்வதற்காக இலவச வாராந்த வகுப்புகளை நடத்தவுள்ளனர்.

நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகவுள்ள ஆரம்ப வகுப்பில் கலந்துகொள்ள விரும்பும் மாணவர்கள் சாவகச்சேரி நவீன சந்தையில் உள்ள புடைவை நிறுவனத்தில் மூலச் சான்றிதழுடனும் நிழற் பிரதியுடனும் பதிவை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-207)

## கௌரவிப்பு நிகழ்வு

சாவகச்சேரி, செப் 10

தேசிய உயர்கல்வி அமைச்சினால் 2009 இல் நடத்தப்பட்ட தேசத்தில் மரபுரிமை-சிறுவர்களுக்கானது-என்ற தொனிப் பொருளிலான கட்டுரைப் போட்டியில் அகில இலங்கை ரீதியில் இரண்டாம் இடத்தைப் பெற்ற கவிஞர் கே.ஆர்.திருத்துவராஜாவை பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு இன்று காலை 9.30 மணிக்கு மட்டுவில் அ.த.க. பாடசாலையில் அதிபர் த.கிருஷ்ணன் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஒ-131)

## நந்தி நினைவுப் பேருரை கைலாசபதி கலையரங்கில்

யாழ்.மருத்துவ சங்கத்தின் ஏற்பாட்டில் பேராசிரியர் சி.சிவஞானசுந்தரத்தின் (நந்தி) நினைவுப் பேருரையும் கலாசார நிகழ்வும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளன.

'யாழ்ப்பாணத்தின் வைத்தியக் கல்வி' என்னும் தலைப்பில் மருத்துவ பீடாதிபதி பேராசிரியர் கே.சிவபாலன் நினனவுப் பேருரை நிகழ்துவார். அதனைத் தொடர்ந்து மருத்துவ பீட மாணவர்களின் கலாசார நிகழ்வுகள் இடம்பெறும். (ஒ-ஐ)

### தவறிவிட்டது

நேற்று (09.09.2010) வியாழக்கிழமை பி.ப. கொக்குவிலுக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் 2 சங்கிலி, ஒரு பென்ரன், ஒரு சோடி தோடு ஆகியன அடங்கிய கடதாசிப் பொதி தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் இலக்கத்துடன் தொடர்புகொண்டு தந்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். தொ.பே: 0776565990

### தேவை

* கணனி அறிவுள்ள கணக்காளர் (பெண்)
* Ticketing officer (ஆங்கில அறிவுடைய பெண்)

தமது தொலைபேசி இலக்கத்துடன் சுய விவரக் கோவையை உடன் அனுப்பவும்.

விளம்பர இல: 4070,
மே/பா உதயன்

### T.V. க்கள் மலிவு விற்பனை

Sony Wega Flat 14" - 10,000/=, 21" - 14,000/= மற்றும் அம்பிளிபயர்கள் JBL Box வகைகள் Double Cassite Recording Deck, ரேடியோக்கள் மலிவு விலையில் விற்கப்படும்.
தொடர்பு : 0771393670, 0214920853
இ.மகேஸ்வரன் (அப்பளக்கொம்பனி), சீனிப் புளியடி (ஆரம்பப் பாடசாலை அருகில்), K.K.S. வீதி, இணுவில்.

# புனித சிந்தாத்திரை மாதா திருவிழா- சாட்டி



## திருவிழா அறிவித்தல்

வருடாந்த சாட்டி சிந்தாத்திரை அன்னை திருவிழா இவ்வருடமும் கடவுளுடைய அருளோடு நடைபெறவுள்ளது. நவநாள்கள் 09.09.2010 வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. ஒன்பது நாள்கள் நடைபெறும் வழிபாடுகள் மாலை 5 மணிக்கு செபமாலையுடன் ஆரம்பமாகும். 18ஆம் திகதி முதலாவது திருநாள் திருப்பலி காலை 5.30 மணிக்கும், இரண்டாவது திருப்பலி காலை 7 மணிக்கும் அனுராதபுர, யாழ் ஆயர்களின் தலைமையில் நடைபெறும்.

11 (சனி), 12 (ஞாயிறு), 13(திங்கள்), 15 (புதன்), 16 (வியாழன்), 17 (வெள்ளி) ஆகிய நாள்களில் காலை 9 மணியிலிருந்து மாலை 5 மணிவரை சிறப்பு கருத்தமர்வுகள் நடத்தப்படும்.

(103138) பரிபாலகர்.

# வரணி, குடமியன் திருவருள் மிகு ஆதிசிவன் தேவஸ்தான வருடாந்த மகோற்சவ விஞ்ஞாபனம்

02.09.2010 அன்று கொடியேற்றம்
தொடர்ந்து 10 தினங்கள் உற்சவம்

இன்று (10.09.2010) வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழா
மு.ப. 11 மணிக்கு சுவாமி தேரில் பவனி வருவார்.

நாளை (11.09.2010) சனிக்கிழமை தீர்த்தத் திருவிழா
காலை 6 மணிக்கு 1008 சங்காபிஷேகம்
முற்பகல் 11 மணிக்குத் தீர்த்தம்

(12.09.2010) ஞாயிற்றுக்கிழமை பூங்காவனம்
காலை 10 மணிக்கு திருக்கல்யாணம்.
இரவு 7 மணிக்கு பூங்காவனத்தில் சுவாமி அமர்ந்து விசேஷ நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

ஆலய குருவும் மகோற்சவ
பிரதம குருவுமாகிய
சிவாகமரத்தினம்
சிவஸ்ரீ இராம. ஸ்ரீரங்கக்குருக்கள்

சி.குமாரசுவாமி,
ஆலய தர்மகர்த்தா. (ெ/570778)

# குருப்பட்டாபிஷேக வாழ்த்து



அச்சுவேலி தீர்த்தாங்குளத்தில் வசிக்கும்

**சிவஸ்ரீ திருஞான சம்பந்தக் குருக்கள் ரவீந்திரன் ஐயா**

அவர்கள் இன்று (10.09.2010) குருத்துவப் பணியில் தன்னை அர்ப்பணிப்பதையிட்டு மனம் மகிழ்கிறோம். சமய, சமூகப் பணிகளை செவ்வனே ஆற்ற எம் குலதெய்வமாகிய தீர்த்தாங்குளப் பிள்ளையாரைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துபவர்கள்:**
சிவஸ்ரீ பா.சோமசுந்தரக்குருக்கள்
சிவஸ்ரீ பா.மனோகரன் ஐயா
சிவஸ்ரீ ந.கணேசலிங்கம் ஐயா
சிவஸ்ரீ ந.வர்ணதேவன் ஐயா
சிவஸ்ரீ க.கோமானந்தன் ஐயா

தீர்த்தாங்குளம்,
பத்தமேனி,
அச்சுவேலி. (103169)


இன்று முதல் நெல்லியடியில்.......

டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனியின் அங்கீகரிக்கப்பட்ட அசல் உதிரிப்பாகங்களின் விற்பனை முகவர்

கணேசன் மோட்டோர்ஸ்
Ganesan Motors



பஜாஜ்

காலம்: இன்று(10.09.2010) வெள்ளிக்கிழமை பி.ப. 12.30 மணி

"மோகன்ஸ்" பிரதான வீதி நெல்லியடி.

T.P - 021 226 3338, 0777049364.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## ஜனநாயகமே, நீ என் செய்வாய்?

அரசமைப்புக்கான பதினெட்டாவது திருத்தம் அமோகமாக நிறைவேறிவிட்ட பூரிப்பில் திளைத்திருக்கிறது அரசாங்கம். அபிவிருத்தி, உலக நாடுகளின் வளர்ச்சிக்கு நிகராக முன்னேறும் இலக்குடன் செயற்படுவது, மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்துதல், அதற்கு வகை செய்யும் விதத்தில் தொழில் வளங்களைப் பெருக்குதல், வறுமையை ஒழித்தல் என்ற சித்தாந்தங்களை - ஒப்பேற்றுதல் குறித்து அரசு இனி வாய் பிளக்கப் பேசும். அரசமைப்புத் திருத்தத்தை ஆதரித்து, அரசுக்கு மக்கள் பலம் உண்டு என்று காட்டி, கடந்த புத னன்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களைத் திருப்திப்படுத்துவதற்காகவேனும் தான் வழங்கிய வாக்குறுதிகளில் அற்பசொற்பத்தையேனும் செயற்படுத்துவதில் முனைப்புக் காட்டத்தானே வேண்டும்....?

ஜனநாயகம் என்ற முத்திரையுடன் நினைத்ததைச் செய்வதற்கு மேடை அமைக்கப்பட்டுவிட்டதால் செய்நன்றி மறந்து செயற்படும் தன்மை, சுபாவம் உடனடியாக உருவெடுக்காது என நம் பலாம்.

அரசாங்கம், தான் நினைத்ததை வலுவூன்றிச் செய்து முடிப்பதற்கு அதன் பக்கத்துக்குச் சாய்ந்து வாக்களித்த மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பைச் சாராத எதிரணிக் கட்சிகளைச் சேர்ந்த பதினேழு நாடாளுமன்ற உறுப்பினர்கள், அவர்களின் கட்சிகளுக்கும், வாக்காளர்களுக்கும், நாட்டுக்கும் செய்த துரோகம் கண்டனத்துக்குரியதாகும்.

பொதுத் தேர்தலின்போது தாம் சார்ந்திருந்த கட்சிகளின் கொள்கைகளை முன்வைத்து, அக் கொள்கைகளைக் கடைப்பிடித்து மக்களுக்குச் சேவையாற்றுவதாக உறுதி அளித்தவர்கள், கட்சிக்கும் வாக்காளர்களுக்கும் துரோகம் செய்துவிட்டு அரசுக்குச் சார்பாக வாக்களித்திருக்கிறார்கள்.

தாம் சார்ந்த கட்சியின் நிலைப்பாடு, தவறு என்று கருதினால் தாங்கள் யோக்கியமான அரசியல்வாதிகள் என்று கூறுவதானால், அவர்கள் அந்தக் கட்சியிலிருந்து விலகியிருக்கவேண்டும்; நாடாளுமன்ற உறுப்பினர் பதவியையும் ராஜினாமாச் செய்திருக்கவேண்டும். இந்த இரண்டில் எதனைச் செய்தாலும் தமக்குச் சொகுசு தந்த பதவி பறி போய்விடும் என்பதால் கட்சி தாவி வாக்களித்திருக்கிறார்கள். இவர்களைப் போன்ற பச்சோந்திகளை இனங்காண முடியாத அரசியல் கட்சித் தலைமைத்துவங்கள் கண்டனத்துக்குரியன. வாக்காளர்கள் முதலில் கட்சிகளின் தாரதம்மியங்களைக் கருத்தில் கொண்டு, அதன் பின்னரே வேட்பாளர்களை ஆதரிக்கிறார்கள். எந்தக் கஷ்டத்தின் மத்தியிலும் எந்த வகையான பசைகளையும் பதவிகளையும் நாடாது தமது கட்சிக்கு விசுவாசமாகவும் மக்களுக்கு - வாக்காளர்களுக்கு - நம்பிக்கைத் துரோகம் செய்யாதிருக்கக்கூடிய வேட்பாளர்களாகத் தெரிவு செய்வதில் கட்சிகள் அவதானமாக இருக்கவேண்டும் என்பதனை புதன்கிழமை நடைபெற்ற கட்சித் தாவல்கள் எடுத்துக் காட்டுகின்றன.

மந்திரத்தால் மாங்காய் விழுத்துவது போன்று அரசாங்கம் கடைசி நேரத்தில் 17 நாடாளுமன்ற உறுப்பினர்களை கவர்ந்திழுத்தமை அரசியல் துரோகம் என்பது ஒருபுறம். தமது தரப்பு எதிர்க் கட்சியாக இருந்து கடைசி நிமிடத்தில் கட்சித் தாவல் நடை பெற்றால் தமக்கு ஏற்படக்கூடிய ஏமாற்றமும் பாதிப்பும் எந்தகையதாக இருக்கும் என்பதனை ஆளும் தரப்பு சிந்தித்துப் பார்த்திருக்கவேண்டும்.

அத்தகைய நெறிமுறையையும் கண்ணியத்தையும் இலங்கை அரசியலில் எதிர்பார்க்க முடியவில்லை. மக்கள் ஆட்சி என்பது நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்ற போர்வையில் தங்கள் சொந்த நலன்களில் மட்டுமே குறிவைத்துச் செயற்படுவது என்ற ஈன நிலைக்கு இந்த நாடு வந்துவிட் டது. எடுபிடி, அம்பு, சேனை, நிதி மூலம் எங்கு ஏராளம் என்று பார்த்துப் பக்கம் மாறுவது ஜன நாயகத்தின் குணாம்சம் ஆகிவிட்டது இந்த நாட்டில்!

அரசியல்வாதிகளின் இந்த அதர்மக் குணாம்சம் இனிக் கட்டவிழப்போகும் சர்வாதிகாரத்தில், மேலும் எழுமா அல்லது தாழ்ந்து புதையுமா என்பதனை முடிவு செய்யும் பொறுப்பு மக்கள் கைக்கு வருமா என்பது சந்தேகமே! ஜனநாயகமே நீ பாவம், இனி என் செய்வாய்?- என்றாகி விட்டது!

## ஜேர்மனியில் தமிழர் சிறப்பு மாநாட்டில் இலங்கை அறிஞர்கள், எம்.பிக்கள் பங்கேற்பு

கொழும்பு, செப். 10

உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் ஐரோப்பிய ஒன்றியம் நடத்தும் 'அகம் புலம் தமிழர் வாழ்வியல் சிறப்பு மாநாடு' நாளை சனிக்கிழமை ஜேர்மனியில் உள்ள ரெயினே மாநகரில் உள்ள எலிசபெத் பாடசாலை மண்டபத்தில் நடைபெறுகிறது. பேராசிரியர் இ.பாலசுந்தரம் மாநாட்டுக்குத் தலைமை வகிப்பார்.

ரெயினே நகர முதல்வர் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு மங்கள விளக்கேற்றி மாநாட்டை சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைப்பார். உலகெங்கும் பரந்து வாழும் தமிழ் இனம் ஒற்றுமையோடும் தனது தாய் மொழியை மறக்காமல் வாழ வேண்டும் என்பதற்காகவும் தமிழர் சமூகம் தனது உரிமைகளைப்பெற்று தலை நிமிர்ந்து வாழவேண்டும் என்பதற்காகவும் அரசியல் சார்பற்ற ரீதியில் இன மத பேதங்களைக் கடந்து உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கம் செயற்பட்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ் இனம் ஒரு குடையின் கீழ் செயற்பட வேண்டும் என கடந்த 36 வருடங்களாகச் செயற்படும் இந்த அமைப்பு அண்மைக்கால சூழலுக்கு ஏற்ப அகத்திலும் புலத்திலும் வாழும் தமிழ் மக்களின் அமைதியான வாழ்க்கை, தமிழ் மொழிக்கல்வி, தமிழர் பண்பாட்டை பேணல், புனர்வாழ்வு என்ற குறிக்கோள்களை அடையும் நோக்கில் செயற்பட்டு வருகிறது.

இம்மாநாட்டில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா. சம்பந்தன், மாவை சேனாதிராசா, சிவஞானம் சிறிதரன், பா.அரியநேத்திரன், சீ.யோகேஸ்வரன் ஆகியோருடன் 'சுடர்ஒளி', 'உதயன்' பத்திரிகைகளின் முன்னாள் ஆசிரியரும், பிரபல பத்திரிகையாளருமான ந.வித்தியாதரன், கொழும்பு றோயல் கல்லூரி பிரதி அதிபர் மாரிமுத்து கணபதிப்பிள்ளை, இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க உபதலைவர் ஜெயசீலன் உட்பட மலேசியா, கனடா, ஆஸ்திரேலியா தென்னாபிரிக்கா, ஐரோப்பா ஆகிய நாடுகளில் உள்ள தமிழ் அறிஞர்களும், ஐரோப்பிய நாடுகளில் உள்ள சிரேஷ்ட ஊடகவியலாளர்களும் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர்.

இம்மாநாட்டில் கவியரங்கு, கருத்தரங்கு, ஆய்வரங்கு, ஓவியக் கண்காட்சி, நூல் கண்காட்சி, சிறப்புரைகள் என்பனவும் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறும். இம்மாநாட்டில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அனைத்துத் தமிழ் உறவுகளுக்கும் மாநாட்டு ஏற்பாட்டாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (சி)

## முன்னேற்றப் பாதையில் செல்லும் எமக்கு முஸ்லிம் மக்களின் நீடித்த ஆதரவு கிடைக்கும்

### நோன்புப் பெருநாள் வாழ்த்துச் செய்தியில் ஜனாதிபதி நம்பிக்கை



கொழும்பு, செப். 10

பயங்கரவாதம் முறியடிக்கப்பட்டு நாடு முன்னேற்றப் பாதையில் வீறு நடை போடும் இக் கால கட்டத்தில் இஸ்லாமிய சகோதரர்களின் நீடித்த ஆதரவு எனக்குக் கிடைக்கும் என பரிபூரணமாக நம்புகின்றேன்.

- இவ்வாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நோன்புப் பெருநாள் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவித்தவை வருமாறு:-

இன்று கொண்டாடப்படும் இஸ்லாமியர்களின் புனித நாளான நோன்புத் திருநாளுக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெருமிதமடைகின்றேன்.

இஸ்லாம் மதத்தின் மிகப் புனிதமான மாதமாகப் பாரம்பரியமாக அனுஷ்டிக்கப்படும் நோன்பு மாதத்தில் உலகெங்குமுள்ள இஸ்லாமிய சகோதரர்கள் உபவாசத்தை அனுபவித்தும், முகமது நபிகளின் குரானின் போதனைகளைப் பின்பற்றியும் வருகின்றனர்.

இலங்கை வரலாற்றில் பல பரம்பரையாக வாழ்ந்து வரும் இஸ்லாமிய சமூகம் இந்நாட்டின் அபிவிருத்திக்கும் இறைமைக்கும் பெரும் பங்களிப்பை வழங்கி வந்துள்ளது. மிக நீண்ட காலமாக இந்நாட்டில் வாழும் சகல மதத்தினருடனும் நேச உறவை உருவாக்கிக்கொண்டு சுமுகமான தொரு சமுதாய உறவை வளர்த்துக் கொள்வதில் இஸ்லாமிய சமூகம் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வந்துள்ளது. எதிர்காலத்திலும் இந்த சுமுக நிலை நிலவும் என்பதில் எனக்கு நம்பிக்கையுண்டு.

நாட்டில் சாந்தியும் சமாதானமும் மீண்டு வந்தபின்னர் நடைபெறும் இந்த நோன்புத் திருநாள் இந்நாட்டில் வாழும் இஸ்லாமியர்களுக்கு களிப்பூட்டும் என நான் நம்புகின்றேன். பயங்கரவாதத்தால் நிலைகுலைந்து அகதி முகாம்களில் துன்பங்களை அனுபவித்து வந்த இஸ்லாமியர்கள் மீண்டும் அவர்களது சொந்த இடங்களில் குடியேற்றப்பட்டுள்ளமையால் இந்தப் புனிதத் திருநாளை அவர்கள் சிறப்பாகக் கொண்டாடுவார்கள் என்பதில் ஐயமில்லை.

இந்த அருமையான சந்தர்ப்பத்தில் நாம் அனைவரும் ஒன்றுபட்டு இன,மத,மொழி வேறுபாடுகளைக் கடந்து சுபீட்சமான தேசத்தைக் கட்டி எழுப்ப அக்கறையுடனும் அர்ப்பணிப்புடனும் செயற்பட வேண்டும் என நான் கேட்டுக் கொள்கின்றேன்.

இலங்கை வாழ் இஸ்லாமிய சகோதரர்களுக்குக் களிப்பூட்டும் திருநாளாக இந்த நோன்புத் திருநாள் அமையவேண்டும் என உளமாரப் பிரார்த்திக்கின்றேன். (ஓ-சி)

## கோப்பாய்க் கோமான் நினைவு; நாளை ஆலோசனைக் கூட்டம்

யாழ்ப்பாணம், செப். 10

கோப்பாய்க் கோமான் அமரர் கு.வன்னியசிங்கம் நினைவு விழா ஆலோசனைக் கூட் டம் நாளை சனிக்கிழமை மாலை 4 மணிக்கு, இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கோப்பாய்க் கிளை அலுவலகத்தில் (ஆவரங்கால் சிவன் கோயில் அருகில்) தமிழரசுக் கட்சியின் உப தலைவர் க.சின்னத்துரை தலைமையில் நடைபெறவுள்ளது.

இம் மாதம் 18 ஆம் திகதி அமரரின் நினைவுதினம் கொண்டாடுவது பற்றி கலந்துரையாட இருப்பதனால் அமரரின் அபிமானிகள், ஆதரவாளர்கள் அனைவரையும் வருகைதருமாறு கேட்டுக் கொண்டுள்ளனர். (ஓ-15)

## எம் தாய்த் திருநாட்டிலும் உலகிலும் அமைதியும் ஒற்றுமையும் மலரட்டும்

### ரமழான் வாழ்த்துச் செய்தியில் ரணில்

கொழும்பு, செப்.10

மனிதர்களுக்கு நேர்வழிகாட்டியும் நன்மை, தீமைகளைப் பிரித்தறிவிப்பதுமான புனித அல்-குர்ஆன் அருளப் பெற்ற இம் மாதத்தில் பெற்ற படிப்பினைகளைக் கொண்டு எம் திருநாட்டிலும், உலகிலும் அமைதியும், ஒற்றுமையும், சகோதர மனப் பான்மையும் மலர பிரார்த்திப்போம்.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தமது ரமழான் வாழ்த்துச்செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தனது பெருநாள் வாழ்த்தில் தெரிவித்திருப்பவை வருமாறு:-

இப்புனித மாதத்தில் மனிதன் கட்டுக்கோப்புடன் வாழ்ந்து, அதன் மூலம் பெற்ற படிப்பினைகளை ஏனைய மாதங்களில் ஒழுகி நடக்க வேண்டும் என்ற உன்னத படிப்பினையையே நோன்பு எங்களுக்கு வழியுறுத்துகின்றது.

ரமழான் நோன்பு ஏனைய மனிதர்களது விடயங்களில் பெரும் கரிசனையை வேண்டி நிற்பதுடன் ஏழைகளுக்கு உதவி புரிய வேண்டும் என்ற மனப் பான்மையையும் தூண்டுகிறது.



அத்துடன் உளத் தூய் மையையும் பெற்றுத் தருகிறது. இவ்வாறான தூய உள்ளங்கள் ஒன்று சேரும்போது சிறந்த சமூக கட்டமைப்பு உருவாக்கப்படுகிறது.

- இப்படி அவர் வாழ்த்தியுள்ளார். (ஓ-சி)

### நாளை

ஆவணி 26 11.09.2010

சனிக்கிழமை

| | |
|---|---|
| திதி: | : திருதியை மு.ப.09.56 வரை |
| நட்சத்திரம் | : சித்திரை மு.இ.09.35 வரை |
| சுபநேரம் | : 03.03-04.33 வரை |
| ராகுகாலம் | : 09.03-10.33 வரை |

விநாயகர் சதுர்த்தி விரதம்

## நெடுந்தீவு வைத்தியசாலையின் அபிவிருத்திக்கு பொது நிறுவனங்களின் பல்வேறு உதவிகள்

### ரூ. 10 லட்சம் பெறுமதியான மருத்துவ உபகரணங்களும் கிடைத்தன

யாழ்ப்பாணம், செப்.10

நெடுந்தீவு பிரதேச வைத்தியசாலைக்கு 10 லட்சம் ரூபா பெறுமதியான அடிப்படை மருத்துவ உபகரணங்களை கனடாவைச் சேர்ந்த நெடுந்தீவு அபிவிருத்தி ஒன்றியமும் சர்வதேச சுகாதார மருத்துவக்கழகமும் வழங்கியுள்ளன.

இந்த வைத்தியசாலையில் நீண்ட காலமாக பல தேவைகள் இருந்து வந்துள்ளன. அந்தத் தேவைகள் இனங்காணப்பட்டு முன்னுரிமை அடிப்படையில் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

நீண்ட காலமாக நிரந்தரமாக இவ் வைத்தியசாலையில் பணியாற்ற வைத்தியர்கள் முன்வரவில்லை. மாதாந்த சுழற்சி அடிப்படையிலேயே கடமையாற்றி வந்தார்கள். கடந்த மாதம் 19 ஆம் திகதி முதல் டாக்டர் நன்னித்தம்பி மகேஸ்வரி ஒரு வருட காலத்துக்கு நிரந்தரமாக நியமிக்கப்பட்டுள்ளார். இது வரை காலமும் தாதிய உத்தியோகத்தர்கள் பணியாற்றவில்லை. வடமாகாண ஆளுநரின் பணிப்புரைக்கமைய மாதாந்த சுழற்சி முறையில் தாதிய உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

வைத்தியசாலையில் மருந்து வகைகளைப் பாதுகாத்து வைப்பதற்கு புதிய குளிரூட்டி ஒன்று அண்மையில் வழங்கப்பட்டுள்ளது. நோயாளர்களை வைத்தியசாலையில் இருந்து இறங்குதுறைக்கு ஏற்றிச் செல்ல 'ஓட்டோ' ஒன்றை வெகுவிரைவில் சர்வதேச சுகாதார மருத்துவக் கழகம் வழங்கவுள்ளது. இத்தகவல்களை யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ. கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். (ஓ-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாரதி தேவை

லான்ட்மாஸ்ரர் வாகனம் செலுத்துவதற்கான சாரதி அனுமதிப் பத்திரமும் ஆற்றலும் உடைய ஒருவர் தேவை. உழவு இயந்திரம் செலுத்துதல் மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும்.

தொடர்பு: ரூலின்ஸ் பிறைவேட் லிமிட்டெட்,
இல. 08, நல்லூர் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. இல. 0212225534


# மரண அறிவித்தல்கள்

## குணரட்ணம் சிறிகாந்தராசா



கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட குணரட்ணம் சிறீகாந்த ராசா (சிறீ, காந்தன்) 07.09.2010 செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குணரட்ணம் - அன்னலட்சுமி தம்பதியரின் அருமை மகனும், காலஞ்சென்றவர்களான சிவப்பிரகாசம் - பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், சுகந்தியின் அன்புக் கணவரும், கிருஷ்ணியின் பாசமிகு தகப்பனாரும், அமரர்களான ஜோர்ஜ், தவம் மற்றும் ஸ்ரான்லி பிறேமளா ஆகியோரின் அன்புச் சகோ தரரும், லட்சுமி, லின், ஜெயந்தி, அருண் ஆகியோரின் மைத் துனரும், பரந்தாமன், அனா, சாயி ஆகியோரின் சித்தப்பாவும், இரம்மியா, செந்தூரன் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (10.09.2010) வெள்ளிக் கிழமையில் இருந்து பொரளை A.F.RAYMOND மலர்ச் சாலையில் வைக்கப்பட்டு 12.09.2010 ஞாயிற்றுக்கிழமை இறுதிக்கிரியைகள் நடைபெற்று மு.ப. 10 மணிக்கு தகனக் கிரியைக்காக கனத்தை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

12, 6/1, மிலாகிரிய அவனியூ,
கொழும்பு - 4. தொ.பே. 0779850370

தகவல்:
திருமதி சுகந்தி சிறிகாந்தராசா

(103157)

## பிரம்மஸ்ரீ
## சிவகணேசசர்மா ஸ்கந்தசிவரூபசர்மா



அராலி மத்தி, வட்டுக்கோட்டையை பிறப்பிடமாகவும் நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட சிவகணேசசர்மா ஸ்கந்த சிவரூபசர்மா 08.09.2010 புதன்கிழமை அகால மாரணமானார்.

அன்னார் சிவசுப்பிரமணியக் குருக்கள் - மீனாட்சியம்மா, காலஞ்சென்ற சோமசுந்தர ஐயர் - நாகரத்தினம்மா ஆகியோரின் அன்புப் பேரனும், சிவகணேசசர்மா -அமுதாம்பாள் தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும் சிறிகோபாலக்குருக்கள் - நாகேஸ்வரி, சிவசுப்பிரமணியக்குருக்கள் - ஞானசவுந்தரியம்மா, ஜெகதாம்பாள், நடராஜக்குருக்கள் - விஜயாம்பாள் ஆகியோரின் பெறாமகனும் சிவகடாட்சசர்மா - சர்வேஸ்வரி, சிவானந்த சர்மா - ரமா, சிவலிங்கசர்மா - சுசிலா ஆகியோரின் மருமகனும் சியாமளாதேவி, சியாமளவதனா, காலஞ்சென்ற கணேசராஜசர்மா, திருமதி சியாமளரூபி முரளிதரசர்மா, சியாமள ஜனனி, தேவமனோகரி, ஜெயதுர்க்கா, திரிலோகநாயகி, பத்மலோஜினி, நிமல், வித்தியா ஆகியோரின் அன்புச் சகோதரனும் முரளிதரசர்மா, சிவசுதன், கேதாரணி, திவாரணி ஆகியோரின் மைத்துனனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.09.2010) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் நல்லூர் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் செம்மணி இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை, உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

75/10, செட்டித்தெரு, நல்லூர்.
தொ.பே. 0213217055

தகவல்:
சி.சிவகணேசசர்மா
(தந்தை)

# திறந்த பல்கலை கற்கை நெறிகள்

யாழ்ப்பாணம், செப். 10

இலங்கைதிறந்த பல்கலைக் கழகத்தின் சமூக கற்கைகள் துறையினரால் நடத்தப்படும் சமூக விஞ்ஞானத்தின் சான்றிதழ் கற்கை நெறி, இளைஞர் அபிவிருத்தியில் டிப்ளோமா, கலைமானி, அபிவிருத்தி கொள்கையில் முதுகலைமானி ஆகிய கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந் நிகழ்ச்சித் திட்டத்திற்கான விண்ணப்ப முடிவு நாள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமையாகும்.

இதற்கான விண்ணப்படிவங்களை யாழ்.பிராந்தியநிலையத்தில் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-ஐ)

* * *

யாழ்ப்பாணம், செப். 10

இலங்கைதிறந்த பல்கலைக்கழக யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தில் 2011 / 2012 ஆம் கல்வி ஆண்டுக்கான முயற்சியாண்மையும் சிறு வணிக முகாமைத்துவமும் சான்றிதழ்க் கற்கை நெறி (ESBM) ஆரம்பமாகவுள்ளது.


இக் கற்கைநெறிக்கான தகைமை, ஆகக் குறைந்தது கா.பொ.த. சாதாரண தரத்தில் இரு தடைவைகளுக்கு மேற்படாமல்பாடங்கள் சித்தியடைந்திருத்தல்வேண்டும்.

மாணவர்கள் இவற்றுக்குரியவிண்ணப்பப் படிவங்களை எதிர்வரும் 23 ஆம் திகதிக்கு முன் யாழ். பிராந்திய நிலையத்தில் பெற்றுக்கொள்ளலாம் என இணைப்பாளர் அறிவித்துள்ளார்.

(ஒ-ஐ)

# மரண அறிவித்தல்கள்

## Dr. N. கோபிகிருஸ்ணன் (கோபி)



யாழ்.திருநெல்வேலியைச் சேர்ந்த M.K.S. என அழைக்கப்படும் மு.க. சின்னையாவின் பேரனும் தற்போது கனடாவில் வசிக்கும் நல்லநாதன் - லிங்கவதி (ரதி) தம்பதியரின் அன்பு மகனுமாகிய Dr. கோபிகிருஸ்ணன் 03.09.2010 வெள்ளிக்கிழமை லண்டனில் காலமானார்.

இவர் கனடாவில் வசிக்கும் குணரட்ணம் - மங்களேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் சசிகுமாரியின் பாசமிகு கணவனும், அருண், அகில் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 13.09.2010 திங்கட்கிழமை லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும்ஏற்றுக் கொள்ளவும்.

'அஷ்டலக்சுமி வாசா'
புதிய செங்குந்தா வீதி, திருநெல்வேலி கிழக்கு,
தொ.பே. 0213219449, 077 6599748

தகவல்:
T.தருமசொரூபி,
M.கலைஞானசொரூபி,
A.லாலா, சி.சிறீரங்கநாதன்.

## அந்தோனிப்பிள்ளை யோசப் மேரியன்

(இளைப்பாறிய யாழ்.மாவட்ட முகாமையாளர், தேசிய வீடமைப்பு அதிகாரசபை)



இளவாலையைப் பிறப்பிடமாகவும் கொழும்பு, றாகமவை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை யோசப் மேரியன் நேற்று (09.09.2010) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை - சுவானப்பிள்ளை தம்பதியரின்சிரேஷ்ட புதல்வனும் காலஞ்சென்றவர்களான யோசப் - சிரோன்மணி தம்பதியரின் மருமகனும் தவமலரின் அன்புக் கணவரும் யுவனலீன், கிறிஸ்ரலீன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் காமினி ஜேம்ஸ், நிஹால் ஆகியோரின் மாமனாரும் கீத், கெவின், மெல்வின், பிரவீன் ஆகியோரின் அன்புப் பேரனும் பேர்னடேற், ஸ்ரனிஸ்லோஸ், வண. சகோதரர் மைக்கல், லோரன்ஸ் ரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் அன்னலீலா, சோதிமலர், நவமலர், ஆனந்தராஸ், ஆனந்ததாஸ், சுகந்தலீலா, வசந்தலீலா, இம்மானுவேல், ராஜேஷ், புளோரன்ஸ் ஆகியோரின் மைத்துனரும் மக்னஸ், இராஜசிங்கம், கனகசுந்தரி, புவனேஸ்வரி, மல்லிகா, செல்வநாதன், வில்லியம் ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை கொழும்பு, பொரளை A.F. ரேமன்ட் மலர்ச்சாலையில் நாளை (11.09.2010) சனிக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் இடம்பெற்று, பூதவுடல் கனத்தை பொது மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

103 A, அலபிற்றிவல,
றாகம. T.P.: 0112956504

(103167)

தகவல்:
தவமலர் (மனைவி).

# மரண அறிவித்தல்

## வேலுப்பிள்ளை கந்தசாமி (சங்கானை)

சங்கானை, அராலி வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை கந்தசாமி (இளைப்பாறிய பண்டகசாலைக் காப்பாளர், காணி அபிவிருத்தித் திணைக்களம், முன்னாள் வர்த்தகர், ரவி ஸ்ரோர்ஸ், சங்கானை) நேற்று (09.09.2010) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - சின்னப்பிள்ளை தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும் காலஞ்சென்றவர்களான நாகமுத்து - நாகம்மா தம்பதியரின் அருமை மருமகனும் தவமணியின் அன்புக் கணவரும் ரவீந்திரன் (தொழிற்துறைத் திணைக் களம், பிரதேச செயலகம், சாவகச்சேரி), மதிவதனி, குலேந்திரன், சந்திரவதனி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சாந்தாதேவி, திருட்செல்வம் (தொழிற்துறைத்திணைக்களம், பிரதேச செயலகம், சங்கானை), லங்கேஸ்வரி (ஆசிரியை, வட்டு. மத்திய கல்லூரி), ஜகதாசன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ் சென்ற திருமதி இளையதம்பி செல்லம்மா மற்றும் காலஞ்சென்றவர்களான முன்னாள் பிரபல வர்த்தகர் கள் ( A.T.V & Sons, சங்கானை), தம்பிராசா, கனகசபாபதி, கார்த்திகேசு ஆகியோரின் , அருமைச் சகோதரனும், சோமசுந்தரம், பரமசாமி, கனகரத்தினம், சீவரத்தினம், தம்பிஐயா, சோதிலிங்கம், தியாகராஜா ஆகியோரின் அன்பு மைத்துனரும், தாரணி, ரகுபரன், கஜலக்சன், அபிநயா, அஸ்வானி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.09.2010) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சங்கானை இந்து கரைச்சி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

அராலி வீதி, சங்கானை.

தகவல்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நெதர்லாந்து அரசின் நிதியுதவியுடன் யாழ்.கோட்டையின் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கோட்டையின் சேதமடைந்த பகுதிகளைப் புனரமைப்புச் செய்வதில் தொழிலாளர்கள் ஈடுபட்டிருப்பதையும் பற்றைகள் வளர்ந்துள்ள பகுதிகள் துப்புரவு செய்யப்படுவதையும் படங்களில் காணலாம்.

*(படங்கள்: நந்தன்)*

# பொதுமக்களிடமிருந்து பனம் விதைகளை கொள்வனவு செய்யும் பனை அபிவிருத்திச் சபை

யாழ்ப்பாணம்,செப்.10

யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவுள்ள பனம் விதை நடுகைத் திட்டத்துக்குத் தேவையான பனம் விதைகளை யாழ்ப்பாண மக்களிடமிருந்து கொள்வனவு செய்யும் நடவடிக்கையில் பனை அபிவிருத்திச் சபை ஈடுபட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் ஐந்து இலட்சம் பனம் விதை நடுகைத்திட்டத்தை பனை அபிவிருத்திச்சபை விரைவில் மேற்கொள்ளவுள்ளது. அதன் முதற்கட்ட நடவடிக்கையாகவே பனம் விதை சேகரிக்கு நடவடிக்கையில் அது ஈடுபட்டுள்ளது.

மக்கள் நடமாட முடியாத நிலையில் இராணுவத்தினரின் பாவனையிலுள்ள பனைமரக் காணிகளிலிருந்து பெறப்படும் விதைகளைச் சேகரிப்பதற்கு பனை அபிவிருத்திச்சபை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பாக யாழ். மாவட்ட இராணுவத் தளபதியின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் அதற்கான ஒழுங்குகளை மேற்கொள்வதற்கு இராணுவம் சம்மதம் தெரிவித்துள்ளதாகவும் தெரியவருகிறது.

இதேவேளை-

பனம்விதை நடுகைத் திட்டத்தை வடக்கு மற்றும் கிழக்குப் பகுதியில் மேற்கொள்வதற்காக பனை அபிவிருத்திச் சபையின் தலைமையகத்தால் மாவட்டக் காரியாலயங்களிலுள்ள பிராந்திய இணைப்பாளர்களுக்கு தமது பிராந்தியங்களில் பனம் விதை நடுவதற்கு நிலங்களை அடையாளப்படுத்தித் தருமாறும் கேட்கப்பட்டுள்ளது.

அத்துடன் யாழ். மாவட்டத்திலுள்ள பாடசாலை அதிபர்களின் சம்மதத்துடன் அந்தந்தப் பாடசாலை விளையாட்டு மைதானங்களைச் சூழவும் பனம்விதை நடுகை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-14-322)

## முறிந்த கைக்கு உடன் சிகிச்சை பெறாமையால் மணிக்கட்டுடன் இழக்கும் நிலையில் இளைஞர்

தென்மராட்சி,செப்.10

கை எலும்பு உடைவுக்குப் புக்கைகட்டி குணமாக்க முயன்ற இளைஞருக்கு விரல்களுடன் கையினை இழக்கும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது.

இச்சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது கடந்த 3ஆம் திகதி வெள்ளிக்கிழமை வடமராட்சி கிழக்கு மணற்காட்டுப் பகுதியில் வீடு நிர்மாணிக்கும் வேலையில் ஈடுபட்ட இளைஞர் சாரமரம் முறிந்து வீழ்ந்தபோது கையின் மணிக்கட்டுப் பகுதி உடைந்தது. இதனை குணப்படுத்த அந்த இளைஞர் புக்கை கட்டினார்.

வேதனை அதிகரிக்கவே அதனைத் தாங்க முடியாமல் கடந்த செவ்வாய்க்கிழமை அந்த இளைஞர் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு அவருக்கு எக்ஸ்ரே எடுத்துப் பார்த்தபோது மணிக்கட்டுப் பகுதி எலும்பு உடைந்ததுடன் புக்கை கட்டிய இடத்தில் புண் ஏற்பட்டிருந்தது. உடனடியாக வைத்தியசாலையில் பி.ஓ.பி. போடப்பட்டது.

தென்மராட்சிப் பிரதேச மக்களின் வைத்திய தேவைகளுக்கான சகல வசதிகளும் சாவகச்சேரி வைத்தியசாலையில் செய்யப்பட்டுள்ளதால் பாதிக்கப்படும் மக்கள் மூடநம்பிக்கைகளை கைவிட்டு உடனடியாக வைத்தியசாலைக்கு வந்து சிகிச்சை பெறுமாறு வைத்திய வட்டாரங்கள் அறிவுறுத்தியுள்ளன.




## கோப்பாய் பிரதேச ஒருங்கிணைப்புக் கூட்டம்

கோப்பாய்,செப்.10

கோப்பாய் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்ரின் அலன்ரின் தலைமையில் கோப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது என கோப்பாய் பிரதேச செயலர் சி.ஏ.மோகன்றாஸ் அறிவித்துள்ளார். அத்துடன் 11.30 மணிக்கு விவசாயக் குழுக் கூட்டமும் நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

(த-72)

## வர்த்தகர்களுக்கான கலந்துரையாடல் இன்று

யாழ்ப்பாணம்,செப்.10

யாழ். நகரப் பகுதியிலுள்ள வர்த்தக நிலைய உரிமையாளர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.45 மணிக்கு யாழ். வணிகர் கழக கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளதாக அதன் தலைவர் ஆர்.ஜெயசேகரம் அறிவித்துள்ளார்.

யாழ்.வணிகர்கழகப் பிரதிநிதிகள், யாழ்.மாநகர சபை முதல்வர் திருமதி யோ. பற்குணராஜா, யாழ். பொலிஸ் நிலைய அதிகாரிகள் கலந்துகொள்ளும் இந்தக் கலந்துரையாடலில் யாழ். நகரப் பகுதியிலுள்ள வர்த்தக நிலைய உரிமையாளர்கள் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

நகரப் பகுதியிலுள்ள வர்த்தக நிலையங்களின் செயற்பாடுகளுக்கு இடையூறாகவுள்ள குப்பைகள், வடிகால்களில் தேங்கும் கழிவுகளை அகற்றுவது தொடர்பாகவும் இந்தக் கலந்துரையாடலில் ஆராயப்படவுள்ளது என வணிகர் கழகத் தலைவர் மேலும் தெரிவித்தார்.

(த-14-07-322)

## வறிய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்

கோப்பாய்,செப்.10

கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவில் சமுர்த்தி சமூக அபிவிருத்தி மன்றத்தில் வறிய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 21ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆவரங்கால் சிவசக்தி மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளதாகக் கோப்பாய் பிரதேச செயலர் சி.ஏ.மோகன்றாஸ் தெரிவித்துள்ளார்.

(த-72)

## விநாயகமூர்த்தி எம்.பி. பாடசாலைக்கு நிதியுதவி

தென்மராட்சி,செப்.10

சரசாலை சரஸ்வதி வித்தியாலயத்திற்கு யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தி இரண்டு லட்சம் நிதியுதவி வழங்கியுள்ளார்.

வித்தியாலத்திற்கு தேவையான போட்டோப் பிரதி இயந்திரம் மற்றும் தளபாடங்கள் கொள்வனவு செய்வதற்குமே அவரின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியில் இருந்து ஒதுக்கீடு செய்துள்ளதாக வித்தியாலய அதிபர் திருமதி ஜெ. தேவேஸ்வரன் தெரிவித்தார். (த-207)

## அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றியவருக்கு அபராதம்

தென்மராட்சி,செப்.10

அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றி வந்த வாகனத்தின் சாரதிக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 30 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை விசாரித்த பதில் நீதிவான் செ. கணபதிப்பிள்ளை சாரதிக்கு 30 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து அபராதத் தொகை செலுத்தத் தவறின் ஒரு மாத கால சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்குமாறும் உத்தரவிட்டார். (த-6-207)

## பறிமுதல் செய்யப்பட்ட மணல் ஏல விற்பனை

தென்மராட்சி,செப்.10

சாவகச்சேரி நீதிமன்றினால் பறிமுதல் செய்யப்பட்ட பாலியாற்று மணல், நாகர்கோயில் மணல், கச்சாய் மணல், கிரவல் ஆகியவை பகிரங்க ஏலத்தில் விற்கப்படவுள்ளன.

எதிர்வரும் 20ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு நீதிமன்ற வளாகத்தில் ஏலவிற்பனை இடம்பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

அனுமதிப் பத்திரமின்றி வாகனங்களில் மணல் ஏற்றிவரப்பட்டபோது பொலிஸாரால் பிடிக்கப்பட்டு சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர் செய்தபோது பறிமுதல் செய்யப்பட்ட மணலே பழைய நீதிமன்ற வளாகத்தில் குவிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (த-6-207)

## போதியளவு ஏற்பாடுகள் எதுவுமில்லாமல் ஒரேநாளில் நடந்த நேர்முகத் தேர்வு

### கலந்து கொண்ட வெளிமாவட்ட மாணவர் விசனம்

யாழ்ப்பாணம்,செப்.10

யாழ்.தாதியர் கல்லூரியில் நேற்று நடைபெற்ற நேர்முகப் பரீட்சைக்கு வடமாகாணத்தின் 5 மாவட்டங்களிலிருந்தும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்துகொண்டனர். இவ்வாறு பெரும் எண்ணிக்கையான மாணவருக்கு ஒரே நாளில் நேர்முகப் பரீட்சை என அறிவிக்கப்பட்ட போதும் அதற்கு உரிய ஏற்பாடுகள் அங்கு மேற்கொள்ளப்படவில்லையென இதற்குச் சமுகமளித்தோர் விசனம் தெரிவித்தனர்.

சுகாதார அமைச்சின் அறிவுறுத்தலுக்கு அமைய யாழ்.போதனா வைத்தியசாலையில் மாணவத் தாதியர்களை ஆள்சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டு அதற்கான நேர்முகப் பரீட்சைக்கு வடமாகாணத்திலுள்ள யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய ஐந்து மாவட்டங்களிலிருந்தும் விண்ணப்பிக்கப்பட்ட மாணவர்கள் அழைக்கப்பட்டிருந்தனர்.

இதில் பெருமளவான மாணவர்கள் வருகைதரவுள்ளதை அறிந்து அதற்குரிய ஒழுங்குகள் செய்யப்படாமையால் மாணவர்கள் நீண்டநேரம் வரிசையில் காத்திருந்ததை அவதானிக்க முடிந்தது.

இதனால் இந்த நேர்முகப் பரீட்சைக்கென வெளிமாவட்டங்களிலிருந்து வருகை தந்தவர்கள் மற்றும் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த மாணவர்களிலும் சிலர் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றாமல் திரும்புவதாக விசனம் தெரிவித்தனர்.

மேற்படி நேர்முகப் பரீட்சைக்கு 2006, 2007,2008 ஆம் ஆண்டுகளில் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய நான்கு பாடத் துறைகளையும் சேர்ந்த தகுதியான மாணவர்கள் அழைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-16)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி

# நிறுவுநர் நினைவுச் சிறப்பிதழ் -10.09.2010



## வலயக் கல்விப் பணிப்பாளர் உள்ளத்திலிருந்து

*அன்னசத்திரம் ஆயிரம் வைத்தலும்*
*ஆலயம்பதினாயிரம் நாட்டலும்*
*அன்னயாவிலும் புண்ணியம் கோடி*
*ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தலாம்.*

என்ற பாரதியாரின் திருவாக்கிற்கமை வாக கல்வியினை தானமாக வழங்கிய பெருமகன்தான் மழவராயர் கந்தையா அவர்கள். இன்று காணப்படும் இலவச கல்வி முறையினை முதன் முதல் உலகுக்கு எடுத்துக் காட்டிய ஒரு புண்ணியவான் ஆவார். ஏழைக்கும் கல்வி வேண்டும் என்ற நோக்கில் உயர்ந்த பெரும் பணியாக ஆரம்பமாகிய பாடசாலை இன்று யாழ். மண்ணில் தலை சிறந்த கல்லூரியாக உருவெடுத்து விளங்குகின்றது.

இப்பாடசாலையில் இருந்து வெளிவரும் மாணவர்கள் ஸ்தாபகரின் எண்ணம், சொல், செயல்களை பிரதிபலிக்கும் வகையில் புகழ்பரப்பி வருகின்றனர். இத்தகைய பெருமகனாரை என்றென்றும் நினைவு கூர்ந்து போற்றி வாழ்த்துவதில் மகிழ்வடைவதோடு மேலும் புகழ் பரப்ப எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கி றேன்.

திருமதி அ.வேதநாயகம்
வலயக்கல்விப்பணிப்பாளர் யாழ்ப்பாணம்,
தலைவர் (பதவி வழி)
ஸ்ரீசோமஸ்கந்தக் கல்லூரி தர்மகர்த்தாசபை.

## அறிவையும் ஆன்மீகத்தையும் வளர்த்தவர்


ஆலயம் பதினாயிரம் நாட்டுதலை விட ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவூட்டுதல் மேலானது என மகாகவி பாரதியார் கூறிய கூற்றுக்கிணங்க, அமரர் மழவராயர் கந்தையா வள்ளலின் எண்ணத்தில் உதித்து இன்று பல பிள்ளைகளுக்கு கல்வியறிவூட்டிக் கொண்டிருக்கிறது புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி. அருகிலேயே ஆன்மீக உணர்வூட்டும் சிவனாலயம் ஒன்றையும் அமைத்து அச்சூழலில் அறிவையும் ஆன்மீகத்தை யும் வளர்க்க அரும்பணியாற்றியிருக்கிறார் அமரர். ஏறக்குறைய எண்ணூறு மாணவர் கள் கல்வி பயின்று கொண்டிருக்கும் இப்பாடசாலை புத்தூர் பகுதிக்கு ஒரு வரமாகவே திகழ்கின்றது எனலாம். தற் போது 'இசுறு' பாடசாலையாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் இப் பாடசாலை அதன்மூலம் மேன்மேலும் பல சிறப்புக் களைப் பெற்றுக் கொள்ளும் என்பது திண்ணம். இத் தருணத்தில் இப்பாடசாலை மேன்மேலும் வளர்ச்சி பெற வேண்டும் என்றும், இங்கு கல்வி பயிலும் அனைத்துத் தரப்பு மாணவர்களுக்கும் சிறந்த சேவையை வழங்கி சமூகத்தில் உயர்ந்த நிலையை அடைய வேண்டும் எனவும் மனநிறைவோடு வாழ்த்துகிறேன்.

சீ.ஏ.மோகன்றாஸ்
பிரதேச செயலர்,வலி-கிழக்கு, கோப்பாய்.

## வலி.கிழக்கு பிரதேசசபை செயலாளரின் எண்ணத்துளிகள்

எமது பிரதேச சபைப் பிரிவில் மிகப்பெரிய சிறந்த கல்லூரியாக இன்று மிளிர்ந்து வரும் இப்பாடசாலையை தனி ஒருவராக நின்று நிறுவச் செய்து பிரதேச மக்களுக்கு பெருந்தொண்டாற்றிய பெருமகனார் கொடையாக மழவராயர் கந்தையா அவர்களின் சிறந்த கல்விப் பணி, ஆன்மீகப்பணி என்பன இன்றைய சமுதாயத்துக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். அந்த வகையில் அவரின் அறநெறிப் பணிகள் தொடர்ந்து வருடாவருடம் நினைவு கூரப்படுவதும் சமூகத்துக்கு உதவி புரியும் நற்குடிமக்களை உருவாக்க உந்து சக்தியாக அமையும் என்பது எனது எண்ணம். அவ்வாறான தன்னலமற்ற பெரும் கொடைவள்ளலின் நினைவுச் சிறப்பிதழிற்கு செய்தி வழங்குவதில் பெரு மகிழ்வடைகின்றேன்.

த.நடராஜா
செயலாளர், வலி.கிழக்குப் பிரதேசசபை,
புத்தூர்.



நிறுவுநர் அமரர்

## மழவராயர் கந்தையா வள்ளலார்

**தந்தை :** *சிற்றம்பலம் மணியகாரன் மகன் மழவராயர்.*
**தாய் :** *சின்னையா மகள் சின்னத்தங்கச்சிப்பிள்ளை.*
**தோற்றம் :** *10.09.1887(விபவ ஆண்டு ஆவணிமாதம் 25 ஆம் நாள், ரோகினி நட்சத்திரம்.)*
**மறைவு :** *15.05.1936 (வைகாசி மாதம் பூர்வ பக்கப் பஞ்சமி)*

சிறப்பான பணிகள்

- ★ விசாலாட்சி சமேத விசுவநாதப் பெருமானுக்கு ஆலயம் அமைத்தமை (புத்தூர் சிவன் கோயில்)
- ★ சைவத்தையும் தமிழையும் காக்கவெனச் சைவச் சூழலில் ஆங்கிலக் கல்வியை வழங்கும் பாடசாலையாக புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரியை 1931இல் நிறுவி இலவசக் கல்வி அளித்தமை.
- ★ பசிப்பிணி போக்க அன்னசத்திரம் அமைத்தமை.
- ★ நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் அமைப்பதற்காக கதிர்வேலாயுத சுவாமி மடாலயத்துடன் கூடிய நிலத்தை நல்லூரில் வழங்கியமை.

## சிரம் தாழ்த்தி வாழ்த்துகிறோம்

'அன்னயாவினும் கோடி புண்ணியம் ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்!'

என்பதற்கமைய ஒரு ஏழைக்கு எழுத்தறிவித்தல் சிறந்த பணியாகும். அத்தகைய பணியினை காலச்சூழலுக்கு ஏற்ற வகையில் அமரர் அவர்கள் இக்கல்லூரியினை அமைத்து இலவசக் கல்வியை வழங்கியதோடு அதனை சிறப்புற அமைவதற்கு ஏதுவாக தர்மசாதனங் களையும் வழங்கியுள்ளார். இக்கலைக் கூடமானது நல்ல ஒழுக்க விழுமியங்களையும் சமய அறிவையும் சிறந்த கல்வி அறிவையும் வழங்கும் கலைக்கூடமாகத் திகழ வேண்டுமெனவும் வள்ளலாரின் அபிலாஷைகளுக் கமைய விருட்சமாகி மென்மேலும் வளர்ச்சியடைய வேண்டும் என வள்ளலாரின் ஜனன தினமாகிய இன் றைய நன்நாளில் சிறப்புற அமைய வாழ்த்துவதில் பெருமையடைகின்றோம்.

பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினரும்
பழைய மாணவர் சங்கமும்.

**இச்சிறப்பிதழ் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம் அவர்களின் ஆசியுடன் வெளியிடப்படுகிறது.**

## ஆலயப் பிரதம குருவின் அருளாசிச் செய்தி

ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரியின் நிறுவுநர் நினைவு நாளில் மழவராயர் கந்தையா அவர்கள் ஆன்மா லயிக்கும் இடமான ஆலயத்தையும் அன்னசத்திரத்தையும் அறிவுப் பசியைப் போக்க இந்த கல்லூரியையும் நிறுவிய அன்னாரின் எண்ணம் நிறைவேறவும் மேலும் நல் வளர்ச்சியடையவும் எல்லாம் வல்ல ஸ்ரீ சோமஸ்கந்தப் பெருமானை திரிகரண சுத்தியுடன் பிரார்த்தித்தும் ஆசி கூறுகிறேன்.

சாமி.சோமசுந்தரக் குருக்கள்,
சிவன் தேவஸ்தானம், புத்தூர்.

## தானம் வழங்கவென்று பிறந்த பெரியவர்

தானங்களில் சிறந்தது வித்தியாதானம். தானம் வழங்குவதற்கென்று இப்பிரதேசத்தில் தோன்றிய பெருமகன் மழவராயர் கந்தையா அவர்கள் ஆவார். இப் பிரதேச மாணவர்களுக்கு கல்வியை கொடையாக அளித்ததில் பெருவள்ளல்.

கல்வியை வழங்குவதற்கென்றே அறநெறிச் செயற்பாட்டின் அடிப்படை யில் தொடக்கப்பட்ட இப்பாடசாலை இன்று யாழ்ப்பாணத்தின் தலைசிறந்த கல்லூரியாக உருவெடுத்துள்ளது.

அந்த வகையில் ஸ்தாபகரின் சிறந்த எண்ணங்கள் ஈடேறி இப்பிரதேச மாணவர்களின் வளர்ச்சிக்கு பேருதவி புரிந்து வரும் இக்கல்லூரி நிறுவுநரை இன்றைய நன்நாளில் நினைவு கூர்ந்து போற்றி வாழ்த்துவதில் பெருமையடை கிறேன்.

சி.சித்திரவடிவேல்,
கோட்டக்கல்விப் பணிப்பாளர்,
கோப்பாய்.

## தியாகச் செம்மலின் ஜனனதினம்

''அரிது அரிது மானிடராதல் அரிது'' என்ற வாக்கிற்கமைய மனிதராகப் பிறந்த ஒவ்வொருவரும் மதிக்கப்படுவதுமில்லை, பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படுவதுமில்லை. அதற்கமைய அமரர் மழவராயர் கந்தையா அவர்கள் சமகால விழுமியங்களுக்கும் சிந்தனைகளுக்கும் ஏற்ப தீர்க்க தரிசனமாய் விளங்கி அறிவுப் பசி தீர்க்க பாடசாலையையும் ஆன்மீக ஈடேற்றத்துக்கு ஏற்ப கோயிலையும் பசிப்பிணி நீக்க அன்னசத்திரத்தினையும் அமைத்தது மட்டுமன்றி அவை தொடர்ந்து இடையூறு இன்றி நடைபெற ஏற்ற வழிமுறைகளை ஏற்படுத்தியிருந்தார். அத்தகைய தியாக செம்மலான அமரர் அவர்களது ஜனன தினமாகிய இன்றைய நாளினை நினைவு கூர்வதோடு அவர் பணி மேலும் வளர்ச்சி யடைய வேண்டும் எனவும் அவரது வழி சென்று அனைவரும் பயன் பெற வேண்டுமென இன்றைய நினைவு நாளை நினைவு கூர்ந்து வாழ்த்துகிறேன்.

இ.இராஜமகேந்திரன்,
கல்லூரி முதல்வர்,
யா/ புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி.

## *புத்தூர் இந்து ஆரம்ப பாடசாலை அதிபரின் உள்ளப் பகிர்வு*

''ஒரு பாடசாலையை உருவாக்குவது ஆயிரம் சிறைச்சாலைகளை மூடுவதற்குச் சமம்'' என்ற காந்தியின் தத்துவத்திற்கு அமைய வலி.கிழக்கு பிரதேச மக்களின் கல்வித் தேவைகளை நிறைவு செய்ய வேண்டி யா/ புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரியினை உருவாக்கினார் மனிதருள் மாணிக்கமான பெருமகனார் மழவராயர் கந்தையா.

இன்றை நன்நாளில் அப்பெருமகனை நிறைவு கூர்வது எமது சமூகத்தில் பல்வேறு புரையோடிப் போன தீமைகளை களைவதற்கு ஏதுவாக அமையும். அவர் உருவாக்கிய பாடசாலை இன்று இரு பெரும் பாடசாலைகளாக உருவாகி உள்ளன. அப்பாட சாலைகளை மேலும் வளர்த்தெடுப்பதே மழவராயர் கந்தையாருக்கு நாம் செய்யும் நன்றிக் கடனாக அமையும்.

இ.கோகுல்ராகவன்
பாடசாலை முதல்வர்

(சி/570768)

**பிரசுர அனுசரணையாளர்கள்**

**குளோபல் நெட்**
தொழில்நுட்பவியல் நிறுவகம்
பருத்தித்துறை வீதி, புத்தூர்.

**சங்கீதன் சேவிஸ் நிலையம் அன்ட் கீதன் ரயர் வேக்ஸ்**
பருத்தித்துறை வீதி, புத்தூர்.

இலங்கையில் முதல் முதல் இலவச கல்வியைத் தந்த அமரர் உயர்திரு மழவராயர் கந்தையா அவர்களை நினைவு கூரும்
**சூர்யா மருந்தகம்**
பருத்தித்துறை வீதி,புத்தூர்.

**பிள்ளையார் களஞ்சியம்**
யாழ்.பருத்தித்துறை வீதி,
சிறுப்பிட்டி
தொ.பே- 021-4591873

**சாயி நவீன் ஹோட்டல் அன் கூல்பார் V.S மல்ரிசென்ரர்**
பருத்தித்துறை வீதி, புத்தூர்.
021 3218986, 077350037

**LYRA NET COM**
Point Petro Road,
Avarankal.

**சபேஸ் ரேடர்ஸ்**
விவசாய இரசாயனம் அன்
கால்நடை தீவனம்
விற்பனையாளர்
பருத்தித்துறை வீதி, புத்தூர்.

**விதுரன் மோட்டேர்ஸ் அன் ஹாட்வெயர் SVN ரேடர்ஸ்,**
யாழ்.பருத்தித்துறை வீதி,
ஆவரங்கால் சந்தி.
தொ.பே-021 3007970

**செல்வா சைக்கிள் அன் ஹாட்வெயர்ஸ்**
யாழ்.பருத்தித்துறை வீதி,
ஆவரங்கால்.

**ரவி ஸ்ரோர்ஸ்**
பருத்தித்துறை வீதி,
புத்தூர் சந்தி.

**வலி. கிழக்கு வடபகுதி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்**
அச்சுவேலி.

**பவானி களஞ்சியம்**
இராஜ வீதி,
நீர்வேலி, கரந்தன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



லிஸ்வின் இன்வெஸ்ற்மன்ட் லிமிட்டெட் லீசிங் கம்பனியின் கிளை நேற்று யாழ்.ஸ்ரான்லி வீதியில் திறந்து வைக்கப்பட்ட போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.
இதில் விருந்தினர்கள் வரவேற்கப்படுவதை முதற்படத்திலும்,புதிய கிளையை பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட மத்திய வங்கியின் சிரேஸ்ட வங்கியாளர் தயா முதுகுமாரண நாடாவெட்டித் திறந்து வைப்பதை இரண்டாவது படத்திலும், வடபிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் காமினி டி சில்வா, லீசிங் கம்பனிப் பணிப்பாளர் பஜிர ஆகியோர் மங்கள விளக்கேற்றுவதை மூன்றாவது, நான்காவது படங்களிலும்,
ஒய்வு பெற்ற பொலிஸ் அதிகாரி மீரிஸ் குணரத்ன உரையாற்றுவதையும், நிகழ்வில் கலந்து கொண்டோரையும் இறுதி இரு படங்களிலும் காணலாம்.
(படங்கள்: சுகந்தன்)

# ஜனநாயக ரீதியான பணிகளைச் செய்ய முடியவில்லை; எல்லாம் அரசியல் மயமாகியுள்ளதே இதற்குக் காரணம்

## லண்டன் நியூஹாம் உதவி மேயர் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம்,செப்.10



ஜனநாயகத்தைப் பிரதிபலிக்கும் நல்ல சில காரியங்களைச் செய்ய முடியாத அளவுக்கு இங்கு எல்லாம் அரசியலாகிவிட்டது. அந்த நிலைமை மாற வேண்டும் என லண்டன் தொழிற் கட்சியின் நியூஹாம் மாநகர சபை உதவி மேயர் டி.போல் சத்தியநேசன் தெரிவித்தார்.

யாழ்.மாநகர சபைக்கு வருகை தந்த போல் சத்தியநேசனுக்கு யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தலைமையில் யாழ்.மாநகரசபை நேற்று புதன்கிழமை வரவேற்பு வழங்கியது. இதில் கலந்து கொண்டு பேசிய உதவி மேயர் போல் சத்தியநேசன் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

புலம் பெயர்ந்த மக்களால் நன்மையும் செய்ய முடியும். தீமையும் செய்ய முடியும். இன்று உங்களை நடுத்தெருவில் விட்டதே இந்தப் புலம் பெயர்ந்தவர்கள்தான்.

மாநகரசபை மக்களின் பாதுகாப்பு, வாழ்க்கைத்தரம் இரண்டையும் பாதுகாக்க வேண்டும். 30 வருட யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவர்களது அத்தியாவசியத் தேவைகளான சுகாதாரம் மற்றும் வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும். இன்று எல்லாமுமே அரசியலுக்குள் அடங்கிவிட்டது.

ஜனநாயகத்தைப் பிரதிபலிக்கும் நல்ல சில காரியங்களைச் செய்ய முடியாத அளவுக்கு எல்லாமே அரசியலாகிவிட்டது. இந்த நிலைமாற வேண்டும். அரசியல்வாதிகளும் உத்தியோகத்தர்களும் சேரும் போது தான் சேவைகள் சிறப்பாக அமையும்.

புலம்பெயர்ந்தவர்கள் இங்கே முதலீடுகளைச் செய்து அபிவிருத்திக்கு உதவக் கூடிய தருணம் இது. அவர்கள் இங்கே கிடைக்கும் ஓய்வூதியத்தை எடுத்துக் கொள்வதில் அக்கறை காட்டுவது போல் இங்குள்ளவர்களின் நலனில் அக்கறை காண்பிப்பதில்லை. இங்கே மடிந்த மக்களின் இரத்தத்தில் தான் அவர்கள் அங்கு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்ற நிச்சயமான உண்மையை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

யாழ்.மாநகரசபை சில கோரிக்கைகளை விடுத்துள்ளது. மாநகரசபைக்கான கட்டடம் அமைப்பதற்கும் உதவி கோரியுள்ளது. பிரித்தானியர்களைப் பொறுத்தவரை மக்களின் தேவைகளை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்பதே தவிர கட்டடங்களை அமைக்க வேண்டும் என்பதல்ல. வெளிநாடுகளில் இது குறித்த கோரிக்கைகளை முன்வையுங்கள். அதற்காக முடிந்த உதவிகளை நானும் செய்யத் தயாராக உள்ளேன். யாழ்ப்பாணத்தில் இன்று தேவை ஒரு தொலை நோக்குப் பார்வையுடன் நகரைக் கட்டியெழுப்பும் செயற்பாடுகளே. இதை ஆராய்ந்து அணுகினால் அது வெற்றியளிக்கும். வருடத்திற்கு ஒரு தடவை ஒரு தொழிலதிபரையோ, விஞ்ஞானியையோ அழைத்து அவர்களின் ஆலோசனைகளைப் பெற வேண் டும். யாழ்ப்பாணம் மாநகரசபை என்றில்லாமல் யாழ்.மாவட்டத்தில் பரந்துபட்ட அபிவிருத்திக்காக ஒரு சபை ஒன்றை உருவாக்கி அதனூடாக மீன்பிடி, தொழில் நுட்பம், கைத்தொழில் போன்றவற்றை ஏற்படுத்த வேண்டும். லண்டனில் ஒவ்வொரு பகுதியிலும் இது போன்ற அமைப்புக்களை உருவாக்கி அதன் மூலம் அபிவிருத்திகள் முன்னெடுக்கப்படுகின்றன - என்றார்.

யாழ்.மாநகர முதல்வர் திருமதி பற்குணராஜா, ஆணையாளர் மு.செ.சரவணபவ, செயலாளர் இ.இரத்தினசிங்கம் உட்பட யாழ்.மாநகரசபை உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள் நகரின் தேவை குறித்து இங்கு எடுத்துரைத்தனர். (த-7)

## பண்ணை வீதி அகலிப்புப் பணியை மேலும் விஸ்தரிப்பதற்குத் திட்டம்

யாழ்ப்பாணம்,செப்.10

யாழ்ப்பாணத்தையும் தீவகத்தையும் இணைக்கும் பண்ணை வீதியின் அகலிப்புப் பணிகளை மேலும் சில கிலோ மீற்றர்கள் தூரம் விஸ்தரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகாரசபை வட்டாரங்கள் 'உதயனுக்குத்' தெரிவித்தன.

பண்ணை வீதியை அகலமாக்கும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இதற்காக வீதியின் இரு பக்கமும் பாதுகாப்பான சிமெந்துச் சுவர்களை அமைக்கும் பணிகள் இடம்பெறுகின்றன. இந்த அகலிப்புப் பணிகளைப் பண்ணைப் பாலத்திலிருந்து 10 கிலோமீற்றர் தூரம் வரை மேற்கொள்வதற்கே முதலில் திட்டமிடப்பட்டிருந்தது. எனினும் தற்போது அந்தப் பணிகளை மேலும் சில கிலோ மீற்றர் தூரத்துக்கு விஸ்தரிப்பதற்கென ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகார சபை வட்டாரங்கள் தெரிவித்தன. (த-26)

## வண்ணை வரதராஜப் பெருமாள் பெருந்திருவிழா இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம்,செப்.10

யாழ்.வண்ணை வெங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலயத்தின் வருடாந்த பெருந் திருவிழா இன்று வெள்ளிக்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 16 ஆம் திகதி வியாழக்கிழமை இரவு சப்பரத் திருவிழாவும், 18 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.45 மணிக்கு வசந்த மண்டபப் பூசை நடை பெற்று , மு.ப 10.45 மணிக்கு தேர்த்திரு விழாவும், மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு வசந்த மண்டபப் பூசை நடை பெற்று 9 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும்.

திருவிழாக் காலங்களில் காலை 9 மணிக்கு காலை சந்திப் பூசையும், 9.30 மணிக்கு ஸ்தம்ப பூசையும், மு.ப 10.15 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் நடைபெறும்.

மாலைத் திருவிழாவில் பி.ப 4.15 மணிக்கு சாயரட்டைப் பூசையும், 4.30 மணிக்கு இரண்டாம் காலப் பூசையும், மாலை 5 மணிக்கு ஸ்தம்பப் பூசையும், 6 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் நடைபெறும். (த-204)




## இன்றுனக்குக் கொடியேற்றம்

வண்ணை வெங்கடேசா எம் வல்வினை போக்கியே
வாழ்வருள வேண்டும் நீ, இன்றுனக்குக் கொடியேற்றம்
கண்ணை யிமைகாப்பதுபோல் காத்தருள்வாய் ஐயா!
காவல் தெய்வம் நீயே! ஏன் இந்தத் தாமதம்?
புண்ணில் வேல் நுழைந்தாற் போல் பரிதவிக்கின்றோம்
பூமியிலே அமைதி வர இன்னருளைப் பொழிந்திடுவாய்
மண்ணையுண்டவாயானே மாதவனே கேசவனே
மாலவனே நின்மலர்த்தாள் சரணம்! சரணம்!!

கவிமணி இராசையா ஸ்ரீதரன்

யாழ்.வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தான மஹோற்சவப் பெருவிழா இன்று (10.09.2010) வெள்ளிக்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. அதனையொட்டி இக்கவிதை இங்கு பிரசுரமாகிறது.

## சாட்டி சிந்தாத்திரை அன்னை பெருவிழா

யாழ்ப்பாணம்,செப்.10

சாட்டி சிந்தாத்திரை அன்னை திருவிழா இவ்வருடமும் சிறப்பாக நடைபெறவுள்ளது.

நவ நாள்கள் நேற்று வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின. ஒன்பது நாள்கள் நடைபெறும் வழிபாடுகள் மாலை 5 மணிக்கு செபமாலையுடன் ஆரம்பமாகும். 18 ஆம் திகதி முதலாவது திருநாள் திருப்பலி காலை 5.30 மணிக்கும், இரண்டாம் திருப்பலி காலை 7 மணிக்கும் அனுராதபுரம், யாழ்.ஆயர்களின் தலைமையில் நடைபெறும். (த)

## தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் பெயர் மாற்றம்

யாழ்ப்பாணம்,செப்.10

யாழ்.மாவட்ட தனியார் பஸ் உரிமையாளர் நலன்புரிச் சங்கம் என்ற பெயரில் இதுவரை காலமும் இயங்கிவந்த மினிபஸ் சங்கம் கடந்த 7 ஆம் திகதி தொடக்கம் யாழ்.பிராந்திய பஸ் உரிமையாளர்களின் சம்மேளனம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக இலங்கைத் தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரட்ண அறிவித்துள்ளார். (த-14)

## இறுவட்டு வெளியீடு

யாழ்ப்பாணம்,செப்.10

வதிரி உல்லியனொல்லை கண்ணகை அம்மன் ஆலயத் திருவிழா நாள்களில் தமிழருவி த.சிவகுமாரன் ஆற்றிய சொற்பொழிவுகள் அடங்கிய இறுவட்டு வெளியீடு நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை மாலை 4 மணிக்கு ஆலய மண்ட பத்தில் நடைபெறும்.

கரவெட்டிப் பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன் தலைமையில் இந்த நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் கலந்து கொண்டு இறுவட்டை வெளியிட்டு வைப்பார். இவ்விழாவில் சிறப்பு விருந்தினராகப் பருத்தித்துறை பிரதேச செயலர் எஸ்.வரதீஸ்வரனும் கலந்து கொள்வார். (த)

## நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

யாழ்ப்பாணம்,செப்.10

நல்லைக்கந்தன் ஆலயப் பெருந்திருவிழாவையொட்டி இளங்கலைஞர் மன்றமும் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானமும் இணைந்து துர்க்கா மணிமண்டபத்தில் நடத்தும் இசையரங்கில் இன்று மாலை 6.30 மணிக்கு யாழ்ப்பாண நாட்டார் வழக்கியற்கழகம் வழங்கும் 'வள்ளி திருமணம்' இசை நாடகம் இடம்பெறும்.

மேலும் சங்கீதபூஷணம் பொன் சுபாஷ்சந்திரனின் பாட்டுக்கச்சேரி இடம்பெறும். என்.செல்வச்சந்திரன் கீபோட்டும் அ.ஜெயராமன் வயலினும் எஸ்.துரைராசா மிருதங்கமும் என்.மாதவன் கெஞ்சிராவும் சதா வேல்மாறன் தபேலாவும், எஸ்.செந்தூரன் முகர்சிங்கும் வாசிப்பர். (201)

## விவசாய நுகர்ச்சிச் சமாசம் ஊடாக கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கோதுமைமா

யாழ்ப்பாணம்,செப்.10

யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் ஊடாக பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கோதுமை மா விநியோகிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கே.அருந்தவநாதன் தெரிவித்தார்.

சங்கங்கள் தமக்குத் தேவையான கோதுமைமாவை சமாசத்தின் ஊடாகத் திருகோணமலை பிறிமா நிறுவனத்துக்கு நேரடியாகச் சென்று பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அவர் கூறினார்.

கோதுமை மாவைச் சங்கங்கள் நேரடியாகப் பிறிமா நிறுவனத்திலிருந்து பெற்றுக் கொள்வதன் மூலம் நுகர்வோருக்குக் குறைந்த விலையில் அதனை விநியோகிக்க முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (த-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெகா கொம்ப்யூட்டர் கல்வி புலமைப்பரிசில்

## A/L பரீட்சைகளின் பின்

September **12** ஞாயிறு பரீட்சை

Collect Your Free Admission Card

கடந்த 10ஆண்டுகளாக தகவல் தொழில்நுட்பக் கல்விக்காக இலவச புலமைப்பரிசில் பரீட்சையை நடத்தி பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் பயன்பெற்ற ஏசியனின் மெகா புலமைப்பரிசில் பரீட்சை இவ்வாண்டும் நடைபெறுகின்றது.

**யார் பங்குபற்றலாம்**

இம்முறை க.பொ.த. உயர்தர பரீட்சை எழுதிய மாணவர்கள், உள்நாட்டு வெளிநாட்டு உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளை எதிர்பார்த்திருப்போர், பல்கலைக் கழக மாணவர்கள், அரச தனியார் அலுவலர்கள் மற்றும் கொம்ப்யூட்டர் துறையில் ஆர்வமுடையோர் அனைவரும் இத்திட்டத்தில் கலந்து கொள்ளலாம்.

**உள்நாட்டு வெளிநாட்டு அங்கீகாரம்**

இப்புலமைப்பரிசிலில் வழங்கப்படும் கொம்ப்யூட்டர் பாடநெறிகள் அனைத்தும் மூன்றாம் நிலை தொழிற்கல்வி அமைச்சு ஆணைக்குழுவில் பதியப்பட்டதும் ISO 9001 : 2000 சர்வதேச தர அங்கீகாரமும் பெற்றவை.

**இலவச அனுமதிகள்**

இலவச அனுமதிகளை யாழ். நகர், நெல்லியடி, சாவகச்சேரி சிஎஸ்சி - ஏசியன் பயிற்சி நிலையங்களிலும் மற்றும் 12.09.2010 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிமுதல் பரீட்சை நிலையங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்.

## புலமைப்பரிசிலில் வழங்கப்படும் பாடநெறிகள்

Tally Accounting | Office Automation | Computer Application | PC Professional Digital Pre-Press (DTP) | Video Production | Cartoon Animation | Advanced JAVA Programming | Hardware & Networking | 2D & 3D Modeling | Graphic Design | Web Animation | Macromedia Application | Web Design & Development | Web Programming & Information Technology | Software Engineering Honours Diploma in Computer Application | Master Diploma in Multimedia

**பரீட்சை நிலையங்கள்**

யாழ்.நகரில் : யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி,
நெல்லியடியில் : நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்
சாவகச்சேரியில் : சாவகச்சேரி டிரிபேக் கல்லூரி

ISO 9001 : 2000 Certified Institution

விபரங்கள் மற்றும் இலவச பரீட்சை அனுமதிகள் கீழ்க்கண்ட நிலையங்களில்

CSC-ASIAN COMPUTER EDUCATION

2G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P : 021-222 5677
கொடிகாமம் வீதி, நெல்லியடி. T.P : 021-2262399
239, 1ம் மாடி, கண்டி வீதி, சாவகச்சேரி. T.P : 021-2270267


# 6 ஆம் ஆண்டு ஆற்றாமையின் நினைவஞ்சலி



மனம்மகிழ 1940.07.27

மனம்நெகிழ 2004.08.18

## அமரர் பொன்.நடேசன்
(இளைப்பாறிய அதிபர்)

திதி: திருதியை (10.09.2010)

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்ததனால்
வானுறையும் தெய்வமாகினீர்"

எங்கள் கண்கண்ட தெய்வமே!
ஐந்தாம் ஆண்டு நிறைவில் திருமணத்தை நிச்சயித்தாய்!
நிச்சயித்த மகனின் திருமணத்தை நிறைவேற்றிவைத்தாய்!
இருண்டுவிட்ட எங்கள் வாழ்வில் ஒளியை ஏற்றினாய்!
உங்களைப் பார்ப்பதற்கு உருகுகின்றோம் என்னாளும்.

"மகன், எனது அப்பா ஒரு கனவான்
கற்பனையிலும் காணமுடியாத ஒரு தந்தை என்பான்"
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி. என்றும் நினைவில்: குடும்பத்தினர்.

(சி/570769)

# 3 ஆம் ஆண்டு நினைவு தினம்



மலர்வு 24.02.1945

உதிர்வு 13.09.2007

## திருமதி இராஜேஸ்வரி மகாலிங்கம்

திதி: துதியை (10.09.2010)

அன்னையே!
எங்கள் இதயத்தில் உறையும் தெய்வமே!
உங்களுடன் வாழ்ந்த காலங்கள்
எங்களுக்குக் குதூகலமான இன்பநாள்கள்
இன்று ஆற நிழலுமில்லை
ஆறுதலுக்கு வார்த்தைகளுமில்லை.
மூன்றாண்டுகள் சென்றாலும் ஆறாதம்மா
உங்கள் நினைவுகள்
உங்கள் ஆத்மா இறைவன்தாள் பெறுக
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

C.P.M. லேன்,
நவாலி தெற்கு, மானிப்பாய். உங்கள் நினைவில் குடும்பத்தினர்.

(103132)

## கலந்துரையாடல்

யாழ்.கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் தரம் 5 இல் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் நாளை மு.ப. 10 மணிக்கு யாழ். கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் இடம்பெறும் என வலயக் கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

## திருமதி பவளராணி தனபாலச்சந்திரன் (சோதி)

திதி: துதியை (10.09.2010)



தோற்றம் 14.08.1949

மறைவு 23.08.2009

பாசமிகு அன்னையாய்
அன்பை ஊட்டி அறிவைப்புகட்டி
அரவணைத்த எம் அம்மாவே!
ஒரு கூட்டுக்கிளிகளாக
ஒன்றாக கூடியிருந்த நாம்
நீங்கள் எம்மை விட்டுப்பிரிந்த பின்
தனிமரமாகிய மாயம் தான் என்னவோ?
எத்தனை ஆயிரம் உறவுகள் தான் இருந்தென்ன?
அம்மா என்றழைக்க நீங்கள்
இல்லையே எம்மருகில்
ஆண்டு பல போனாலும்
அழியாது உங்கள் நினைவு
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

26A, அன்னசத்திர லேன்,
கந்தர்மடம், யாழ்ப்பாணம். (103133) குடும்பத்தினர்.

# நினைவஞ்சலி

முதலாம் ஆண்டு நிறைவு | மூன்றாம் ஆண்டு நிறைவு





**அமரர் சரவணமுத்து சுப்பிரமணியம்**
தோற்றம் 04.06.1928 மறைவு 22.08.2009

**அமரர் சுப்பிரமணியம் தேவிகாராணி**
தோற்றம் 29.04.1938 மறைவு 14.02.2007

திதி: துதியை (10.09.2010)

குருக்கள் கிணற்றடி விநாயகன் திருவடியை மறவாது போற்றி வாழ்ந்து,
குடும்பத்தார் மேன்மைக்காய் அயராது உழைத்திருந்து
கூடிப்பழகிய அனைவர் நெஞ்சிலும் அன்பினால் இடம்பிடித்து
ஈடில்லாப் பாசத்தை எம்மீது பொழிந்த உங்கள் இருவரையும்
என்றும் மறவோம்.

கல்வளை,
சண்டிலிப்பாய். (102790) மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவுகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலையற்ற பட்டதாரிகள் பேரணி

# கூட்டமைப்பு எம்.பிக்கள் ஆஜராகாததால் வழக்கு ஒத்திவைப்பு; இருவருக்குப் பிணை

மட்டக்களப்பு, செப். 10

கடந்த மாதம் மட்டக்களப்பு மாவட்டத்தில் வேலையற்ற பட்டதாரிகள் மேற்கொண்ட பாரிய ஆர்ப்பாட்டப் பேரணியால் நகரின் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்தப்பட்டது எனக் குற்றஞ் சாட்டப்பட்டுமட்டக்களப்பு பொலிஸாரினால் தொடரப்பட்ட வழக்கில் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சமுகமளிக்காத காரணத்தினால் வழக்கு எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 12ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்றில் நீதிவான் இராமக்கமலன் முன்னிலையில் இவ்வழக்கு விசாரணைக்கென எடுத்துக் கொள்ளப்பட்ட போது பிரதிவாதிகளான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான பா.அரியநேத்திரன், பொ.செல்வராசா மற்றும் சி.யோகேஸ்வரன் ஆகியோர் மன்றத்துக்கு சமுகமளிக்கவில்லை. இதனால் வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

கடந்த மாதம் வேலையற்ற பட்டதாரி மாணவர்கள் கல்லடியில் இருந்து மட்டக்களப்பு நகர் வரை நடத்திய ஆர்ப்பாட்டப் பேரணிக்கு பொலிஸாரின் அனுமதி பெறப்படவில்லை என்றும், பொது மக்களின் போக்கு வரத்துக்குப் பெரும் இடையூறை அது விளைவித்தது என்றும் தெரிவித்து காத்தான்குடி பொலிஸாரால் மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கில் பிரதிவாதிகளாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பா.அரியநேத்திரன், பொ.செல்வராசா, சி.யோகேஸ்வரன் மற்றும் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் இரா.துரைரெட்ணம் மற்றும் கிழக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகள் சங்கத் தலைவர் ஆகியோர் குறிப்பிடப்பட்டிருந்தனர்.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் இவர்களுக்கான வழக்கு விசாரணை எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தபோது கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இரா.துரைரெட்ணம் கிழக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகள் சங்கத் தலைவர் ஆகியோர் மன்றுக்கு சமுகமளித்திருந்தனர்.

வழக்கை விசாரணைக்கென எடுத்துக் கொண்ட நீதிவான் ஏனைய மூன்று பிரதிவாதிகள் சமுகமளிக்காத காரணத்தினால் வழக்கை ஒத்திவைத்தார். சமுகமளித்திருந்த இருவரையும் இரண்டு சரீரப்பிணையிலும், 25,000ரூபா காசுப் பிணையிலும் செல்ல அனுமதித்து வழக்கை ஒக்டோபர் 12 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

எனினும் இது தொடர்பில் கருத்து தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன், இந்த விடயம் குறித்துத் தங்களுக்கு எதுவித அறிவித்தலும் நீதிமன்றத்தினால் வழங்கப்படவில்லை எனத் தெரிவித்தார். (ளி)

# விளையாட்டுத்துறைக்கு ஆசிரியர்கள் நியமனம்

கொழும்பு, செப்.10

திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்த எட்டுப் பேருக்கு இன்று விளையாட்டு ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்படுகின்றன.

கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் எம்.எஸ்.சுபைர் தலைமையில் மாகாண சபையில் காலை 10.00 மணிக்கு இவ் வைபவம் இடம் பெறும்.

இதற்கு சிறப்பு விருந்தினராக கிழக்கு மாகாண ஆளுநர் அட்மிரல் மொஹான் விஜேவிக்ரம கலந்து கொள்கிறார். (ளி)

# ஆயுர்வேத வைத்தியசாலை இல்லாமையால் தோப்பூர் பிரதேச மக்கள் பெரும் சிரமம்

சேருவில, செப்.10

பதினெட்டாயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் வாழும் பிரதேசமாகிய தோப்பூர் பகுதியில் ஆயுர்வேத வைத்தியசாலை ஒன்று இல்லாமையால் மக்கள் பெரும் சிரமங்களைஎதிர்கொள்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தோப்பூர், செல்வநகர், பாலத்தோப்பூர்,ஆசாத்நகர், பள்ளிக்குடியிருப்பு போன்ற பகுதிகள் உட்பட மேலும் பல பகுதிகளைச் சேர்ந்த மக்கள் ஆயுர்வேத சிகிச்சை பெறுவதற்கு 12 கிலோ மீற்றர்களுக்கு அப்பாலுள்ள சேருவில பகுதிக்குச் சென்றே சிகிச்சை பெற வேண்டியுள்ளது.

இதனால் இங்குள்ள தமிழ், முஸ்லிம்கள் வீண் செலவினங்களையும், அசௌகரியங்களையும் எதிர்கொள்கின்றனர் எனவும் அறியவருகிறது. மேலும் ஆயிரக் கணக்கில் பணம் செலவிட்டு தனியார் வைத்தியர்களிடம் செல்ல வேண்டிய நிலையும் தமக்கு ஏற்படுகிறது எனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

பெரும்பாலானோர் ஆயுர்வேத மருந்துகளில் அதிகம் நாட்டம் உடைய வர்கள். இவ்வாறான நிலைமைகளைக் கருத்தில் கொண்டு இப்பிரதேசவாசிகள் ஆயுர்வேத வைத்திய வசதிகளைப் பெறும் பொருட்டு தோப்பூரில் ஆயுர்வேத வைத்தியசாலை ஒன்றை அமைத்துத் தருமாறு அதிகாரிகளிடம் மக்கள் வேண்டுகோள் விடுக்கின் றனர். (ளி)




# களுவாஞ்சிக்குடி பிரதான வீதியில் வாகன விபத்து; ஒருவர் படுகாயம்

மட்டக்களப்பு, செப்.10

களுவாஞ்சிக்குடி பிரதான வீதியில் கடந்த திங்கட்கிழமை நண்பகல் 12.24 மணியளவில் நடைபெற்ற வாகனவிபத்தில் ஒருவர் படுகாயமடைந்து களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு நோக்கிச் சென்றுகொண்டிருந்த பஸ், முன்னால் சென்றுகொண்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தரின் (வயது- 42) மோட்டார் சைக்கிளின் பின்புறத்தில் மோதிய தாலேயே இந்த விபத்து ஏற்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் களுவாஞ்சிக்குடிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். இந்த விபத்தில் படுகாயமடைந்த பொலிஸ் உத்தியோகத்தர் களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையில் விபத்துப் பிரிவில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ளி)

# ஹந்தானை ஜனவசம பெருந்தோட்டக் கம்பனி இன்னமும் ஊழியர் சேமலாபநிதிகளை மத்தியவங்கிக்கு அனுப்பவில்லை

## வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை; தொழிலாளர் சீற்றம்

நுவரெலியா, செப். 10

கண்டி ஹந்தானை ஜனவசம பெருந்தோட்ட நிர்வாகம் உறுதியளித்தபடி தமது ஊழியர் சேமலாப நிதிகளை இன்னமும் மத்திய வங்கிக்கு அனுப்பவில்லை எனத் தொழிலாளர்தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி நிர்வாகத்திற்குட்பட்ட தோட்டங்களில் வேலைசெய்துவந்த ஆயிரக் கணக்கான தொழிலாளர்களிடம் அறவிடப் பட்ட ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் போன்றவை பல வருடங்களாக மத்திய வங்கிக்கு அனுப்பப்படவில்லை.

அத்துடன் மேற்படி நிர்வாகத்திற்குட்பட்ட பல தோட்டங்களில் பெரும் முறைகேடுகளும், நிர்வாகச் சீர்கேடுகளும் இடம் பெற்றுவருகின்றன என்றும் தொழிலாளர்கள் முறையிட்டு வந்தனர்.

இவ்விடயத்திற்கு பெரும் எதிர்ப்புத் தெரிவித்துவந்த தொழிலாளர்கள் அவ்வப் போது போராட்டங்களையும் நடத்தி வந்தனர்.

ஈற்றில் தொழிலாளர்கள் தமக்குச் சேரவேண்டி கொடுப்பனவுகளை உடனடியாக வாங்குமாறுகோரி தோட்ட நிர்வாகத்திற்கு எதிராக கடந்த சில மாதங்களுக்கு முன்னர் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தையும் நடத்தினர்.

நிலைமை கட்டுமீறிச் சென்றது. அரசுத் தரப்பு உட்பட்ட பலவேறு தரப்புகளும், ஊடகங்களும் இவ்விடயத்தைக் கூர்ந்து அவதானிக்கத் தொடங்கின.

இந்தநிலையில் நிலைமையைச் சமாளிக்கமுடியாத நிர்வாகம் தொழிலாளர்களுடன் பேச்சுகளை நடத்தியது.

கொழும்பிலிருக்கும் தோட்ட நிர்வாகத் திற்குச் சொந்தமான கட்டடம் ஒன்றை விற்று தொழிலாளர்களுக்குச் சேர வேண்டிய அத்தனை கொடுப்பனவுகளையும் மத்திய வங்கிக்கு அனுப்புவதாக அந்தப் பேச்சில் இணக்கம் காணப்பட்டது.

எனினும், இதுவரை தொழிலாளர்களுக்குச் சேரவேண்டிய கொடுப்பனவுகள் மத்திய வங்கிக்கு அனுப்பிவைக்கப் பட வில்லை என ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸின் உபதலைவரும், மத்திய மாகாண சபை உறுப்பினருமான முரளி ரகுநாதன் தெரிவித்தார்.

எனவே, இவ்விவகாரம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் மத்தியவங்கி ஆளுநர் ஆகியோரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

அத்துடன் இவ்விடயத்தில் துரித நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தி கடந்த செவ்வாய்க்கிழமை அவர்களுக்கு மகஜர் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது - என்று முரளி ரகுநாதன் தெரிவித்தார். (ளி)




# கேகாலை மாவட்டத்தில் தேயிலைச் செய்கை 6093 ஹெக்டேயர் நிலப்பரப்பால் அதிகரிப்பு

கேகாலை, செப்.10

அரசின் மானியவிலை உரம் வழங்கல் திட்டத்தையடுத்து கேகாலை மாவட்டத்தில் தேயிலைச் செய்கை உயர்வடைந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதையடுத்து தேயிலைச்செய்கை நிலங்கள் சுமார் 6093 ஏக்கர் ஹெக்டேயரால் அதிகரிக்கப்பட்டுள்ளன என்றும் தெரிய வருகின்றது.

இம்மாவட்டத்தில் தற்போது 25 தேயிலை நாற்றுமேடை நிலையங்கள் இயங்கி வருகின்றன. மாவனல்லைப் பிரதேசத்திலுள்ள ஹிங்குல எனுமிடத்திலும் நிறுவனமொன்றால் நாற்றுமேடை நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த நாற்றுமேடைகளிலிருந்து 2009 ஆம் வருடத்தில் 7,33,630 தேயிலைக்கன்றுகள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

மாவட்டத்தில் இருபது தேயிலைத் தொழிற்சாலைகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. அத்துடன் தெரணியாகல, புளத்கொஹுபிட்டிய ஆகிய பிரதேசங்களில் அடுத்த வருடமளவில் மேலும் இரு தொழிற்சாலைகள் நிறுவப்படவுள்ளன.

தேயிலைச் சக்தி காப்புறுதித் திட்டத்தின் கீழ் இவ்வருடம் ஜூலை மாதம் வரை இருபது பேருக்கு 4,77,000 ஆயிரம் ரூபா நஷ்டஈடாக வழங்கப்பட்டுள்ளது - என மேலும் தெரிவிக்கப்பட்டது. (ளி)

# வீடுகள் கையளிப்பு

குருநாகல், செப்.10

'நமக்காக நாம்' வீட்டுத்திட்டத்தின் கீழ் குருநாகல் மாவட்டத்தில் படையினரின் குடும்பங்களுக்கு மேலும் 23 வீடுகள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் கடந்த ஞாயிற்றுக்கிழமை கையளிக்கப்பட்டுள் ளன.

குருநாகலில் படையினருக்காக மொத்தம் 700 வீடுகள் கைளிக்கப்படவுள்ளன. அவற்றில் ஒருதொகுதி வீடுகளே இவ்வாறு கையளிக்கப்பட்டுள்ளன. வீடொன்றின் பெறுமதி 25 லட்சம் ரூபாவாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ளி)

# நுவரெலியாவின் அபிவிருத்திக்கு நிதி

கொழும்பு, செப்.10

மலையக மக்களின் நலன்கருதி தொழிலாளர் தேசிய சங்கத்தின் பிரதித்தலைவரும் மத்தியமாகாணசபை உறுப்பினருமான உதயகுமார் நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்.

மத்திய மாகாணசபை உறுப்பினர் உதயகுமார் தனது பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து நுவரெலியா பிரதேச சபைக்கு உட்பட்ட தோட்டப் பகுதிகளின் அபவிருத்தித் திட்டங்களுக்கென ஒதுக்கப்பட்ட நிதியினை சம்பந்தப்பட்டவர்களுக்கு கையளிக்கும் நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் கொட்டகலையில் இடம்பெற்றது.

உதயகுமார் தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வில் தொழிலாளர் தேசிய சங்கத்தின் நுவரெலியா பிரதேச சபை உறுப்பினர்களும், தொழிலாளர் தேசிய சங்கத்தின் நுவரெலியா பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளின் முக்கியஸ்தர்களும், தோட்டக் கமிட்டித் தலைவர்களும், தோட்டத் தலைவர்களும் கலந்து கொண்டனர். (ளி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










9th, 10th, 11th, 15th September Half Page Ad

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சாவகச்சேரி கைத்தொழில் வணிகர்மன்றம்

ஒரு நாட்டின் வளர்ச்சியில் வர்த்தகத்துறை பெரும் பங்கு வகிக்கின்றது. வர்த்தகத் துறையானது இன்று நேற்றல்ல கிறிஸ்துவுக்கு முன்னைய காலங்களிலேயே இருந்து வந்துள்ளது. வணிகத் துறை அந்தக் காலத்தில் கடல் மார்க்கத்திலேயே இடம்பெற்றுள்ளதை இலக்கியங்களாலும் தொல்பொருள் ஆராய்ச்சிகளாலும் நிறுவப்பட்டுள்ளன. இந்த வணிகத்துறை வளர்ச்சியிலேயே பல்வேறு பண்பாடுகளைத் தமிழன் கண்டுணரவும் அவற்றில் மேன்மையானவற்றைக் கடைப்பிடித்து உயர் நாகரிகக் குழாமாக தமிழர் பேசப்படவும் உறுதுணை புரிந்தது. பிற்பட்ட காலத்தில் மேற்குலக எழுச்சிக்கு முக்கிய காரணியாக அமைந்ததும் இந்த வணிகத்துறையே. ஏன் இன்றும் கைத்தொழில் வணிக விருத்திகளே நாடுகளின் வல்லாதிக்க தன்மையை நிர்ணயித்து வருகின்றன என்பது வெளிப்படை.

சந்தைப்படுத்தல் உத்திகள் பெரிதும் வளர்ச்சி பெற்றுள்ள காலத்தில் நாம் வாழ்ந்து வருகின்றோம். சுப்பர் மார்க்கெற்றுகளும், ஹைபர் மார்க்கற்றுக்களும் பெருகியுள்ள இவ்வுலகிலே வசதிகள்(Direct mailing, Credit Cards )பல பல்கிப் பெருகியுள்ள இந்தச் சந்தர்ப்பத்திலேயே போட்டி சவாலுக்கு முகம் கொடுக்க வேண்டிய தேவை வருங்காலத்தில் எதிர்நோக்கப்பட வேண்டியதொன்றாகும்.

அவ்வாறான பல சோதனைகளுக்கு முகம் கொடுத்து எதிர்நீச்சல் போட்டு 30 வருடங்களாக ஆரம்பிக்கப்பட்ட நோக்கத்துடன் பல்வேறு நலத்திட்டங்களை மேற்கொண்டும் ஏனைய அமைப்புகளுக்கு உதாரணமாகத் திகழும் சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தின் சேவைகளையும் பணிகளையும் பார்ப்போம்.

சாவகச்சேரி சந்தை நகரின் மத்தியில் ஏனைய பிரதேசங்களுக்குச் செல்லக்கூடிய இடத்தில் அமைந்திருந்ததால் இங்கு வரும் உற்பத்தியாளர்கள் வியாபாரிகள் மற்றும் பொதுமக்களின் வருகை அதிகரித்துக் காணப்பட்டன. அந்த வேளையில் மக்களின் தேவைகருதி சந்தையை அண்டிய பகுதியில் ஒன்றொன்றாக உருவாகி நூற்றுக்கு மேற்பட்ட வர்த்தக நிலையங்கள் இயங்கி வந்தன.

மன்னார், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு மலையகம் போன்ற இடங்களில் இருந்து வரும் வியாபாரிகள் சாவகச்சேரி சந்தைக்குப் பொருள்களைக் கொண்டுவந்து விற்பனை செய்துவிட்டு யாழ்.மாவட்ட உற்பத்திப் பொருள்களை கொள்வளவு செய்து ஏனைய மாவட்டங்களுக்குக் குறிப்பாக தென்னிலங்கைப் பகுதிக்கு கொண்டு சென்றனர். அத்தனை பிரபல்யம் மிக்க சாவகச்சேரிச் சந்தையை அண்டிய பகுதியில் இயங்கிய வர்த்தக நிலையங்கள் தம்மிடையே போட்டி நிலையில் வணிகத்தில் ஈடுபட்டு வந்தனர். இதனால் பல வர்த்தகர்கள் வர்த்தகத்தில் பாரிய நஷ்டங்களை எதிர்நோக்கினர்.

இந்த நிலையில் நகர்ப் பகுதி வர்த்தகர்கள் ஒன்றிணைந்து சாவகச்சேரி வர்த்தகர் சங்கம் என்னும் அமைப்பினை 1978ஆம் ஆண்டு உருவாக்கினர். வணிகர்களின் ஒற்றுமையே வணிகத் துறையின் வளர்ச்சி என்னும் குறிக்கோளுடன் ஆரம்பிக்கப்பட்டது. வர்த்தக சங்கம் உருவாக்கிய வேளையில் நகரில் பிரபல்யம் மிக்க வணிகர்களின் எதிர்ப்புக் காணப்பட்ட போதிலும்அதனை சவாலாக ஏற்று திறம்பட செயற்பட்டு எதிர்ப்புத் தெரிவித்தவர்களையும் ஒன்றிணைத்து சங்கத்தின் வளர்ச்சிக்கு வித்திட்டவர்கள் வரிசையில் 'கைத்தறி நவரத்தினம், விமலாஸ் நவரத்தினம், சீலன் இராசதுரை போன்றோரின் அளப்பரிய பணியாகும் எனக் குறிப்பிடலாம்.

1977ஆம் ஆண்டு சாவக்சேரி நகரசபையினரால் நவீன சந்தை 80 கடை அறைகளுடன் திறக்கப்பட்ட போது சந்தைப் பகுதியில் மட்டும் 201 கடைகள் செயற்பட்டன. இவற்றுடன் புகையிரத நிலையச் சந்தியிலிருந்து வைத்தியசாலை வரையும் 400இற்கு மேற்பட்ட வணிக நிலையங்கள் அமைந்திருந்தன. வர்த்தக சங்கத்தின் பணிகளினால் மேலும் கச்சாய் வீதி, தனங்களப்பு வீதி, டச்சு வீதி போன்றவற்றிலும் வர்த்தக நிலையங்கள் உருவாகி சங்கத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாக அமைந்தன.




சங்கத்தின் வளர்ச்சியின் பயனாக சங்கத்திற்கு அலுவலகம் அவசியமென சங்க உறுப்பினர்களால் முன் வைக்கப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில் கு.தவராஜசிங்கம் தலைவராக இருந்த காலத்தில் சாவகச்சேரி வர்த்தக சங்கம் என இயங்கிவந்த சங்கத்தின் பெயர் 1990ஆம் ஆண்டு சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம் எனப் பெயர் மாற்றப்பட்டு புதிய அலுவலகமும் திறக்கப்பட்டது. அலுவலகத்திற்கான எழுதுநர், பணியாளர் ஆகியோர் நியமிக்கப்பட்டனர். 1990இல் எழுதுநராக நியமிக்கப்பட்ட திருமதி மகேஸ்வரி கீர்த்திநாதன் இன்றுவரை கடமையாற்றி மன்ற வளர்ச்சிக்கு பெரிதும் உறுதுணையாக இருந்து வருகிறார்.

(தொடரும்)

# சுண்ணாம்பு உற்பத்தி

தொகுப்பு: ஜயந்தன்

நாட்டில் சிமெந்து உற்பத்தி ஆரம்பிக்க முன்னர் கட்டடம் கட்டுவதற்கு சுண்ணாம்பு பயன்படுத்தப்பட்டு வந்தது. சுண்ணாம்பில் உள்ள பசைத் தன்மை வருடக் கணக்கில் கட்டடத்தினை தாங்கி வைத்திருக்கும். எமது நாட்டில் சுண்ணாம்பினால் கட்டப்பட்ட பல கட்டடங்கள் இன்றும் எம்மத்தியில் இருப்பதைக் காண முடியும்.

ஆரம்ப காலத்தில் கற்கள் சுண்ணாம்பு கலவையினால் கட்டப்பட்டு வந்தன. பின்னர் செங்கல் கட்டடங்களுக்கும் பயன்படுத்தப்பட்டது. ஒல்லாந்தர் காலத்தில் கட்டப்பட்ட கோட்டைகளும் சுண்ணாம்புக் கலவையினாலேயே கட்டப்பட்டதாக முன்னோர்களால் தெரிவிக்கப்பட்டது.

சுண்ணாம்பு கட்டட வேலைகளுக்கு மட்டுமல்ல நாட்டு மக்களால் வெற்றிலை சாப்பிடுவதற்கும் சுண்ணாம்பினை பயன்படுத்தி வருகின்றனர்.

நீண்டகாலமாக கட்டடங்களுக்கு சுண்ணாம்பு பயன்படுத்தப்பட்டு வருகிறது. காவி என்றும் மக்கள் பவுடர் சுண்ணாம்புடன் கலக்கப்பட்டு கட்டடங்களுக்கு வர்ணமாகப் பூசப்பட்டது. தற்போது இந்து ஆலயங்களின் மதில்களுக்கு சிவப்பு, வெள்ளை நிறங்களில் சுண்ணாம்பினை கரைத்து வர்ணந் தீட்டுகின்றனர்.

பெண்கள் நெற்றியில் அணியும் குங்குமத்துக்கும் சுண்ணாம்புப் பவுடர் கலக்கப்பட்டே தயாரிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடலில் உற்பத்தியாகும் சங்கு, சிப்பி போன்றவையே சுண்ணாம்பு உற்பத்திக்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் சாவகச்சேரியில் நீண்ட காலமாக சுண்ணாம்பு உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றது.

சுமார் 300 வருடங்களுக்கு முன்னர் தொடக்கம் சாவகச்சேரி லிகோரியார் கிராமம் அமைந்துள்ள கடலேரிக் கரையில் பெருமளவு சுண்ணாம்பு உற்பத்தி சூளைகள் வைக்கப்பட்டு செய்யப்பட்டன. பெருங்கடலில் உற்பத்தியாகி கரையொதுங்கும் சிப்பி மற்றும் சங்கு ஆகியவற்றை வாங்கி வந்து கரையோரத்தில் சூளை அமைத்து சுண்ணாம்பு உற்பத்தி செய்யப்பட்டது.

சிப்பி, சங்கு ஆகியவற்றை நிலத்தில் பரவி அதன்மேல் தென்னம் பொச்சு மட்டைகளை அடுக்கிவிட்டு தீ மூட்டி தீ கொழுந்து விட்டு எரியாமல் தடுப்பதற்காக கரையோரத்தில் ஒதுங்கும் தாளை, கடற்பாசி போன்றவற்றினால் மூடி விடுவார்கள். பொச்சு மட்டையில் வைக்கப்படும் நெருப்பு அனைத்துப் பொச்சுமட்டைகளிலும் பரவி ஏற்படும் வெப்பத்தினால் சிப்பிகளும் சங்குகளும் பூத்துப் போய் இருக்கும். அவ்விதம் பூத்துப் போயுள்ளவற்றை பாரிய பாத்திரமொன்றில் போட்டு நீர்விட்டு ஊறவைத்து சுண்ணாம்பு தயாரிக்கப்படுகிறது.

சாவகச்சேரி கடலேரிக் கரையில் தினமும் பெருமளவு சாதாளைகள் எனப்படும் கழிவுகள் கரையொதுங்குவதால் அதனைச் சேகரித்து சூளைக்குப் பயன்படுத்த முடிந்தால் சுண்ணாம்பு உற்பத்தியில் பத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் இத் தொழிலினை நிரந்தரமாக மேற்கொண்டு வந்தனர்.

இங்கு உற்பத்தி செய்யப்படும் சுண்ணாம்பு குடாநாட்டின் அனைத்துப் பகுதிகளுக்கும் கொண்டு செல்லப்பட்டதால் தொழிலை மேற்கொண்ட குடும்பங்கள் நிரந்தர வருமானத்தைப் பெற்றுவந்தனர்.

முன்னைய காலங்களில் சந்தைகளில் சுண்ணாம்பு விற்பனைக்கென தனியான பிரிவு இயங்கி வந்தது. வெற்றிலை விற்பனைப் பிரிவுகளில் சுண்ணாம்பு ரின்களில் மட்டும் விற்பனை செய்வதால் சுண்ணாம்பு தனியான பிரிவில் இயங்கி வந்தது. தற்போது சுண்ணாம்பு பைக்கற்றுக்களில் விற்பனைக்கென தயாரிக்கப்பட்டு வெற்றிலைக் கடைகளுக்கு வழங்கப்படுவதால் சுண்ணாம்பு தனி வியாபாரம் நிறுத்தப்பட்டுள்ளது.

1996 ஆம் ஆண்டின் பின்னர் கடல் வலயத் தடைச் சட்டம் உருவாக்கப்பட்டதால் கடற்றொழிலாளர்கள் மட்டுமல்ல கடற்கரையில் சுண்ணாம்பு சூளை வைத்தவர்களும் முழுமையாகப் பாதிக்கப்பட்டனர். அவர்கள் சூளை அமைக்க இடமில்லாததால் தமது தொழிலைக் கைவிட நேரிட்டது. மேலும் சுண்ணாம்பு உற்பத்திக்குத் தேவையான சிப்பி, சங்கு யாழ்.குடாநாட்டுக் கடற்கரைகளில் பெறுவதும் கஷ்டமானதால் பலர் கைவிட்டு நிரந்திர தொழிலின்றி கஷ்டப்பட்டனர்.

இந்த நிலையில் லிகோரியார் கிராமத்தைச் சேர்ந்த இருவர் மட்டும் தமது வெற்றுக் காணியில் சுகாதார திணைக்களத்தின் ஆலோசனைக்கமைய சூளைகள் அமைத்து தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர். இந்த சுண்ணாம்பு சூளைகளில் உற்பத்தி செய்யப்படும் சிப்பிகளும் தயாரிக்கப்படும் சுண்ணாம்பும் தென்மராட்சி பிரதேசம் மட்டுமல்ல ஏனைய பிரதேச வாசிகளால் கட்டடங்களுக்கு பூசுவதற்காக கொண்டு செல்லப்படுகின்றன.

அத்துடன் சுண்ணாம்பு பைக்கற்றுக்களில் அடைத்து விற்பனை செய்வோரும் இந்தச் சூளைகளில் சுண்ணாம்பைப் பெற்று சுயதொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

சுண்ணாம்பு உற்பத்தியில் ஈடுபடுவோர் கோவில் குடியிருப்பு கிராம அமைப்பின் மீள் எழுச்சித் திட்டத்தினரிடம் கடன்களைப் பெற்றுத் தமது தொழிலை விஸ்தரித்து வருகின்றனர்.

தற்போது குடாநாட்டு கடற்கரைகளில் சிப்பி, சங்கு போன்றவை பெருமளவில் சேகரிக்கப்படுவதால் அவற்றினைக் கொள்வனவு செய்து தொழிலை விஸ்தரிக்க முடிவதாகத் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் கடற்கரை பயன்படுத்த அனுமதிக்கப்பட்டதால் கடற்கரையில் மீண்டும் சுண்ணாம்புச் சூளைகள் உருவாகி வருகின்றன. இதனால் மீண்டும் லிகோரியார் கிராமத்தில் சுண்ணாம்பு உற்பத்தி அதிகரிக்குமென எதிர் பார்க்கலாம்.

தென்மராட்சி வலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

## தருபவர்: வித்யா

### மேடம்



கொடுத்த வாக்கை எப்பாடு பட்டாவது காப்பாற்றுவீர்கள். கடிதங்கள் மூலம் முக்கியமான தகவல்கள் வந்து சேரும். கடன் மிகுதிகளை வசூலிப்பதில் அக்கறை காட்டுவீர்கள். உறவினர்கள் மீதான கோபம் தீர்ந்து பாசம் அதிகரிக்கும். சக ஊழியர்கள் பாராட்டு கிட்டும். மதிப்பு, கௌரவம் பார்த்து சில காரியங்களைச் செய் வீர்கள்.

### இடபம்



சிலர் உங்களுக்கு உதவி செய்ய நினைத்தாலும் மற்றவர்கள் அதைத் தடுத்து விடுவர். அவசரச் செலவுகளைச் சமாளிக்க சிலரிடம் கடன் உதவி கேட்கலாம். அயலாரின் அன்புத் தொல்லைகளைச் சந்திக்கலாம். முக்கியமான சில விடயங்களில் தலையிடுவதா, வேண்டாமா என குழப்பம் அடையலாம். வீண் பயம் ஆள்கொள்ளும்.

### மிதுனம்



வியக்க வைக்கும் செய்திகளைக் கேட்கலாம். கடுமையான இழுபறிக்குப் பின்னரே முடியும் என நினைத்த காரியம் ஒன்று எளிதில் முடியும். சகஊழியர்களுடன் சேர்ந்து கூட்டாக மேற்கொண்ட முயற்சிகளில் நல்ல பலன் காணலாம். ஆதாயத்தை எதிர்பார்த்து செய்த வேலை ஒன்றில் எதுவும் கிடைக்காமல் போகலாம். வெளிவட்டார தொடர்பு விரிவடையும்.

### கடகம்



சில காரியங்கள் நீங்கள் நினைத்தபடி அனுகூலமாக முடிவுக்கு வரும். நீங்கள் எதிர்பாராத ஒருவர் திடீரென உதவி கேட்டு தர்ம சங்கடத்திற்கு உட்படுத்தலாம். வேலைப்பளுவை குறைக்க நினைத்தாலும் மற்றொரு வகையில் சுமை அதிகரிக்கும். முன் யோசனையுடன் செயற்படுவதன் மூலம் சில விஷயங்களில் ஆதாயம் பெறுவீர்கள்

### சிங்கம்



சிலர் உங்களை நம்பி ஒப்படைத்த வேலைகளை நிறைவேற்ற முடியாமல் சிரமங்களைச் சந்திக்கலாம். உடல் நலம் இல்லாமல் இருக்கும் உறவினர் ஒருவரை பார்க்க நேரிடலாம். அரசியல்வாதிகள் மேலிடத்தின் பாராட்டுக்களைப் பெறுவர். ஒவ்வாத பொருள்களை சாப்பிட்டு உடல் உபாதைகளுக்கு ஆள்படலாம். அலைச்சல், திரிச்சல் உண்டு.

### கன்னி



பழைய அனுபவங்களை பாடமாகக் கொண்டு புதிய விடயங்களில் இறங்குவீர்கள். உறவினர் ஒருவரின் கோரிக்கையை மறுக்காமல் நிறைவேற்றுவீர்கள். வீண் பழிகளைத் தவிர்க்க எதிலும் விழிப்புடன் செயற்பட வேண்டும். மற்றவர்கள் கண்டு பிடிக்காத வகையில் சில தவறுகளைச் செய்வீர்கள். கணவன் மனைவி இடையே பாசம் அதிகரிக்கும்.

### துலாம்



அன்றாட செலவுகளைக் குறைத்து சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள். மாமன், மைத்துனர்கள் உங்களிடம் பண உதவி கேட்கலாம். சிறிய வேலை ஒன்றுக்கு பல முறை அலைய நேரிடலாம். மருந்துப் பொருள்கள் வாங்கலாம். பல நாட்களாக நிறுத்தி வைத்த வேலை ஒன்றை இன்று அவசரமாக முடிக்க வேண்டியது நேரிடலாம்

### விருச்சிகம்



உங்களின் பெருமைகளைப் பற்றி மற்றவர்களிடம் சொல்வீர்கள். பார்ட்டி, கொண்டாட்டங்களில் நாட்டம் செல்லும். திட்டமிட்ட காரியம் ஒன்றை நாளை செய்யலாம் என தள்ளி வைப்பீர்கள். லாபகரமான பணவரவுகளைப் பெறலாம். மனைவி, குழந்தைகளின் நீண்ட நாள் விருப்பங்களை நிறைவேற்றி வைப்பீர்கள்.

### தனுசு



புதிய அனுபவங்களைப் பெற நேரிடலாம். பெண்கள் ஆடை, ஆபரணங்கள் வாங்கப் போட்ட திட்டம் தள்ளிப் போகலாம். பிரியமான சிலருக்காக சில உதவிகளைச் செய்வீர்கள். கடுமையான அலைச்சல் இருந்தாலும் அதற்கேற்ற ஆதாயத்தைப் பெறுவீர்கள். கணவன் மனைவி இடையே அன்யோன்யம் கூடும். உறவால் செலவு உண்டு.

### மகரம்



இறைவழிபாட்டில் நாட்டம் செல்லும். பொருளாதார நிலைமையில் திடீர் பற்றாக்குறை ஏற்படலாம். சொந்த பந்தங்களுடன் சேர்ந்து முக்கியமான வேலை ஒன்றைச் செய்வீர்கள். உங்களிடம் வாக்கு கொடுத்த ஒருவர் அதைக் காப்பாற்றாமல் இழுத்தடிக்கலாம். பெற்றோர் வழியில் கணிசமான பொருள் செலவுகளைச் சந்திக்கலாம். புதியவர் சந்திப்பு நிகழும்.

### கும்பம்



தொலைபேசி வழிச் செய்திகள் தொல்லை தருவதாக அமையும். நண்பர்களிடம் சிறு மனக்கசப்புகள் ஏற்படலாம். தொழில் ரீதியாக சிலரிடம் அவசர உதவி கேட்கலாம். மற்றவர்களை நம்பி எந்த வேலைகளையும் ஒப்படைக்க வேண்டாம். சொந்த விடயங்கள் பற்றி அயலாருடன் விவாதிப்பதைத் தவிர்க்கவும்.

### மீனம்



நீங்கள் தேடிச் சென்று பார்க்க நினைத்தவர் உங்களைத் தேடி வரலாம். ஆரோக்கியக் குறைவுகளை தவிர்க்க மருத்துவ சிகிச்சைகளை மேற்கொள்ளலாம். உடன் பிறப்புக்களின் மனம் கோணாமல் நடந்து கொள்வது நல்லது. ஆடை, அலங்காரப் பொருள்கள் வாங்கலாம். பல நாள் உழைப்பு ஒன்றுக்கு பலன் கிடைக்கும். தற்பெருமை கொள்வீர்கள்.


யாழ். இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம்
பெருமையுடன் வழங்கும்
அன்னையின் மடியில் 2010
(யாழ். இந்துக்கல்லூரி பழைய மாணவர்களின்
முதலாவது சர்வதேச மாநாடு)






காலம்
12.09.2010
ஞாயிற்றுக்கிழமை
நேரம்
காலை 9.00
இடம்
யாழ்.இந்துக்கல்லூரி
குமாரசுவாமி மண்டபம்
பதிவுகளுக்கு
யோகேஸ்
0773 946024
அருள்
0774 447646
தவா
0777 563213
பழைய மாணவர்கள் அனைவரையும்
அன்புடன் அழைக்கின்றோம்.
பழைய மாணவர் சங்கம்,
யாழ்.இந்துக்கல்லூரி,
யாழ்ப்பாணம்.
ஊடக அனுசரணை :
உதயன்


## கணனிப் பயிற்சி ஆரம்ப நிகழ்வு

யாழ்ப்பாணம்,செப்.10

பருத்தித்துறை பிரதேச செயலக விதாதா வளநிலையத்தினால் கரித்தாஸ் - கியூடெக் வளங்களுடன் இடம்பெறவுள்ள கணனிப் பயிற்சி நெறிக்கு பதிவு செய்த மாணவர்களை இம்மாதம் 14ஆம் திகதி செவ்வாய்க் கிழமை இதன் ஆரம்ப நிகழ்வு இடம்பெறவுள்ளதால் தவறாது பங்குபற்றி அவர்களுக்குரிய நேர அட்டவணைகளை பெற்றுக் கொள்ளுமாறு பருத்தித்துறை பிரதேச செயலர் கேட்டுள்ளார்.

(த-15)

## நெல்லியடி ம.வி. திங்களன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம்,செப்.10

நெல்லியடி மத்திய மகா வித்தியாலத்தில் 5ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சை வினாத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் கடந்த 4ஆம் திகதி முதல் நேற்று வியாழக்கிழமை வரை நடைபெற்றமையால் கற்றல் செயற்பாடுகளுக்காகப் பாடசாலை எதிர்வரும் திங்கட்கிழமை ஆரம்பமாகுமென பாடசாலை அதிபர் அறிவித்துள்ளார்.

(த)


**Personal Class**

Spoken English with Grammar கற்க விரும்பும் மாணவர்களுக்கு அரிய வாய்ப்பு. இதோ பிரபல ஆசிரியரால் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும். (அனுமதி மட்டுப்படுத்தப்பட்டவை முந்தவும்) தொடர்பு: ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. தொ.பே. 077 2764708 (103134)

**காணி விற்பனைக்கு**

இராசவீதியில் கோப்பாய் லைடன் பாமுக்கு முன்பாக இராசவீதியிலிருந்து இரண்டாவது காணி நிலப்பரப்பு 20½ விஸ்தீரணம் கொண்டது விற்பனைக்குள்ளது. தொடர்பு: 078 3032536 (103130)

**மணமகன் தேவை**

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 28 வயது, விசாகம் 2ஆம் பாத நட்சத்திரமும் B.Sc. (பெரதேனியா), 12 ¾பாவமும் உடைய (உயரம் 5' 4") ... பேசலாம்.

தொடர்புகளுக்கு: 0777488301 (103135)



ரன்வல பாதுகாப்பு
அடகுக்கு வெற்றி வாய்ப்பு
இலங்கையில் முதன்முறையாக
யூனியன் வங்கியின் மூலம்
உங்களுக்கு அறிமுகப்படுத்தும்
பெறுமதியான வெற்றி வாய்ப்பு
ஒவ்வொரு 03 மாதங்களுக்கு ஒரு முறை
உங்கள் அடகு நகைகளை இலவசமாக
மீட்டெடுக்க ஒரு சிறந்த வரம்...



ரன் வல
முழு அடகு / வட்டிப் பணத்தில்
ரூ. 100,000/- விலக்கழிப்பு
இரண்டாம் பரிசு:
முழு அடகு / வட்டிப் பணத்தில்
ரூ. 75,000/- விலக்கழிப்பு
மூன்றாம் பரிசு:
முழு அடகு / வட்டிப் பணத்தில்
ரூ. 50,000/- விலக்கழிப்பு
24 கரட் தங்கப் பவுனுக்கு
ரூ. 30,000/-
22 கரட் தங்கப் பவுனுக்கு
ரூ. 27,000/-
உயர் பாதுகாப்புடன்
மிகக் குறைந்த வட்டி
உடனடி சேவைகளுக்காக நாடு பூராகவும் பரந்துள்ள யூனியன் வங்கியின் 19 கிளைகளும் உங்களுக்காக திறந்திருக்கும்.
யூனியன் வங்கி
தொலைபேசி: 011 2370870


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நபிகள் நாயகம்

ஒரு சமயம் கிறிஸ்தவப் பாதிரியார் ஒருவர் நபிகள் நாயகத்தைப் பார்ப்பதற்கென வந்தார். அந்த நேரம் நபிகள் பள்ளிவாசலில் இருந்தார். அங்கே அவர்களிருவரும் உட்கார்ந்து நிறையநேரம் பேசிக்கொண்டிருந்தனர். பாதிரியாருக்கு ஜெபம் செய்ய வேண்டிய நேரம். உடனே அவர் 'நான் போய் ஜெபம் செய்துவிட்டு மறுபடியும் வந்து பார்க்கிறேன்' என்று கூறினார். அதற்கு நபிகள் 'இந்த வெயிலில் நீங்கள் வெளியே போய் வரவேண்டும் என்கிற அவசியம் இல்லையே... உங்கள் ஜெபத்தை இங்கேயே செய்யலாம்!' என்று கூறி ஒரு மூலையைக் காட்டினார்.

உடனே அந்தப் பாதிரியாரும் அவ்விடத்துக்குப் போய் தமது ஜெபத்தைச் சொன்னார்.

அந்த இருவருமே பெரியவர்கள்! அதனாலே எந்த வேறுபாடும் வருவதற்கு வாய்ப்பில்லை! இந்த மனோபாவம்தான் இன்று எங்களெல்லோருக்கும் தேவை.

ஒரு கூட்டத்தில் நபிகள் நாயகம் பேசிக் கொண்டிருந்தார். அந்தக் கூட்டத்தில் உட்கார்ந்திருந்த குடிகாரனொருவர் எழுந்து, நபிகள் நாயகத்தைப் பார்த்து 'எனக்கு இஸ்லாத்திலே இடம் உண்டா?' என்று கேட்டான். உடனே பக்கத்திலிருந்த ஒருவர் 'இஸ்லாத்தில் குடிகாரர்களுக்கு இடமில்லை!' என்றார். உடனே நபிகள் அப்படிச் சொன்னவனைப் பார்த்துக் கையமர்த்தி, அதன்பின் குடிகாரனைப் பார்த்து ' உனக்கு இஸ்லாத்தில் இடம் உண்டு!' என்றார். உடனே குடிகாரன் 'அப்படியா! அப்படியென்றால் நான் அதில் சேரலாமா!' என்றான். அதற்கு நபிகள் 'கட்டாயம் சேரலாம்! ஆனால் ஒரேயொரு நிபந்தனை! இறைவனைத் தொழும் போது மட்டும் நீ குடிக்கக் கூடாது!' என்றார். அவரும் 'சரி' என்று கூறிக்கொண்டார். கலிமா சொல்லப்பட்டது. முறைப்படி அவர் இஸ்லாத்தில் சேர்ந்தார். தொழுகைக்குப் போகும் போது மட்டும் குடிக்க முடியாத நிலைமை. சிறிது நாளாகிவிட்டது. அவரைப் பார்த்து, நபிகள் 'காலையிலே மட்டும் தொழுதால் போதாது! மாலையிலும் தொழ வேண்டும்!' என்றார். இவர் இருவேளையும் குடிக்காமல் தொழுகைக்குப் போனார். இவ்வாறு சிறிது சிறிதாக பகல், அந்திப் பொழுதுகளிலும் தொழுமாறு சொன்னார். அவரும் ஐந்து வேளையிலும் தொழுவதற்கு ஆரம்பித்து விட்டார். ஐந்து வேளையும் அவரால் குடிக்க முடியாமல் போய்விட்டது.

அதன்பிறகு ஒருநாள் அவர் தொழுகைக்குப் போய்க் கொண்டிருந்த போது அவரைப் பார்த்து நபிகள் 'இறைவனைத் தொழுவதற்குப் போகும் போது மட்டும் குடிக்காமலிருந்து பயனில்லை; தொழுதுவிட்டு வந்த பின்பும் குடிக்காமல் இருக்க வேண்டும்' என்றார். அதற்கும் 'சரி' என்று ஒத்துக் கொண்டார். கடைசியிலே அவருக்குக் குடிப்பதற்கே நேரமில்லாமல் போய்விட்டது!

எல்லா மதமும் இறைவனுடன் அடிக்கடி தொடர்பு வைத்துக் கொள்ள வேண்டுமெனக் கூறுவது எதற்காக? நல்ல பழக்க வழக்கங்கள் வரவேண்டும் என்பதற்காகத்தான். ஆனால் எம்மவர்களில் எத்தனை பேர் அதைச் சரியான அர்த்தத்தில் புரிந்து கொள்கின்றனர். என்னிடம் ஒருவர் சொன்னார் 'ஒரு பெரியவர் பிரசங்கம் செய்ததைத் தொடர்ந்து கேட்டுக் கொண்டிருந்தேன். குடிக்கிறது தப்பென்று அவர் தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டு இருந்தார். நான் விட்டு விட்டேன்! என்றார்' 'எதை விட்டாய்? குடிப்பதையா?' என்றேன். 'இல்லை! அவரது பிரசங்கத்தைக் கேட்பதை!' என்றார் அவர்.

தென்கச்சி - கோ.சுவாமிநாதன்.

# எளிமைக்கு ஏற்பட்ட வன்மை

எளிமை என்பது இறைமைக்குணம்
'எளி வந்த பிரானை' என்கிறார் சுந்தரர்.

ஓர் அமைச்சர் வருகிறார் என்றால் எத்தனை ஆடம்பரம்! கார் வரும். பொலிஸ் வரும். தடிக்கம்புகள் சூழ்ந்து வரும். இவை இன்று! ஆனால் அன்று?

லால்பகதூர் சாஸ்திரியார் ரயில்வே அமைச்சராக இருந்த காலம். மதுரையில் ஒரு நிகழ்ச்சியில் கலந்துகொள்ள வந்தார். அவருக்கு ரயில்வே நிலையத்திலுள்ள ஓய்வு அறை ஒதுக்கப்பட்டிருந்தது. லால்பகதூர் வந்தார். தன்னுடைய அறை வாசலில் நின்றவரிடம் சாவி கேட்டார். ஆனால் சாவி தர அவர் மறுத்து." இதுவே ரயில்வே அமைச்சருக்காக ரிசர்வ் செய்யப்பட்டுள்ளது" என்றார். " நான்தான் ரயில்வே அமைச்சர்" என்றார் லால்பகதூர். காவலர் நம்பவில்லை. அவர் மேல் தவறில்லை. அவ்வளவு ஒரு எளிமையாக ஓர் அமைச்சர் இருப்பார் என்று எவர்தான் நினைப்பார்?

அமைச்சரை வரவேற்க வந்த மகா புத்திசாலிகள்! அமைச்சர் வந்து அரைமணி நேரம் கழித்து வரவேற்க வருகிறார்கள்! அவர்கள் வந்து சொன்ன பிறகு லால்பகதூரை அமைச்சர்தான் என்று நம்பி உள்ளே விட்டார்கள்.

ஆடம்பரம் வந்து எளிமையை ஓரங்கட்டியிருக்கிறது
எல்லோரும் வெட்கப்பட வேண்டிய பொல்லாத நிலை இது!

புலவர் இரா. சண்முக வடிவேல்.

# அந்தப் பெட்டிக்குள் என்ன இருக்கிறது...?

ஓர் ஊரிலே ஒருதன் இருந்தான். ஆடு மேய்ப்பதே அவன் தொழில். நல்லவன். எல்லோரிடமும் பணிவாக நடப்பான். அது மட்டுமல்ல மிகவும் புத்திசாலித்தனமாகச் செயற்படுவான். அவனை ஒரு நாள் தற்செயலாக அந்நாட்டு மன்னன் சந்தித்தான். அவனுடைய ஆற்றல் அறிவு அவருக்கு பிடித்துவிட்டது. இப்படிப்பட்ட ஒருவன் இருந்தால் இந்த தேசத்துக்கு நல்லது என நினைத்தார்.

அவனை கூட்டிக் கொண்டு அரண்மனைக்குப் போனார்.

அங்கே அவனுக்கு சில பொறுப்புக்களைக் கொடுத்தார். கொடுத்த பொறுப்புக்களைச் சரியாகச் செய்தான். விரைவாகவே அந்த நாட்டுக்கு முதன்மை அமைச்சராகப் பதவி கொடுத்தார்.

ஆடு மேய்த்துக் கொண்டிருந்தவன் ஆட்சிப் பீடத்திற்கு வந்துவிட்டானா... பொறாமைப்பட ஆரம்பித்தார்கள்.

அது மட்டுமல்ல...

அவனை ஆட்சிப் பீடத்திலிருந்து கீழே இறக்க யோசிக்க ஆரம்பித்தனர். அவனைப் பற்றி வதந்திகளைக் கிளப்பி விட்டனர். மன்னனுக்கு அவன் மேலே நம்பிக்கை கொஞ்சம் கூடக் குறையவே இல்லை.

ஒரு சமயம் மன்னர் அவனை இன்னொரு முக்கியமான மாநிலத்துக்கு ஆட்சியாளராக அனுப்பினார். இது தான் இவங்களுக்குச் சரியான சமயம். அவன் தலைநகரை விட்டுப் புறப்பட்டதும் மெதுவாக மன்னரிடம் போய் நின்றார்கள்.

''என்ன விஷயம்''? எனக் கேட்டார்.

''அரசே! நாங்க ஒரு புகார் கொடுக்க வந்திருக்கோம்!'' ''என்ன புகார்?''

''ஊழல் புகார்!''

''யார் பேரிலே?''

''இந்த நாட்டு முதன்மை அமைச்சர்...

அரசர் திகைத்துப் போனார்.

''என்ன சொல்றீங்க?''

உண்மை தான் சொல்கிறோம் மன்னா...

ஆடு மேய்த்தவனை அரசாங்கத்தில் உயர் பதவியில் உட்காரவைத்தீர்கள். அவன் இப்போது பொருளாதாரத்திலும் உயர் நிலைக்குப் போய் விட்டான்...!

''எதை வைத்து அப்படிச் சொல்கிறீர்கள்?''

''அவன் எங்கு சென்றாலும் ஒரு பெட்டியைக் கூடவே எடுத்துக் கொண்டு போகிறான்... முறைகேடாகத் தான் சேர்த்த செல்வத்தை அந்தப் பெட்டியில் தான் மறைத்து வைத்திருக்கிறான். அந்தப் பெட்டியை விட்டு அவன் பிரிவதே இல்லை. வெளியூர்களுக்குச் செல்லும் போதெல்லாம் அதை ஓர் ஒட்டகத்தின் முதுகில்வைத்து எடுத்துக் கொண்டு போகிறான். இரவு நேரங்களில் தனது கூடாரத்தில் தான் தனியே இருக்கும்போது மட்டும் அதைத்திறந்து சரிபார்த்துக் கொள்கிறான்!''

''சரி இதெல்லாம் உங்களுக்கு எப்படித்தெரியும்?''

''அவனுக்குத் தெரியாமல் பின் தொடர்ந்து கண்டு பிடித்தோம்''

''சரி..... நீங்கள் போகலாம்!''

இந்தப் புகாரில் உண்மை இருக்காது என நம்பினார் என்றாலும் உண்மை என்ன என்பது ஊருக்குத் தெரிய வேண்டுமே!

ஒரு நாள் நள்ளிரவில் மன்னர் புறப்பட்டு அவன் தங்கியிருந்த கூடாரத்திற்குத் திடீர் என்று போனார். அவன் அந்தப் பெட்டியை திறந்து பார்த்துக் கொண்டிருந்தான். மன்னன் கவனித்தார்! அந்தப் பெட்டியில் என்னதான் இருக்கிறது?

ஆடு,மாடு மேய்த்துக் கொண்டிருந்தபோது அவன் அணிந்திருந்த அந்தப் பழைய கிழிந்த சட்டையும் கட்டியிருந்த துண்டும் அதிலே இருந்தன.

எதற்காக இப்படி? என்பது போல மன்னர் அவனைப் பார்த்தார்.

அவன் சொன்னான்

மன்னரே பதவி, பணம், புகழ் இந்த மூன்று விடயத்திலும் நாம் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். இவை சுலபமாக நம்மை உயரக் கொண்டு செல்லும். எச்சரிக்கையாக இல்லாவிட்டால் நம்மைக் கீழே தள்ளிவிடும்.

எவ்வளவு உயர்ந்த பதவிக்கு வந்தாலும் என்னுடைய பழைய நிலையை அவ்வப்போது நினைவு படுத்திக் கொள்ளவே இந்த ஏற்பாடு!

பதவியைப் பொறுத்த வரையில் நான் முதன்மை அமைச்சராக இருக்கலாம்.

ஆனால் பணிவைப் பொறுத்தவரையில் நான் பழைய அந்த ஆடு மேய்க்கிற மனிதன் தான்!

அரசன் கண்களில் ஆனந்தக் கண்ணீர், அவனை அப்படியே தழுவிக் கொண்டார்.

சுகிசிவம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

www.etisalat.lk
0722 123 123

# யாழ்ப்பாணத்தில் வாங்கும் சிம்களுக்கு ஆகக்குறைந்த IDD கட்டணங்கள்



இந்தியா - ரூ.2.00
கனடா - ரூ.2.50
அமெரிக்கா - ரூ.2.50
யூகே - ரூ.2.50
(நிலையான தொலைபேசிகளுக்கு)

குறைக்கப்பட்ட கட்டணங்களை அனுபவிக்க
IDD இலக்கத்திற்கு முன்
100 ஐ டயல் செய்து அழைக்கவும்

இன்றே சிம்மொன்றை வாங்கிக்கொள்ளுங்கள்!

பிரதான விற்பனை முகவர்:
ஆர் அன்ட் ஆர் டெலிகொம் யாழ்ப்பாணம் (பிரைவேட்) லிமிட்டட்
127, ITI.P.C.S. கட்டிடம், கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

etisalat
உங்களை பிரதிபலிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்ப்பு அரசியலைக் கைவிட்டுத் தமிழ் மக்களுக்காக சாத்தியமான பாதையில் பயணிப்பதற்கு வாருங்கள்

## நாடாளுமன்றில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு டக்ளஸ் பகிரங்க அழைப்பு

கொழும்பு, செப்.10

இனியும் எமது மக்களை இருண்ட சூழலுக்குள் இருத்தி வைக்க நிர்ப்பந்திக்காமல் நடைமுறைக்குச் சாத்தியமான பாதையில் பயணிப்போம் வாருங்கள் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு அழைப்பு விடுத்தார்.

அரசமைப்பின் 18ஆவது திருத்தச் சட்டம் தொடர்பான விவாதத்தில் உரையாற்றும்போதே இப்படிக் கூறினார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தொடர்ந்து பேசும்போது மேலும் கூறியவை வருமாறு:-

இலங்கைத் தீவில் காலத்திற்கு காலம் ஆட்சியதிகாரங்களில் இருந்து வந்தவர்கள் அவ்வப்போது பல்வேறு அரசமைப்புத் திருத்தச் சட்டங்களை கொண்டுவந்திருக்கிறார்கள்.

இதன்தொடர்ச்சியாக, இன்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக கொண்டிருக்கும் இன்றைய அரசு அரசமைப்பின் 18ஆவது திருத்தச்சட்டத்திற்கான அங்கீகாரத்தைக் கோரி நிற்கிறது.

இந்த அரசமைப்புத் திருத்தத்தை யார் தான் எதிர்த்தாலும், பெரும்பான்மையான மக்கள் பிரதிநிதிகளின் அங்கீகாரத்தோடு இது நிறைவேறப்போகின்றது என்பதே தெளிவான உண்மையாகும்.

இன்று நிறைவேற்றப்பட இருக்கின்ற 18ஆவது திருத்தச்சட்டத்தை எதிர்ப்பதாகக் கூறி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் இங்கு பிரசன்னமாகியிருக்கிறார்கள். சிலர் நாட்டில் இல்லை; வெளிநாடுகளில் நிதி சேகரிக்கச் சென்றுவிட்டார்கள்.

18ஆவது திருத்தச்சட்டம் என்பது 13ஆவது திருத்தச் சட்டத்தையும், 17ஆவது திருத்தச் சட்டத்தையும் பாதிப்புக்குள்ளாக்குகின்றது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இன்று முதலைக்கண்ணீர் வடிக்கின்றார்கள்.

நாங்கள் இந்தச் சபையில் பேசும்போது 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்த வேண்டும் என்று வலியுத்துகின்ற போதெல்லாம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அதை எதிர்த்து வந்தார்கள்.

இது அரை குறைத் தீர்வு என்றும், இந்த அரசமைப்பின் ஊடாக எந்தப் பிரச்சினைக்கும் தீர்வு காணமுடியாது என்றும், வெறும் சுயலாப அரசியல் நோக்கில் 13ஆவது திருத்தச் சட்டத்தை இழித்துரைத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு இப்போது மட்டும் ஏன் இந்த அக்கறை என்றும் நான் கேட்கிறேன்.

காரணம், இவர்கள் அனைத்தையும் 'எதிர்ப்பு அரசியலை' என்பதையே கொள்கையாகக் கொண்டவர்கள். இவர்களது இலக்கற்றதும் நடைமுறைக்குச் சாத்தியமானதுமான கோரிக்கைகளை ஜனாதிபதி மஹிந்த கொடுக்க முன்வந்தால் கூட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அதையும் ஏற்கமாட்டார்கள் என்பதே உண்மை நிலையாகும்.

ஏனென்றால், இங்கு அரசியலுரிமைப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டுவிட்டால், எமது மக்களின் அவலங்கள் தீர்ந்துவிட்டால் தங்களது நாற்காலிக் கனவுகளும், அற்பத்தமான அரசியல் ஆசைகளும் அற்றுப் போய்விடும் என்ற அச்சம் அவர்களுக்கு உண்டு.

இலங்கை, இந்திய ஒப்பந்தத்தை எதிர்த்தவர்கள், ஜனாதிபதி பிரேமதாசாவுடனான பேச்சை உடைத்தவர்கள். ஏன் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கொண்டு வந்திருந்த தீர்வுத்திட்டத்தை எதிர்த்து எதிர்க்கட்சிகள் ஆர்ப்பாட்டம் நடத்தி அதை கிழித்தும் எரித்தும் எறிந்தபோது அதில் இவர்களுக்கும் பங்குண்டு.

அதன் பின்னரான ரணில் விக்கிரமசிங்க - புலிகள் பேச்சு நடத்தியுள்ளார். இன்றைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசு - புலிகள் பேச்சு நடத்தினர். ஏன் அடுத்தடுத்து வந்திருந்த சந்தர்ப்பங்களின்போது இவர்கள் எந்த நிலைப்பாட்டை எடுத்திருந்து; யார் பக்கம் நின்றிருக்கின்றார்கள் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும்.

அரசியலுரிமைத் தீர்விற்காக கிடைத்திருந்த அனைத்து சந்தர்ப்பங்களின்போதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மக்கள் நலன் சார்ந்து நின்று நடைமுறைக்குச் சாத்தியமான எந்தக் கோரிக்கையையும் முன்வைத்திருக்கவில்லை என்பதுவே அவர்களது வரலாறாக விரிந்து கிடக்கிறது.



இன்று கொண்டு வரப்படவிருக்கும் 18ஆவது திருத்தச் சட்டம் தமிழ் மக்களுக்கு பாதகமானது எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர்கருதுவார்களேயானால், அந்தப் பாதகமான சூழ்நிலையை தோற்றுவிப்பதற்கும் இதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரே பொறுப்பேற்கவும் வேண்டும்.

இந்தச் சபையின் ஊடாக நான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை நோக்கி ஒரு பகிரங்க வேண்டுகோள் விடுக்கின்றேன். இது வரை காலமும் சாத்திய மற்றதை கேட்டு எமது வரலாற்று வாழ்விடங்களைச் சாம்பல் மேடாக்கியது போதும். எமது மக்களின் வாழ்க்கை மீது தொடர் துயரங்களை சுமத்திய வரலாறுகள் போதும். ஆகவே எதையும் எதிர்க்க வேண்டும் என்பதற்காக நீங்கள் இதுவரை காலமும் நிராகரித்து வந்திருந்த 13ஆவது திருத்தச் சட்டத்தை இப்போது மட்டும் சுயலாபங்களுக்காகப் பற்றிப் பேச முற்படாதீர்கள்.

அவ்வாறு நீங்கள் 13ஆவது திருத்தச்சட்டம் குறித்து பேசுவது உண்மை என்றால், இதில் அரசியல் கபட நாடகங்கள் இல்லை என்பதை நீங்கள் நிரூபிக்கத் தயார் என்றால் எம்மோடு இணைந்து தமிழ்க் கட்சிகளின் அரங்கத்தில் ஒன்று கலந்து பேசுவதற்கு முன்வாருங்கள்.

எங்கள் இலக்கை நோக்கிச் செல்லவேண்டிய எல்லா வாகனங்களும் போய்ச் சேர்ந்து விட்டன. இப்போது இருக்கின்ற ஒரே ஒரு வாகனம் நாம் செல்லும் இந்த புகை வண்டி மட்டும்தான் - என்றார். (சி)

# பெருந் தலைவர்கள் காந்தி, நேரு வரிசையில் ஜனாதிபதி மஹிந்த

## பல்டி அடித்த பியசேன எம்.பி. புகழாரம்

கொழும்பு, செப்.10

பெருந்தலைவர்கள் மகாத்மாகாந்தி, காமராஜர், நேரு ஆகியோரை அடுத்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ திகழ்கின்றார். இதனால் தான் நான் அரசுக்கு ஆதரவு வழங்க முடிவுசெய்தேன் - இப்படி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட எம்.பி. பியசேன நேற்று முன்தினம் நாடாளுமன்றில் கூறினார்.

அரசமைப்புத் திருத்த யோசனை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

நாம் மக்கள் பிரதிநிதிகள். அரசின் திட்டங்கள் அனைத்தையும் எதிர்ப்பதன் மூலம் எமது மக்களுக்கு எதுவும் செய்ய முடியாது. இந்தச் சபையில் இடம்பெறும் விடயங்கள் எல்லாம் மக்களுக்காக இருக்க வேண்டும்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்த நாட்டின் யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்தமையாலேயே இன்று எமது மக்கள் நிம்மதியாக இருக்கின்றனர். அவர் மிகவும் திறமையான தலைவர்.

ஆயிரம் வருடங்களுக்கு ஒரு தடவை தான் நல்ல தலைவர்கள் பிறப்பார்கள். மகாத்மாகாந்தி, காமராஜர், நேரு ஆகிய தலைவர்களை அடுத்து இப்போது மஹிந்த ராஜபக்ஷ வந்துள்ளார். அவருடன் ஒன்றிணைந்து நாம் எமது மக்களுக்கு சேவை செய்ய வேண்டும். வறட்டுக் கௌரவத்துக்காக அக்கட்சியில் இருந்துகொண்டு எமது மக்களுக்கு எதுவும் செய்ய முடியாது.

கோஷங்களை எழுப்பி எமது மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது. அரசுடன் கைகோத்துத்தான் பிரச்சினைகளைத் தீர்க்கவேண்டும். நாம் மக்களின் பிரதிநிதிகளாக இருந்துகொண்டு மக்களுக்குத் துரோகம் செய்யக்கூடாது. மக்கள் பின்தங்கிய நிலையில் உள்ளனர். அவர்களின் வாழ்வை முன்னேற்ற நாம் பாடுபட வேண்டும்.

நான் நேர்மையானவன். மறைந்த தலைவரும் நடிகருமான எம்.ஜி.ஆரே எனது தலைவன். நான் அவரது வழியில் வந்தவன். மக்களின் சேவையே எனக்கு முக்கியம். என்னைத் தெரிவுசெய்து நாடாளுமன்றத்துக்கு அனுப்பிய மக்களை நான் ஏமாற்ற மாட்டேன்.

நாடாளுமன்றில் கொண்டுவரப்படும் திட்டங்களுக்கு தோளை அல்ல, எனது தலையை கொடுத்து அவற்றைத் தூக்கி நிறுத்துவேன்.

எமது ஜனாதிபதி ஒரு குண்டுமணி. குண்டுமணி கண்ணுக்குத் தெரிவதில்லை. தூரத்தில் கிடக்கும் குப்பைதான் தெரியும். குண்டுமணியான எமது ஜனாதிபதியுடன் ஒன்றிணைந்து எமது மக்களுக்குச் சேவை செய்யவேண்டும். - என்றார். (ஒ-சி)

# தேர்தலில் வெற்றியடைந்தவரின் பதவிக்காலத்தை மட்டுப்படுத்தமுடியுமா?

## அமைச்சர் பஸில் ராஜபக்ஷ கேள்வி

கொழும்பு, செப்.10

தேர்தல்களில் தோல்வி அடைபவர்கள் எத்தனை தடவையும் போட்டியிடலாம் என்றால், மக்கள் ஆதரவுடன் வெற்றியடைந்தவரின் பதவிக்காலத்தை மட்டும் மட்டுப்படுத்த முடியுமா? எனக் கேள்வி எழுப்பிய பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, மக்களின் ஆணைக்கும் இறைமைக்கும் மேலும் வலுவூட்டுவதற்காகவே 18ஆவது திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டார்.

18ஆவது திருத்தச் சட்டம் தொடர்பான விவாதத்தில் நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போதே இப்படிக் கூறினார்.தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர் பஸில் ராஜபக்ஷ மேலும் கூறியவை வருமாறு:-

18ஆவது திருத்தச் சட்டத்தில் 12 பிரதான விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. ஆனால், இங்கு ஜனாதிபதியின் பதவிக்காலம் நீடிக்கப்படவிருப்பதாக மட்டுமே கூச்சல் போடுகின்றனர்.

தொடர்ச்சியாக தேர்தல்களில் தோல்வியடைந்தவர்கள் மீண்டும் மீண்டும் தேர்தல்களில் போட்டியிடும்போது வெற்றியடைந்த ஒருவர் மக்களின் ஏகோபித்த ஆதரவைப் பெற்று இரண்டு தடவைக்கு மேல் போட்டியிடுவதில் தவறில்லை.

18ஆவது திருத்தத்தின்படி பொலிஸ் நிர்வாகத்தில் காணப்படும் இராணுவ முறைமை ஒழிக்கப்படும். அதனை ஒரு மக்கள் சேவையாக்கி அது அரச சேவைகள் ஆணைக்குழுவின் கீழ் கொண்டுவரப்படும்.

அதேபோன்று ஊடக சுதந்திரத்துக்கு உத்தரவாதம் அளிக்கப்படுகின்றது. தேர்தல் காலங்களில் ஊடகங்களின் செயல்பாடு தேர்தல்கள் ஆணைக்குழுவின் நேரடி கண்காணிப்பில் இயங்கும் எனவும் பஸில் ராஜபக்ஷ கூறினார். (ஒ-சி)




லிபியா சர்வதேச இஸ்லாமிய அழைப்புப் பணியகத்தின் இலங்கைக் கிளையினர் புனித ரமழானுக்கான உலர் உணவுகளை மீள்குடியேறியுள்ள மக்களுக்கு யாழ்.ஒஸ்மானியாக் கல்லூரியில் வைத்து வழங்கியபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. நிகழ்வில் லிபிய தூதரக அதிகாரி ஒருவர் உரையாற்று வதையும், யாழ்.சிவலை பள்ளித் தலைவர் எம்.பஷீர் ஹாஜியார் உலர் உணவு வழங்குவதையும் பள்ளிவாசல் தலைவர்கள் நிற்பதையும் படங்களில் காணலாம். (த)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மீள்குடியமர்ந்த மக்களுக்கு கடனுதவி

கொழும்பு, செப்.10

வடக்கு - கிழக்கில் மீள்குடியமர்த்தப்பட்ட மக்களுக்கு வீடமைப்பு மற்றும் சிறுகைத்தொழில்களுக்கு கடன் வழங்கும் திட்டத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது என சிறைச்சாலை மறுசீரமைப்பு மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் டியூ குணசேகர தெரிவித்தார்.

புனர்வாழ்வு அமைச்சின் செய்தியாளர் மநாடொன்று நேற்று முன்தினம் காலை இலங்கை மன்றக் கல்லூரியில் நடைபெற்றது. இம்மாநாட்டில் அமைச்சர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

இத்திட்டத்தின் கீழ் ஆகக்கூடிய கடன் தொகையாக இரண்டரை லட்சம் ரூபா வழங்கப்படும். நான்கு சதவீத வட்டியின் அடிப்படையில் வழங்கப்படவுள்ள இக் கடனை பத்து வருட காலத்தில் மீளச் செலுத்தவேண்டும்.

இக்கடன் திட்டத்துக்கு என இலங்கை வங்கி பத்துக்கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளது. இந்தக் கடன் திட்டத்தை நடைமுறைப்படுத்த புனர்வாழ்வு அமைச்சு வவுனியாவில் கிளை அலுவலகம் ஒன் றைத் திறக்கவுள்ளது எனவும் அமைச்சர் டியூ குணசேகர தெரிவித்தார். (ஏ-சி)

## தென்கோவை திருவருள்மிகு கற்பகப்பிள்ளையார் தேவஸ்தானம் இருபாலை, கோப்பாய்



## விநாயகர் சதுர்த்தி

### விசேட தீர்த்தவாரி

கற்பகன் மெய்யடியார்களே!
நிகழும் மங்களகரமான விகிர்தி வருடம் ஆவணி மாதம் 26ஆம் நாள் (11.09.2010) சனிக்கிழமை ஆவணிச் சதுர்த்தி நன்நாளில் ஆலயத்தில் அமைந்துள்ள சதுர்த்திப் பிள்ளையாருக்கு காலை 6 மணி முதல் பி.ப. 3மணி வரையும் பக்தர்கள் கற்பகப் பிள்ளையார் தீர்த்த புஷ்கரணியில் இருந்து தீர்த்தம் எடுத்துவந்து தங்களுடைய கைகளால் தீர்த்தவாரி (நீர் ஊற்றுதல்) செய்வதற்குக் கற்பகப்பிள்ளையார் திருவருள் கைகூடியுள்ளது.
அன்று பி.ப. 4மணி முதல் கற்பகப்பிள்ளையாருக்கு விஷேட அபிஷேகமும், விஷேட பூஜை வழிபாடுகளும் மாலை 6 மணிக்கு வசந்தமண்டபப் பூஜையும் இடம்பெற்று எம்பெருமான் வீதியுலா வருகின்ற கண்கொள்ளாக் காட்சியும் நடைபெறும்.

குறிப்பு:- தீர்த்தவாரி செய்யும் அடியார்கள் ஆசார சீலர்களாக வருகை தந்தும், வரும்போது குடம்-1, தேங்காய் என்பவற்றைக்கொண்டு வந்து தீர்த்தவாரி செய்து தேங்காய் உடைத்து தங்களின் வழிபாட்டை நிறைவுசெய்து சதுர்த்திப் பிள்ளையார் திருவருள் பெறுவீர்களாக.

இருபாலை, கோப்பாய். தேவஸ்தானம்.

## அறிவித்தல்

### நல்லூர் பிரதேசசபை-நல்லூர் உப அலுவலகம்

*ஆதன பெயர் மாற்றம்*

*வட்டாரம் 14*
*பலாலி - யாழ்ப்பாண வீதி,*
*ஆதன இலக்கம் 72/17*

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட நல்லூர் உப அலுவலகம் வட்டாரம் 7, பலாலி-யாழ்ப்பாண வீதியிலுள்ள 72/17ஆம் இலக்க ஆதனமானது தம்பிராஜா ஸ்ரீகாந்தராஜன் என்பவரால் 01.11.2005 ஆம் திகதிய 940ஆம் இலக்க வெளிப்படுத்தல் உறுதி மூலம் தமக்கு சொந்தமானது என தெரியப்படுத்தப்பட்டு, எமது ஆதனப்பதி வேட்டில் தமது பெயருக்கு மாற்றம் செய்வதற்காக ஆதன பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார். எமது பதிவேடுகளில் குறித்த ஆதனத்திற்கு உரிமைகோருபவர்- சண்முகநாதன் என பதிவுள்ளது. இவ்வாதனத்திற்கு உரிமைகோருபவர் கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 14 நாள்களுக்கு எழுத்து மூலம் எமக்கு முறையிடுமாறு கேட்டுக்கொள்கின்றேன். அவ்வாறு உரிமை கோரப்படாதவிடத்து குறித்த ஆதனமானது தம்பிராஜா ஸ்ரீகாந்தராஜன் என்ற பெயருக்கு பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றேன்.

செயலாளர்,
நல்லூர் பிரதேச சபை,
கொக்குவில்.

07.09.2010 (சி/570760)

## கணனி பராமரிப்பு வேலைத்திட்டம்

யாழ்ப்பாணம், செப். 10

வடமராட்சி தேசிய மட்ட கணனி வன்பொருள் வலையமைப்பு சீர்திருத்தத்தின் பராமரிப்பு வேலைத்திட்டம் வடமராட்சி கணனி வள நிலையத்தில் நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

பாடசாலைகளில் திருத்தப்பட வேண்டியுள்ள கணனிகள் பற்றிய விவரங்கள் கடந்த ஏப்ரல் மாதம் வடமராட்சி கணனி வள நிலையத்தினால் கோரப்பட்டிருந்தது.

அதற்கமைய உத்தரவாதக் காலம் முடிவடைந்த திருத்தத்திற்கு உட்படுத்தப்பட வேண்டிய கணனிகள் அவற்றுடன் இணைந்த சாதனைகளை கணனி வள நிலையத்தில் ஒப்படைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (த)

## யாழ்.இந்து மகளிர் கல்லூரி சாதாரண தர மாணவிகளுக்கு

யாழ்ப்பாணம், செப். 10

ஜி.சீ.ஈ.சாதாரண தர மாணவர்களுக்கான தேசிய மட்ட முன்னோடிப் பரீட்சைகள் நேற்று முதல் இடம்பெற்று வருகின்றன. இன்று விஞ்ஞானபாட முன்னோடிப் பரீட்சையும் இம்மாதம் 14ஆம், 16ஆம் திகதிகளில் கணிதபாட பரீட்சையும் இடம்பெறவுள்ளன.

யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் தரம் 11 இல் கல்வி கற்கும் அனைத்து மாணவிகளையும் தவறாது பரீட்சைக்குத் தோற்றுமாறு பாடசாலை அதிபர் அறிவித்துள்ளார். (த-15)

## கருத்துப் பகிர்வு

யாழ்ப்பாணம், செப். 10

விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள 'யாழ். மாணவர்களின் இன்றைய கல்வி நிலைமையும் வெகுசனத் தொடர்பூடகங்களின் ஆதிக்கமும்' என்னும் கருத்துப் பகிர்வு இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு இல.167, ஆஸ்பத்திரி வீதியில அமைந்துள்ள விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தில் நடைபெறவுள்ளது. (த)





இழந்த சக்தியை மீண்டும் பெற்றிடப் பாவியுங்கள்
றோயல் குளுக்கோஸ்
100%சுத்தமானது
உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும் போது குளுக்கோஸ் என்று கேட்காமல்
றோயல் குளுக்கோஸ் தாருங்கள் என்று கேட்டு வாங்குங்கள்
PACKED BY:
ROYAL Industries
Colombo 12, T.P 0777277670
அனைத்துப் பாமஸிகளிலும் கடைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.

ஏக விநியோகஸ்தர்கள்:
சிவா நறுமணப் பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

இலவசம்
அன்பார்ந்த வாடிக்கையாளர்களே!
எம்மிடம் 18 டசின் றோயல் குளுக்கோசினைக் கொள்வனவு செய்து 1000 ரூபாய் பெறுமதியான் அழகிய வர்ண ரீ-சேட் ஒன்றினை முற்றிலும் இலவசமாய் பெற்றுக்கொள்ளவும்.

## விற்பனைக்கு

எம்மிடம் இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட வெங்கல மணிகள் 5கிலோ தொடக்கம் 1000 கிலோ வரை பெற்றுக்கொள்ளலாம்.

மற்றும் உயர்தர விதிமுறைகளுக்கு அமைந்த கோயில் கலசங்கள், தீபங்கள், குத்துவிளக்குகள், சரவிளக்குகள், கெண்டிவகை, பட்டுக் குடைகள், ஆலவட்டக் குடைகள், கும்பக் குடைகள், திருவாசிகள், வெண்சாமரை, சோட உபசார செற்றுகள், கும்பதீபங்கள், பஞ்சாலாத்திகள், அடுக்குத் தீபங்கள் இன்னும் பல தீபங்கள் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

பிள்ளையார் மெட்டல்
இல.64, வைரவர் கோயில் வீதி,
வைரவப் புளியங்குளம், வவுனியா.
தொ.பே: 024 222 2097, 024 222 0129

## விற்பனைக்கு

எம்மிடம் இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட வெங்கல மணிகள் 5 கிலோ தொடக்கம் 1000 கிலோ வரை பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்பு:- சுப்பிரமணியம் சரவணபவன்
சிற்ப ஆசாரி 14BA, தம்பி லேன்,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி-021 490 0085
077 411 2049

## விற்பனைக்கு

எம்மிடம் இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட வெங்கல மணிகள் 5 கிலோ தொடக்கம் 1000 கிலோ வரை மற்றும் கோயில் பொருள்கள், தீப வகைகள், பட்டுக் குடை, திருவாசிகள் என்பனவும் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்பு:- சி.சிவானந்தன்
கந்தசாமி கோயில் முன்பாக
சுபாஜினி ரேட்டேர்ஸ்
A.09 வீதி, கிளிநொச்சி.
தொ.பே:- 0779779726


சிவமயம்

## திருமண அழைப்பு

**அன்புடையீர்!**
நிகழும் மங்களகரமான விகிர்தி வருடம் ஆவணி மாதம் 25ஆம் நாள் (10.09.2010) வெள்ளிக்கிழமை காலை 9.45 மணி முதல் 10.30 மணி வரையுள்ள அத்த நட்சத்திரமும் அமிர்த யோகமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்




| | |
|---|---|
| எமது சிரேஷ்ட புத்திரன் | எமது சிரேஷ்ட புத்திரி |
| திருநிறைச் செல்வன் | திருநிறைச்செல்வி |
| **அன்பழகன்** | **சாந்தகுமாரி** |
| அவர்களுக்கும் | அவர்களுக்கும் |

இறைவன் திருவருள் துணைகொண்டு திருமாங்கல்ய தாரணம் செய்ய பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சமேதராய் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்து, தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

*திருமணம் நடைபெறும் இடம்*
*அரசகேசரி சிவன்கோயில்*
*25, Sungei Kadut Avenue, Singapore 729679*

தங்கள் நல்வரவை இனிதே விரும்பும்



| | |
|---|---|
| திரு.திருமதி நவரட்ணம் குடும்பம் | திரு.திருமதி சு.சண்முகம் குடும்பம் |
| வட்டுவத்தை, | இல.16, நாயன்மார் வீதி, |
| அல்வாய் கிழக்கு, அல்வாய். | நல்லூர். |
| தொலைபேசி: 026 3202395 | தொலைபேசி: 021 3006416 |

(102914) இரு வீட்டார் அழைப்பு


Internationally Recognized and Affordable | UK Qualification

edexcel | BTEC | HND Civil Engineering
Higher National Diploma

*Delivered locally......*
*Recognized globally......*



**New Batch Starts on 10.09.2010**

மேலதிக விபரங்களுக்கு
021 4900 900

பொறியியலாளர் ஆக வேண்டும் என்ற உங்கள் கனவை நாம் நனவாக்கித் தருகின்றோம். ஆம் IIS CITY CAMPUS நிறுவனத்தின் குமுசார் பீடத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் மேற்படி கற்கை நெறிக்கு மூன்றாம் பிரிவுக்கான மாணவர்கள் உள்வாங்கப் படவுள்ளனர். Edexcel,UK நிறுவனத்தினால் வழங்கப்படும் HND தகைமைக்கான இச்சான்றிதழ் சர்வதேச ரீதியிலே மிகப்பிரபல்யமானதாகும். நீங்கள் பிரித்தானிய பல்கலைக்கழகம் ஒன்றின் பட்டதாரியாகும் வாய்ப்பினை இன்றே பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

**IIS CITY CAMPUS**
200,Sivan Pannai Road,Jaffna
Tel:-021 222 8060 Fax:-021 222 6933
Web:- iis.edu.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதுவித கொடுப்பனவுமின்றி நீண்டகாலம் சேவையாற்றும் எமக்கு நிரந்தர நியமனத்தைப் பெற்றுத்தாருங்கள்

## வடமாகாண ஆளுநரிடம் துணுக்காய் வலய தொண்டர் ஆசிரியர்கள் மகஜர்

துணுக்காய் ,செப்.10

வாழ்க்கைச் செலவுகள் அதிகரித்த நிலையிலும் எதுவித கொடுப்பனவுகளும் இன்றி நீண்ட காலமாக சேவையாற்றி வரும் எமக்கு நிரந்தர நியமனத்தைப் பெற்றுத் தருவதற்கு நடவடிக்கை எடுங்கள் எனக் கோரி வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறியிடம் மகஜர் ஒன்றைக் கையளித்தனர் துணுக்காய் கல்வி வலயத் தொண்டர் ஆசிரியர்கள்.

நேற்று முன்தினம் புதன்கிழமை முல்லைத்தீவுக்கு விஜயம் செய்த ஆளுநர் அங்கு யோகபுரம் மகா வித்தியாலயத்தின் கணனிப் பயிற்சி நிலையத்தை திறந்து வைத்த பின்னர் அங்கு வைத்து துணுக்காய் வலய கல்விப் பணிப்பாளர் க.மேகநாதன் மூலம் இந்த மகஜர் கையளிக்கும் நிகழ்வு இடம்பெற்றது.

அந்த மகஜரில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் வருமாறு:

* கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாகத் தொண்டு அடிப்படையில் பணியாற்றி வருகின்றோம்.
* நேர்முகத் தேர்வில் தோற்றி தெரிவாகியும் இதுவரை எமக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை.
* முல்லைத்தீவு, கிளிநொச்சி தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் பணிபுரியும் தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்ட போதும் இதுவரை எமக்கு நியமனம் வழங்கப்படவில்லை.
* வாழ்க்கைச் செலவுகள் அதிகரித்த நிலையில் கொடுப்பனவுகள் எதுவுமின்றித் தொடர்ந்து சேவையாற்றி வருகின்றோம்.
* கடந்த காலங்களில் ஏனைய மாவட்ட ஆசிரியர்கள் இங்கு வந்து கடமையாற்றாத போது நாம் மாணவர்களின் நன்மை கருதி கற்றல் மற்றும் இணைபாட விதான செயற்பாடுகளில் ஈடுபட்டோம்.
* கல்வி அதிகாரிகள் எமக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படும் என்று வாக்குறுதி அளித்ததனால் இதுவரையும் தொடர்ந்து தொண்டு அடிப்படையில் கடமையாற்றி வருகின்றோம்- என்றுள்ளது.

இதற்குப் பதிலளித்த வடமாகாண ஆளுநர் நீண்ட காலமாகத் தொண்டர் ஆசிரியர்களாகப் பணியாற்றி நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றி இன்றுவரை நிரந்தர நியமனம் கிடைக்காதவர்களின் பெயர்ப் பட்டியல் அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப் பட்டுள்ளது. எனவே மிக விரை வில் நிரந்தர நியமனம் வழங்க நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தார். (6-15)

# ஒரு வார காலத்தில் 17 டெங்கு நோயாளர் இனங்காணப்பட்டனர்

கிளிநொச்சி ,செப்.10

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த ஒரு வார காலப் பகுதியில் 17 டெங்கு நோயளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரியின் வழிகாட்டலில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் தீவிரமடைந்துள்ளன.

சுகாதாரத் தொண்டர்களும் கிராம சேவகர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட குழுவினர்களும் சிரமதானம், வீட்டுத் தரிசனக் கருத்தூட்டல், துண்டுப் பிரசுர விநியோகம், ஒலி பெருக்கியூடான விழிப்புணர்வுக் கருத்தூட்டல் போன்ற செயற்பாடுகளின் ஊடாக டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். (6)

# பொதுமக்கள், சுகாதார, பிரதேசசபை ஊழியர்கள் இணைந்து பளையில் டெங்கு ஒழிப்பு சிரமதானம்

பளை ,செப்.10

பளைப்பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்த மக்கள், சுகாதாரப் பகுதியினர், பளைப் பிரதேச சபை உத்தியோகத்தர்கள் அனைவரும் இணைந்து டெங்கு ஒழிப்புச் சிரமதானப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இப்பகுதி மக்கள் மீளக்குடியமர்ந்து தற்போது இரண்டு மாதங்களே ஆகியுள்ள நிலையில் புதர் மண்டிக் கிடக்கும் பொதுச்சந்தை, பஸ் தரிப்பிடங்கள், ஏ-9 வீதியின் இரு மருங்குகள், இடிபாடைந்து கிடக்கும் கட்டடங்கள் என்பற்றை சுகாதார சேவைத் திணைக்களத்துடன் இணைந்து துப்புரவு செய்யும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

தவிர பிரதேச சபையினர் ஒலிபெருக்கி மூலமாகவும் துண்டுப்பிரசுரங்கள் மூல மாகவும் நுளம்பு பெருகாமல் வீட்டையும் சுற்றுச் சூழலையும் எவ்வாறு பேணிப் பாதுகாப்பது என்பது தொடர்பாகவும் பொதுமக்களிடம் விழிப் புணர்வை ஏற்படுத்தி வருகின்றனர். (6-315-313)




# புனித ரமழான் பெருநாளுக்காக களை கட்டுகின்றது மன்னார்

மன்னார் ,செப்.10

புனித ரமழான் பெருநாளை முன்னிட்டு மன்னாரிலுள்ள முஸ்லிம் மக்கள் கடந்த காலங்களை விட மிகவும் உற்சாகமாக பொருள்கொள்வனவுகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த யுத்த காலங்களின் போது மன்னாரில் இருந்து இடம்பெயர்ந்து நாட்டின் பல பாகங்களிலும் குடியேறிய முஸ்லிம் மக்கள் தற்போது அச்சமற்ற சூழ்நிலையில் தமது சொந்த இடங்களில் மீள் குடியேறியிருக்கின்றனர்.

இவ்வாறு மீள்குடியேறியிருப்பவர்கள் தற்போதைய நோன்புக் கால நடவடிக்கைகளிலும் உற்சாகமாக ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில் மன்னார் வாழ் முஸ்லிம்கள் ரமழான் பெருநாளுக்கான பொருள்கொள்வனவில் ஈடுபட்டு வருகின்றனர்.

மன்னார் நகரின் மையப்பகுதி மற்றும் சந்தை எங்கும் முஸ்லிம் மக்களின் நடமாட்டம் அதிகரித்திருக்கின்றது. கொளுத்தும் வெயிலின் மத்தியிலும் சிறுவர் தொடங்கி பெரியவர் வரை தமக்குத் தேவையானவற்றைக் கொள்வனவு செய்வதில் ஆர்வத்துடன் ஈடுபட்டு வருவதைக் காணக் கூடியதாக இருக்கின்றது.

இந்நிலையில் புடைவை வியாபாரிகள் விதம் விதமான வகை, வகையான ஆடை வகைகளை அள்ளிக் குவித்துள்ளனர். ஆயினும் மிகவும் அதிக விலைக்கே அவைகள் விற்பனை செய்யப்படுகின்றனர்.

இந்திய சாரம் ஒன்று 1,200 ரூபாவிற்கும் இந்திய சல்வார் ஒன்று 2,500 ரூபா விற்கும் இந்திய சாறி ஒன்று குறைந்த விலை 3,000 ரூபா முதல் பல்வேறு விலைகளிலும் சாதாரண வொயில் சாறி ஒன்று 1,000 ரூபாவரையிலும் விற்பனை செய்யப்பட்டு வருவதாக தெரிவிக்கின்றனர்.

இவற்றைக் கொள்வனவு செய்யவரும் முஸ்லிம் பெண்களும், ஏனைய வாடிக்கையாளர்களும் எவ்வித மறுப்பும் இன்றி அவைகளை வாங்கிச் செல்வதைக் காணக் கூடியதாக உள்ளது.

இது தவிர மன்னாரில் பரவலாக அனைத்து கடை வீதிகளிலும் நோன்பு பெருநாளைக் கொண்டாடுவதற்கு ஆயத்தமாக பொருள்களைக் கொள்வனவு செய்யும் நடவடிக்கைகளிலும் மக்கள் ஈடுபட்டிருப்பதைக் காணமுடிகின்றது. (6-80)

# கிளிநொச்சி பொது வைத்தியசாலை கட்டடங்களைப் புனரமைக்க நடவடிக்கை

கிளிநொச்சி ,செப்.10

கிளிநொச்சி பொது வைத்தியசாலையின் கட்டடத் தொகுதிகள் சிலவற்றைப் புனரமைப்புச் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொது வைத்தியசாலையின் காணிக்குள் மருத்துவர்களுக்கான இரண்டு மாடிகள் கொண்ட விடுதியின் அடித்தளக் கட்டுமானப் பணிகளை முழுமைப் படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

யுத்த காலத்திலும் தற்போது மக்கள் மீளக்குடியமர்ந்த பின்னரும் அரிய பல சேவைகளை ஆற்றிய இந்த வைத்தியசாலையை முழு அளவில் பௌதிக வளங்களுடன் இயங்க வைப்பதற்குப் பல நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளதாவும் தெரிவிக்கப்பட்டது. (6-121)

# உதவி புள்ளிவிவர உத்தியோகத்தர் நியமனம்

முல்லைத்தீவு ,செப்.10

அடுத்த வருடம் நாடளாவிய ரீதியில் நடைபெறவுள்ள சனத்தொகைக் கணக்கெடுப்பை முல்லைத்தீவிலும் மேற்கொள்வதற்கு இலகுவாக முல்லைத்தீவு மாவட்டத்திற்கு குடித்தொகை மதிப்பு புள்ளிவிவரத் திணைக்களம் உத்தியோகத்தர் ஒருவரை நியமித்துள்ளது.

திணைக்களத்தின் பணிகளை விரிவாக்கம் செய்யும் வகையில் செல்வி அபிராமிதேவி ஐயாத்துரை உதவி புள்ளி விவர உத்தியோகத்தராக நியமிக்கபட்டுள்ளார். (6-121)

# வன்னியின் கரையோரப் பிரதேசங்களில் இறால் பண்ணைகளை அமைக்க ஆய்வு

கிளிநொச்சி ,செப்.10

வன்னியில் பூநகரி, கண்டாவளை, வலைப்பாடு, தட்டுவன்கொட்டிக் கரையோரப் பிரதேசங்களில் இறால் வளர்ப்புப் பண்ணைகளை அமைப்பதற்கான ஆய்வுகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

கடற்றொழில் நீரியல் வள அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நிமால் சந்திரரட்ண தலைமையிலான குழுவினர் கடந்த 3ஆம், 4ஆம் திகதிகளில் இப்பகுதிகளுக்கு நேரில் சென்று ஆய்வுகளை மேற்கொண்டனர்.

இவ்விடங்கள் பொருத்தபாடாக அமையின் பெரிய இறால் பண்ணைகளை நிறுவ நடவடிக்கைகள் எடுக்கபடவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. இந்த ஆய்வு நடடிக்கையின் போது பூநகரி, கண்டாவளை கடற்றொழில் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் உத்தியோத்தர்களும் கலந்துகொண்டதாகத் தெரிவிக்கப்ட்டது. (6-72)

# கருங்கண்டலில் மீளக்குடியேறிய மாணவர்களுக்கு இராணுவம் கற்றல் உபகரணங்கள் அன்பளிப்பு

மன்னார் ,செப்.10

மன்னார் கருங்கண்டல் பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்த 610 பாடசாலை மாணவர்களுக்கு இராணுவத்தினர் கற்றல் உபகரணங்களை வழங்கியுள்ளனர். மடு கல்வி வலயத்தைச் சேர்ந்த 16 பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களுக்கே இந்த உபகரணங்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டன.

நேற்று முன்தினம் புதன்கிழமை மன்னார் கருங்கண்டல் றோமன் கத்தோலிக்கத் தமிழ்க்கலவன் பாடசாலையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் மன்னார் தள்ளாடி படைத்த தலைமையகத்தின் பொறுப்பதிகாரி பிரிக்கேடியர் மைத்திரி டயஸ், 215 ஆவது படைப்பிரிவின் கட்டளை அதிகாரி பிரிக்கேடியர் விக்கும் லியனகே, அதன் சிவில் நிர்வாக அதிகாரி மகா வித்தாரண, மடு வலயக் கல்விப் பணியாளர் திருமதி செபஸ்ரியன், மாந்தை உதவி அரசாங்க அதிபர் பிரபாகரமூர்த்தி ஆகியோர் கலந்துகொண்டனர்.

பாடசாலை உபகரணங்களை 215 ஆவது படைப்பிரிவினரும் சர்வோதய அமைப்பினரும் இணைந்து வழங்கியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (6)

# யுத்தத்தால் நாம் இழந்த தொழில்சார் உபகரணங்களைப் பெற உதவுங்கள்

## ஆளுநர் சந்திரசிறியிடம் முல்லை. மீனவர்கள் கோரிக்கை

முல்லைத்தீவு ,செப்.10

கடந்த காலத்தில் நாம் எதிர்கொண்ட யுத்தத்தால் எமது தொழில்சார் உபகரணங்கள் அனைத்தையும் இழந்துவிட்டோம். எனவே எமக்கு அவற்றைப் பெற்றுத்தருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ. சந்திரசிறியிடம் முல்லைத்தீவு மீனவர்கள் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ. சந்திரசிறி நேற்று முன்தினம் புதன் கிழமை முல்லைத்தீவுக்கு உத்தியோக பூர்வ விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார்.

அங்கு அவர் முல்லைத்தீவு மாவட்ட மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக மீனவர் சங்கங்களுக்கும் ஆளுநர்களுக்கும் இடையே கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது. இந்தக் கலந்துரையாடலில் மீனவர்களால் கோரிக்கைகள் சில முன்வைக்கப்பட்டன. அவையாவன:

* கடந்த கால இழப்புக்களால் தொழில்சார் உபகரணங்கள் அனைத்தையும் இழந்துவிட்டோம். எனவே முதலில் எமக்கு படகுகள் பெற்றுத் தர வேண்டும்.
* மீன்களை பழுதடையாமல் பாதுகாப்பதற்காக 'ஐஸ் பிளான்ற்' தேவை.
* மீன்களைக் கொண்டு சென்று விற்பனை செய்வதற்காக தமக்கு துவிச்சக்கர வண்டியும் அதனுடன் இணைந்த மீன் பெட்டியும் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவர்களது கோரிக்கைகளை கேட்ட வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரிசிறி அவற்றை நிறைவேற்றுவதாக உறுதியளித்ததுடன், உடனடியாக 50 படகுகளும், 62 துவிச்சக்கரவண்டிகளுடன் கூடிய மீன் பெட்டிகளையும் வழங்குவதாக உறுதியளித்தார். மேலும் 'ஐஸ்பிளான்ற்' அமைப்பதற்கும் விரைவில் உதவி செய்வதாகவும் குறிப்பிட்டார்.

இக்கலந்துரையாடலில் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் என். வேதநாயகன், மீனவர் சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். (6-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தூர்ப் பகுதி மக்களது வாழ்வு மேம்பாட்டுக்கு சோமாஸ்கந்தக் கல்லூரியை நிறுவியுதவியவர் அமரர் மழவராயர் கந்தையா

புத்தூரில் சிற்றம்பலம் மணியகாரன் மகன் மழவராயர்-சின்னத் தங்கச்சிப்பிள்ளை தம்பதியரின் அருந்தவப் புதல்வனாக கந்தையா வள்ளல் அவர்கள் 10.09.1887 இல் புத்தூரில் அவதரித்தார்.

இவர் இளமைக் காலத்தில் தாய், தந்தையரின் அரவணைப்பில் வளர்ந்து சிறந்த கல்வியறிவும் அறநெறிச் சிந்தனைகளும் வாரி வழங்கும் கொடைப் பண்பும் உள்ளவராகத் திகழ்ந்தார்.

இவர் புத்தூர் பிரதேச மக்களின் கல்வி அறிவை மேம்படுத்தும் நோக்கில் 1931 வைகாசி 22ஆம் திகதியன்று புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரியை நிறுவி இப்பிரதேச மக்களுக்கு ஒரு சிறந்த நற்பணியைத் தொடங்கி வைத்தார்.

அக்கால கட்டத்தில் இப்பிரதேசத்தில் வாழ்ந்த பொதுமக்கள் முற்று முழுதாக விவசாயத்தையே தமது ஜீவனோபாய தொழிலாகக் கொண்டிருந்ததால் அவர்களால் பெரிய அளவு வருமானம் ஈட்டமுடியவில்லை.

அத்துடன் இப்பிரதேசத்தில் கிறிஸ்தவ மிஷனறி பாடசாலைகள் ஒருசிலவே காணப்பட்டதுடன், அப்பாடசாலைகளில் மதமாற்ற நோக்குடனேயே கல்வி கற்பிக்கப்பட்டு வந்தமையால் பல இந்துப் பெற்றோர் தம் பிள்ளைகளை அம் மிஷனறிப் பாடசாலைகளில் கல்வி கற்க அனுமதிக்கத் தயக்கம் காட்டி வந்தனர்.

பெற்றோர்களது இச்சிரமத்தைக் கருத்திற்கொண்டே வள்ளல் மழவராயர் கந்தையா, தனது சொந்தச் செலவில் காணி கொள்வனவுசெய்து இப்பாடசாலையை நிறுவியதுடன் அருகில் ஆன்மீக ஈடேற்றத்திற்கென புத்தூர் சோமாஸ்கந்த சிவன் ஆலயத்தையும், புத்தூர் சுன்னாகம் வீதியில் பசிப்பிணியை அகற்றும் நோக்கில் அன்னதான சத்திரத்தையும் அமைப்பித்தார். இதன் பயனாக இப்பகுதியில் வாழ்ந்த இந்து மாணவர்கள் பலர் கற்றல் செயற்பாட்டில் சிறப்புற வழியேற்பட்டதுடன் நற்பண்புமிக்க சமுதாயம் ஒன்று உருவாகவும் வாய்ப்பு ஏற்பட்டது.

இவ்விதம் உருவான புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரி படிப்படியாக வளர்ச்சி பெற்று வலி.கிழக்கில் பிரபல்யம் அடைந்து தொடர்ந்து குடாநாட்டில் புகழ்பெற்ற பாடசாலைகளில் ஒன்றாகப் பரிணமிக்கும் அளவுக்கு இன்று வளர்ச்சி கண்டுள்ளது.

இன்றைய கல்விச் செயற்பாட்டில் மாணவர்கள் பலரும் கல்வி கற்பதற்காக பிரபல்ய பாடசாலைகளை நாடுவதால் அங்கு உருவாகும் திறமை குறித்த போட்டி காரணமாகப் பலருக்கு உயர்கல்விக்கான சந்தர்ப்பம் கிட்டாது போய்விடுகின்றது.

இதனைக் கருத்திற்கொண்டு அரசாங்கம் ஒவ்வொரு பிரதேசத்திற்கும் சிறப்பு வசதிகளுடன் கூடிய பாடசாலைகளை நிறுவும் திட்டத்தை ஆரம்பித்துள்ளது.

அந்தவகையில் வலி.கிழக்குப் பிரதேசத்தில் சகல வசதிகளும் கொண்ட முதற்றர பாடசாலையாக தரமுயர்த்துவதற்கு இப்பாடசாலை கல்வி அமைச்சின் இசுறு திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

அன்று வள்ளல் மழவராயர் கந்தையாவின் சீரிய நற்சிந்தனையின் காரணமாக தோற்றம்பெற்ற இப்பாடசாலை இன்று இந்த அளவுக்கு வளர்ச்சிகண்டு நிற்கிறது.

இன்று இப்பாடசாலையில் 800 வரையான மாணவர்கள் தரம் 6 தொடக்கம் 13 வரையான வகுப்புக்களில் கல்விகற்று வருகின்றனர்.

ந.குமரசிறி
ஆசிரியர் புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி.

ஆரம்பப்பிரிவு தற்போது புத்தூர் இந்து ஆரம்பப் பாடசாலை என்ற பெயருடன் தனி அலகாக, இக் கல்லூரியின் சகோதரப் பாடசாலையாக இயங்கி வருகிறது.

இங்கும் தரம் 1முதல் 5 வரையான வகுப்புக்களில் 510 வரையான மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர்.

வள்ளல் மழவராயர் கந்தையா, இப்பாடசாலையை நிறுவியதோடு மட்டும் நின்றுவிடாது அது எந்தவித தடங்கல்களும் இன்றித் தொடர்ந்து கல்விப் பணிபுரியத் தேவைப்படும் நிதியினை ஈட்டும் பொருட்டு



தர்ம சாசனங்களாக எழுதிவைத்தார். அது இன்றும் இப்பாடசாலையின் வளர்ச்சிக்குப் பெரும் உறுதுணையாக இருந்துவருகிறது. இது ஒரு தீர்க்க தரிசனத்துடன் மேற்கொள்ளப்பட்ட ஒரு கொடையாகக் கொள்ளத்தக்கது.

நிதி முகாமையைச் சிறப்பாக மேற்கொள்வதற்கென வள்ளல் மழவராயர் கந்தையாவின் வழித்தோன்றல்ளை உள்ளடக்கி உருவாக்கப்பட்ட தர்மகர்த்தா சபை தனது பணியைச் சிறப்பாக ஆற்றி வருகின்றது.

மேலும் இந்த வள்ளலார் விசாலாட்சி சமேத விஸ்வநாதப் பெருமானுக்கு ஆலயம் (புத்தூர் சிவன் கோயில்) அமைத்ததுடன் நல்லை திருஞான சம்பந்த ஆதீனம் அமைப்பதற்கென கதிர்வேலாயுத சுவாமி மடாலயத்துடன் கூடிய நிலத்தை நல்லூரில் வழங்கி சமூகத்தினை நன்னிலைப்படுத்தி சமய, சமூக, கல்வி, அறப்பணிகளைப் புரிந்தவர்.

இவர் 1936ஆம் ஆண்டு மேமாதம் 15 ஆம் திகதியன்று (15.05.1936) இல் சிவபதப்பேறு எய்தினார். இன்றும் பல பெரியவர்கள் அவர் காட்டிய வழியில் தொடர்ந்தும் இப்பகுதி மக்களது வாழ்க்கை மேம்பாட்டுக்கு உதவிபுரிவதற்கு முன்னோடியாகத் திகழ்ந்தவர் வள்ளல் மழவராயர் கந்தையா எனக்கூறினால் அது மிகையாகாது. *

# புகழ் விரும்பா அறச்செயல் நன்று

உலகில் உயிரினம் மேம்பட வகுக்கப்பட்ட நெறிகள் பல. அந்நெறிகள், அறிவுடைப் பெருமக்களால் இதுவே மக்களினத்திற்கு ஏற்றது என நாடு, சூழல், பண்பாடு ஆகியவற்றை ஒட்டி வலியுறுத்தப்படுகின்றன.

நெறிவளர்த்த மேலோர்கள் பலர் அவர்கள் பல ஆயிரம் ஆண்டுகளாகப் பண்பாட்டால்; கலைத்திறத்தால்; அகவுணர்வால்; நாட்டை வளம்பெறச் செய்துள்ளனர். வாழ்க்கையோடு இயைந்த சமயநெறியை வளர்த்துள்ளனர். எல்லா சமயக் கருத்துக்களையும் ஏற்று அவற்றினும் முடிவான கொள்கையை வற்புறுத்தியுள்ளனர்.

இறை, உயிர், தளை என்னும் முப்பொருளை உணர்த்துவது நம் சமயம். உயிர் தன்னழுக்கு நீங்கி இறைத் தன்மையை ஏய்தச் சாதனங்கள் வகுக்கப்பட்டுள்ளன. உயிர் தூயதாதற்கு, தெளிவும் கசிவும் வேண்டும். தெளிவுபெற்ற உயிர் கசிந்துருகப் பயிலும். தெளிவுக்கு மனமாசுகள் நீங்கவேண்டும். மனம் ஒருவழிப்படுதற்கு எத்தனையோ முயற்சிகளை மேற்கொள்ளுகிறோம். கல்வியால் நல்லனவற்றை அறிந்து, அந்நெறியில் அறத்தைச் செய்ய முயல்கிறோம். ஒழுக்க நெறியில் அறத்தைச் செய்ய வேண்டும். அறத்தால் வரும் இன்பமே நிலைபேற்றுக்குரிய இன்பம். அது முடிவில்லாத பேரின்பமாகிய முத்திச் செல்வத்தையும் தருகின்றது. இத்தகைய அறச்செயல்களே உயிர்க்கு உறுதிப்பயப்பன. அன்பு உடையவர்களேயே பண்பாடு உடையவர்கள் என்கிறோம். அவர்கள் செய்வன நற்செயலாகின்றன.




இன்று நாட்டில் அறச்செயல்கள் நடைபெறுகின்றன. ஆனால் அவை அன்பின் வழிபட்டனவாகப் பெரும்பாலும் காணப்படுவதில்லை. விளம்பரத்தை, புகழுரையைக் கருதிச் செய்யப்படுகின்றன. சிறிய அறச்செயலால் பெரிய விளம்பரத்தை விரும்புகின்றனர். தாம் செய்யும் பல தீங்குகளுக்கு, கழுவாயாகச் செய்கின்றனர். அவை, தீயவழிகளில் தேடும்பொருள்களைக் காத்துக்கொள்ளச் செய்யும் முயற்சியாக இருப்பதைப் பார்க்கிறோம்.

வஞ்சகத்தால் பிறரை வருத்துவதால் பொய்மையால் வரும் பொருள்களைக் காக்கச் செய்யும் அச்செயல்கள் சுடப்படாத மண் பானையில் நீரை நிறைத்து அதற்குப் பூணிட்டுக் காப்பதுபோலத்தான் ஆகும். ஒரு காலத்தில் கோயில் கட்டியவர்கள் தம் செயலை கல்வெட்டால் செதுக்கினர். அதுவும் பிறர் அப்பணியில் ஈடுபடுவதற்காக.

## வீடு வாடகைக்கு உண்டு

உயரப்புலம் ஆனைக்கோட்டையில் மேல் வீட்டில் இரண்டு அறைகள், கீழ் வீட்டில் மூன்று அறைகள் வாகனத் தரிப்பிடத்துடன் கூடிய பெரிய வளவும் சகல வசதிகளும் உடைய வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: உயரப்புலம், ஆனைக்கோட்டை.
0779690957

## வீடு வாடகைக்கு

வீடு வாடகைக்குண்டு.
அலுவலகங்களுக்கும் உகந்தது.
இல.95, கண்டி வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு:- 0772980578

## வீடு விற்பனைக்குண்டு

சுண்டுக்குளி, விதானையார் வீதியில் 1½ பரப்புக் காணியுடன் கூடிய வீடும், 3பரப்புக் காணியுடன் கூடிய வீடும் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 16/3, விதானையார் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். தொ.பே:-0776146434

## தேவை

புங்கன்குளம் (யாழ்.கல்லூரிக்கு அருகில்) A-9 வீதியில் அமைந்துள்ள ஐஸ்கிறீம் தயாரிக்கும் தொழிற்சாலைக்கு வேலைக்கு ஆள்கள் தேவை. (பெண்கள்)
தொ.பே: 0777215005

## பிறின்சி போல்ரி பாம்

நியு பேணாட்ஸ், கைபிளவுண் (சிவப்பின) முட்டைக் குஞ்சுகள் உடனடியாகப் பெற்றுக் கொள்ளலாம்.
இல.380, பாங்சால் வீதி, யாழ்ப்பாணம்.
இ.பீற்றர்தாஸ்:0776095749

## ஜயவிரு JAYAVIRU

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இலக்கம் 527
சீட்டிழுப்பு திகதி: 08.09.2010

வெற்றி எழுத்து: Y
வெற்றி இலக்கங்கள்: 05 27 34 57

| | கூட்டு | பரிசுத்தொகை | வெற்றி பெற்ற தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்துடன் 4 இலக்கங்களும் பொருந்தினால் | ரூ.18,882,676.80 | - |
| 1 பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 1,000,000/- | - |
| 2 பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்களும் பொருந்தினால் | ரூ. 50,000/- | 09 |
| 3 பரிசு | 3 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 2,000/- | 231 |
| 4 பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் பொருந்தினால் | ரூ. 1,000/- | 425 |
| 5 பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 100/- | 11280 |
| 6 பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் பொருந்தினால் | ரூ. 40/- | 6546 |
| 7 பரிசு | 1 இலக்கம் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 20/- | 163138 |
| 8 பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் பொருந்தினால் | ரூ. 20/- | 26134 |

இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்த தொகை ரூ.6,512,280.00

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சம் அல்லது அதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச்சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி அவசர : 2470662, 2470663
தேவைக்கு: 4607000, 2433631
இணையத்தளம்:www.nlb.lk

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ.19,512,568.00

## சிந்துநடைக் கூத்து

குருநகர்,செப்.10
பருத்தித்துறை தம்பசிட்டி அருள்மிகு பண்டாரி அம்மன் ஆலய முன்றிலில் இன்று வெள்ளிக்கிழமை இரவு 8 மணிக்கு 'மைந்தனைக் கழு வேற்றிய மகராசி' என்னும் புராண சிந்து நடைக் கூத்து பதினெட்டாவது தடவையாக மேடையேற்றப்படவுள்ளது.

இக்கூத்தை பருத்தித்துறை தம்பசிட்டி நவதுர்க்கா நாடகமன்ற அண்ணாவியாரும், யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் நிர்வாக உத்தியோகத்தருமான [illegible] தெரிவித்துள்ளார். (த-51)

## மங்களகரமான புதுக்கடைத் திறப்பு விழா அழைப்பு



சுன்னாகம் நகரில்....
எம்மால் புதிதாக ஸ்தாபிக்கப்பட்ட கட்டடத்தில்

தபோதரன் ஹாட்வெயார்
(கண்ணாடி, அலுமினியம் போட்டோ பிறேமிங்)

எனும் ஸ்தாபனம்
இன்று (10.09.2010)
வெள்ளிக்கிழமை
மு.ப. 9.30 மணி - 10.30 மணி
வரையுள்ள சுபவேளையில்
புதுப்பொலிவுடன் திறந்து
வைக்கப்படவுள்ளது
என்பதனை மகிழ்ச்சியுடன்
அறியத் தருகின்றோம்.



அத்தருணம்
நண்பர்கள், உறவினர்கள்,
வாடிக்கையாளர்கள்
அனைவரையும் வருக வருக
என வரவேற்கின்றோம்.

ப.இரவிச்சந்திரன்
(உரிமையாளர்)
இல.59, கே.கே.எஸ்.வீதி,
சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி தங்கக்கிண்ணக் கரப்பந்தாட்டம்; மாவட்ட ரீதியில் கோப்பாய் அணி சம்பியன்

வலி.வடக்கு, செப்.10

ஜனாதிபதி தங்கக் கிண்ணத்திற்கான மாவட்ட மட்டப் போட்டியில் கோப்பாய் பிரதேச செயலக அணி பலத்த போராட்டத்தின் பின் மாவட்ட சம்பியனாகியது.

பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் 40 ஆவது வருட நிறைவையொட்டி யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவு அணிகளின் ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டி யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இறுதிப் போட்டியில் கோப்பாய் பிரதேச செயலக அணியும் கரவெட்டிப் பிரதேச செயலக அணியும் மோதிக் கொண்டன.

ஐந்து சுற்றுக்கள் கொண்ட இந்தப் போட்டியில் ஒவ்வொரு சுற்றும் பரபரப்பு நிறைந்ததாகக் காணப்பட்டது. இரு அணிகளும் கடுமையாக மோதிக்கொண்டன.

முதல் இரண்டு சுற்றுக்களையும் கரவெட்டிப் பிரதேச செயலக அணி 25:17, 25:11 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்றது.

இறுதி மூன்று சுற்றில் ஒரு சுற்று வென்றால் கரவெட்டி பிரதேச செயலக அணி வெற்றி பெறும் நிலை காணப்பட்டது. எனினும் கோப்பாய் பிரதேச செயலக அணி இதற்கான வாய்ப்பைக் கொடுக்கவில்லை.

இறுதி மூன்று சுற்றுக்களையும் கோப்பாய் பிரதேச செயலக அணி 25:14, 25:23, 15:09 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்று சம்பியனாகியதுடன் தேசிய மட்டப் போட்டியில் விளையாடத் தகுதி பெற்றுள்ளது. (த-86)

## மூன்றாம் இடத்துக்கான ஆட்டம் நாளை

யாழ்ப்பாணம், செப்.10

தியாகிகள் தினத்தை ஒட்டி பத்மநாபா ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் ஆதரவுடன் நடத்திய உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் மூன்றாம் இடத்திற்கான ஆட்டம் நாளை சனிக்கிழமை மாலை 4 மணிக்கு உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழக அணி மோதும். (த-23)



பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் 40ஆவது வருடப் பூர்த்தியை ஒட்டி ஜனாதிபதி தங்கக் கிண்ணத்திற்காக யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு இடையே இடம்பெற்ற ஆண்களுக்கான கரப்பந்தாட்ட இறுதிப்போட்டியில் கரவெட்டி பிரதேச செயலகமும் கோப்பாய் பிரதேச செயலகமும் மோதிக்கொள்வதைப் படங்களில் காணலாம். (படங்கள்:நேசன்)

## மயிலிட்டி நியூகிற் வி.கவை வென்றது சாந்தை விநாயகர்

யாழ்ப்பாணம், செப்.10

பலத்த போராட்டத்தின் மத்தியில் மயிலிட்டி 'நியூகிற்' வியைாட்டுக் கழக அணியை வெற்றிகொண்டது பண்டத்தரிப்பு சாந்தை விநாயகர் விளையாட்டுக் கழக அணி.

யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டு சங்கம் நடத்தும் இவ்வாண்டுக்கான தாச்சிச் சுற்றுப்போட்டித் தொடரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை உடுவில் சிந்து விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்ற ஆட்டம் ஒன்றில் பண்டத்தரிப்பு சாந்தை விநாயகர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மயிலிட்டி நியூகிற் விளையாட்டுக்கழக அணி மோதியது.

இதில் இரண்டு அணியினரும் ஆட்டம் நிறைவில் 5:5 என்ற புள்ளிகளைப் பெற்றமையால் ஆட்டம் சமநிலையில் முடிவுற்றது.

வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்கு மேலதிகமாக 5 நிமிடம் வழங்கப்பட்டது. இதில் பண்டத்தரிப்பு சாந்தை விநாயகர் அணி ஆட்டம் நிறைவுபெற இரண்டு நிமிடம் இருக்கையில் ஒரு புள்ளியைப் பெற்றமையால் 6:5 என்ற புள்ளிகள் அடிப்படையில் மயிலிட்டி நியூகிற் விளையாட்டுக் கழக அணியை வெற்றிகொண்டது. (த-23)

## புகழரசி வியட்நாம் பயணம்



வலி.வடக்கு, செப்.10

இலங்கை கனிஷ்ட பெண்கள் கரபந்தாட்ட அணி 15 ஆவது ஆசியப் பெண்கள் கரபந்தாட்டப் போட்டியில் கலந்துகொள்வதற்காக நேற்று வியட்நாமுக்குப் புறப்பட்டுச் சென்றது. இந்த அணியில் யாழ்ப்பாணம் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் 19 வயதுப் பிரிவு மாணவியான பாலச்சந்திரன் புகழரசி என்ற மாணவியும் இடம்பெற்றுள்ளார்.

இந்த அணியில் இடம்பெற்ற முதலாவது தமிழ் வீராங்கனையாக புகழரசி காணப்படுகின்றார். கடந்த காலத்தில் குறிப்பாக 15 வயதுப் பிரிவில் கல்லூரி அணியில் இடம்பெற்ற இவரும் இவருடைய சகோதரி யும் தேசிய அணிக்கான முகாமில் இடம்பெற்றபோதிலும இறுதித் தெரிவில் புகழரசி மட்டும் தெரிவு செய்யப்பட்டு நேற்றிரவு வியட்நாமுக்கு பயணத்தை மேற்கொள்கின் றமை குறிப்பிடத் தக்கதாகும். (த-86)

## 6 ஓவர் கிரிக்கெட்

யாழ்ப்பாணம், செப்.10

கிறீன்பீல்ட் சனசமூக நிலையத்தின் 52 ஆவது ஆண்டு நிறைவையொட்டி அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையே 7 பேர் பங்குபற்றும் 6 ஓவர்களைக் கொண்ட மென்பந்துக் கிரிக்கெட் போட்டி நாளை சனிக்கிழமை காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை கொய்யாத்தோட்டம் சனசமூக நிலைய மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் 15 இற்கு மேற்பட்ட கழகங்கள் பங்குகொள்ளவுள்ளதாக போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (த-23)

## 4X100 மீற்றர் அஞ்சலோட்டம்; வவுனியா அணியின் சாதனை பதிவு

வலி.வடக்கு, செப்.10

வடமாகாண விளையாட்டுத் திணைக்களம் மாவட்ட அணிகளுக்கு இடையே நடத்திய தடகளப் போட்டிகளில் 4X100 மீற்றர் அஞ்சல் ஓட்டப் போட்டியில் வவுனியா மாவட்டத்தின் இவ்வாண்டுப் பெறுபேறு வடமாகாண மட்டத்தின் சிறந்த சாதனையாகப் பதிவு செய்யப்படவுள்ளது.

வடக்கு-கிழக்கு பிரிக்கப்பட்டதைத் தொடர்ந்து வடமாகாணத்திற்கான சாதனைப் பட்டியல் பதிவு செய்யும் முயற்சி முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கடந்த மூன்று வருடகால பெறுபேறுகளின் அடிப்படையில் இப்பதிவு மேற்கொள்ளப்படுகின்றது. 2007ஆம் ஆண்டு மன்னார் மாவட்ட அணி 46.5 செக்கனிலும், 2009ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் மாவட்ட அணி 46.0 செக்கனிலும் இந்த ஆண்டு வவுனியா மாவட்ட அணி 44.1 செக்கனிலும் ஓடிய பெறுபேறுகள் காணப்பட்டன.

கடந்த மூன்றாண்டுகளின் பெறுபேறுகளின் அடிப்படையில் வவுனியா மாவட்டத்தின் 44.1 செக்கன் வட மாகாணச் சாதனையாகப் பதிவு செய்யப்படவுள்ளது. (த-86)

## ஹொக்கிச் சங்கம் இன்று அங்குரார்ப்பணம்

வலி.வடக்கு, செப்.10

யாழ்.மாவட்டப் பாடசாலைகள் ஹொக்கிச் சங்கம் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் அமைக்கப்படவுள்ளது.

பாடசாலைகளுக்கான ஹொக்கிச் சங்கம் யாழ். மாவட்டத்தில் நீண்டகாலமாக அமைக்கப்படாமல் இருந்தமை பெரும் குறைபாடாகக் காணப்பட்டது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் நோயல் விமலேந்திரனின் முயற்சியினால் இச்சங்கம் உருவாக்கப்படுகின்றமை பாடசாலைகள் மட்டத்திலும், ஹொக்கி ஆர்வலர்கள் மட்டத்திலும் வரவேற்புக்குரியதாக அமைந்துள்ளது.

சங்கத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இது நாளை சனிக்கிழமை இடம்பெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-86)

## மெதடிஸ்த பெண்கள் பாடசாலையின் 6 அணிகள் தேசியப் போட்டிக்குத் தெரிவு

யாழ்ப்பாணம், செப்.10

வடமாகாண கல்வித் திணைக்களத்தினால் வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிகளில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையின் 6 அணி தேசிய ரீதியிலான போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளன.

அதிபர் திருமதி செ.சுந்தரேசன் மற்றும் விளை யாட்டுப் பொறுப்பாசிரியர்கள், பயிற்றுவிப்பாளர்கள் ஏனைய ஆசிரியர்களின் வழிகாட்டலின் கீழ் இவ்விளையாட்டுக் குழுக்கள் வெற்றிபெற்று வடமராட்சி வலயத்திற்குப் பெருமை தேடிக் கொடுத்துள்ளன.

தேசிய மட்டப் போட்டிக்குத் தெரிவான விளையாட்டுக் குழுக்களின் விவரங்கள் வருமாறு:-

* எல்லே (19 வயதுப் பிரிவு) - முதலாமிடம்.
* கரப்பந்தாட்டம்(15 வயதுப் பிரிவு) - முதலாமிடம்
* சதுரங்கம் (15 வயதுப் பிரிவு) - இரண்டாமிடம்
* கரபந்தாட்டம்(19 வயதுப் பிரிவு) - இரண்டாமிடம்)
* பூப்பந்தாட்டம்(19 வயதுப் பிரிவு) - மூன்றாம் இடம்.
* மென்பந்தாட்டம்(19 வயதுப் பிரிவு) - மூன்றாம் இடம். (த)




## தாச்சிச் சுற்றுப் போட்டி

யாழ்ப்பாணம், செப்.10

யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கத்தினரால் நடத்தப்படும் தாச்சி சுற்றுப் போட்டித் தொடரில் நாளை சனிக்கிழமையும் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் உடுவில் சிந்து விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குகொள்ளும் அணிகளின் விவரம் வருமாறு:-

**சனிக்கிழமை**

பிற்பகல் 4 மணிக்கு - சுன்னாகம் காந்தரூபன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மயிலிட்டி கண்ணகி விளையாட்டுக்கழக அணி மோதும்.

**ஞாயிற்றுக்கிழமை**

சுதுமலை ஐங்கரன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உடுவில் உதய சூரியன் விளையாட்டுக்கழகம் மோதும்.

பிற்பகல் 4.30 மணி - கட்டுடை விநாயகர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து உடுவில் சிந்து விளையாட்டுக் கழக அணி மோதும். (த-23)

## பல்கலைக்கழக அணி வெற்றி

யாழ்ப்பாணம், செப்.10

யாழ்ப்பாணம் நகர மைய றோட்டரிக் கழகம் யாழ்.மாவட்ட வலைபந்தட்ட சங்கங்களுக்கிடையே நடத்திய வலைபந்தாட்ட இறுதிப் போட்டியில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக அணி வெற்றிபெற்றது.

யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இறுதிப்போட்டியில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விளையாட்டு அணியும் சண்டிலிப்பாய் இந்து விளையாட்டுக் கழக அணியும் மோதிக்கொண்டன. இதில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக அணி 28:12 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கைக்குச் சிறந்த வழிகாட்டியாக அல்குர்ஆன் ரமழானில் அருளப்பட்டது

## ஏழைகளின் துயர நிலையை உணர்த்தும் தினம்

இறைவனுக்காகத் தவமிருந்து ஏழைகளுக்குத் தான தர்மம் வழங்கி மனக்குளிர்ச்சி பெறும் ஒரு தினமாக புனித ஈதுல் பித்ர் பெருநாள் விளங்குகின்றது.

இஸ்லாமிய வரலாற்றில் முஸ்லிம்களுக்கு முக்கியத்துவம் வாய்ந்தவையாக இரு பெருநாட்கள் காணப்படுகின்றன. அவற்றில் ஒன்று ஈதுல் பித்ர் எனும் நோன்புப் பெருநாள். மற்றையது ஈதுல் அல்ஹா எனும் ஹஜ்ஜூப் பெருநாள்.



நபி (ஸல்) அவர்கள் மக்காவிலிருந்து மதீனாவிற்கு ஹிஜ்ரத் சென்றபோது அங்குள்ள மக்கள் இரு பண்டிகைகளைக் கொண்டாடி வந்துள்ளனர். அதில் ஒன்று வருடாந்த விளையாட்டுப் போட்டியாகும்.

இதனைச் செவியுற்ற நபியவர்கள் உங்களுக்கு இதனைவிடச் சிறந்த இரு நாட்களை அல்லாஹ் உங்களுக்கு தேர்வு செய்துள்ளான். அதில் ஒன்று ஈகைத் திருநாள் மற்றையது தியாகத்திருநாள் என நபியவர்கள் கூறியுள்ளதாக மாலிக் (ரழி) அறிவித்துள்ளதாக அபூதாவூத், பைஹகி, நஸயீ ஆகிய நூல்களில் இடம்பெற்றுள்ளன.

இந்த வகையில் ஒரு மாத காலமாக பகல் முழுதும் அல்லாஹ் வுக்காக பசித்திருந்தும், தாகித்திருந்தும் இரவெல்லாம் கண்விழித்து நல்லமல்கள் செய்து மனிதனுக்கும் அடியானுக்கும் நேரடித் தொடர்புடையதான ஒரு வணக்கத்தின் இறுதி நாளில் பிறை கண்டு கொண்டாடப்படும் ஒரு பெருநாளாக இந்த ஈதுல் பித்ர் எனும் பெருநாள் அனைத்து முஸ்லிம்களாலும் கொண்டாடப்படுகின்றது.

இந்தத் தினத்தில் நோன்பு நோற்பது தடுக்கப்பட்டுள்ளதுடன் இத்தினத்தில் யாரும் பசி பட்டினியுடன் இருக்கக்கூடாது எனவும் கூறிய நபியவர்கள் பித்ரா கடமை ஒவ்வொருவர் மீதும் கடமை எனவும் அறிவித்தார்கள்

இந்தப் பெருநாளின் முக்கியத்துவம் ஏழையவர்களின் கஷ்ட நிலையை பணம் படைத்த தனவந்தர்களுக்கும், ஏனையவர்களுக்கும் ஒரு முக்கிய தினமாகும்.

இந்தப் பெருநாளில் ஏழையவர்களுக்கு வாரி வழங்கும் தன்மையை உணர்வுபூர்வமாக வெளிக்கொணரும் ஒரு பெருநாளாக இது விளங்குகின்றது.

இந்த வகையில் பித்ரா கடமையின் மூலம் இஸ்லாம் ஏழை எளியவர்களின் மீது எவ்வளவு கருணை காட்டுகின்றது என்பது புலனாகின்றது.

ஏழைகள் விடயத்தில் இவ்வளவு இறுக்கமாக இருப்பதினால் சமூகத்தில் கையேந்தி யாசித்து வாழும் நிலைமை போக்கப்பட்டு பொருளாதார விருத்தியும் முன்னேற்றமும் ஒற்றுமையும் ஒருவருக்கொருவர் உதவும் நற்பழக்க வழக்கங்களையும் முழு மனித சமுதாயத்திற்கும் பாடம் புகட்டிக்காட்டுகின்றது இஸ்லாம்.

நோன்புப் பெருநாளின் முக்கியத்துவம் ஏழை மக்களுக்கு உதவுவதாகும். குறிப்பாக புனித ரமழானில் முழு நோன்பையும் நோற்றவர்கள் தாம் நோற்ற நோன்புகளில் ஏற்படும் சிறிய தவறுகள் நீங்கி அனைத்து நோன்புகளும் பூரணத்துவம் உடையதாக ஆகுவதற்கும் ஏழைகளின் பசி பட்டினியை அறிந்து கொள்வதற்கும் பித்ரா எனும் ஏழைகளுக்கு வாரி வழங்கும் முறை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

குறிப்பாக நோன்பு நோற்கச் சக்தியற்ற அனைவரும் கட்டாயம் கொடுக்க வேண்டும். இது தற்போதைய அளவுகளின்படி ஒருவருக்கு இரண்டரைக் கிலோ தானிய வகைகளில் நோன்பு ஆரம்பித்த தினத்திலிருந்து கொடுக்கவேண்டும்.

குறிப்பாக நோன்புப் பெருநாள் தொழுகைக்கு முன் இதனை கட்டாயம் கொடுக்கவேண்டும். அவ்வாறு கொடுக்கப்பட்டால் அது ஸலாதுல் பித்ராவாக கணிக்கப்படும். மாறாக நோன்புப் பெருநாள் தொழுகைக்குப்பிறகு கொடுக்கப்பட்டால் அது ஸதகாவாகவே கருதப்படும்.

இஸ்லாத்தைப் பொறுத்தமட்டில் சமூக மேம்பாட்டிற்கும் இஸ்லாமிய வளர்ச்சிக்கும் எடுத்துக்காட்டாகவே விளங்குகின்றது. மாறாக யாரையும் கட்டாயப்படுத்தவோ அல்லது கஷ்ட நிலைக்கு உட்படுத்தவோ அல்லது அடிபணிய வைக்கவோ உருவான மார்க்கம் இல்லையென்பதை அதன் போதனைகள் கோடிட்டுக் காட்டுகின்றன.

இந்த வகையில் மனிதனின் சகல வாழ்க்கைக்கும் வழிகாட்டியாகவே புனித அல்-குர்ஆன் நபியவர்களுக்கு புனித ரமழானில் இவ்வையகத்திற்கு அருளப்பட்டது.

அல்-குர்ஆனின் மூலம் முழு மனித சமுதாயமும் நேர்வழியைப் பெற்றுக்கொள்ளலாம்.

அதனைப் பின்பற்றும் எந்தவொரு மனிதனும் வழி தவறி விடமாட்டான். மாறாக அல்லாஹ்வின் அன்பையும் நேர்வழியையுமே அடைவான் என்பதில் எதுவித சந்தேகமும் இல்லை.

இந்த சிறப்பான மாதத்தின் மூலம் ஒரு மனிதன் தனது பாவச்செயல்களில் இருந்து மீட்சிபெற்று தூய மனிதனாக மாறுவதற்கான நல்லதோர் பயிற்சிக் களமாகவும், காலமாகவும் புனித ரமழான் விளங்குகின்றது. அல்லாஹ்வுக்காக இஸ்லாமிய ஐம்பெரும் கடமைகளில் ஒன்றை நிறைவு செய்து அதன் இறுதியில் தான் செய்த நற்செயல்களின் சந்தோஷத்தை ஈதுல் பித்ர் எனும் நோன்புப்பெருநாள் மூலம் மனக்குளிர்ச்சி பெறுகின்றான்.

எனவே இத்திருநாளில் அல்லாஹ் எமது பாவங்களை மன்னித்து ஈருலகிலும் நம் அனைவருக்கும் நற்பாக்கியத்தை தந்தருள்வானாக. (ஆமீன்).

**சுந்தர் எம்.ஜாவிட்**


## ජාතික සම්පත

ஜாதிக சம்பத Jathika Sampatha

சீட்டிழுப்பு இலக்கம் - 54
திகதி - 08.09.2010

உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றியீட்டும் ஆங்கில எழுத்து **V** அதிர்ஷ்ட இலக்கம் **04** வெற்றி இலக்கம் **0 3 5 8 7**

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | V | 04 | 0 | 3 | 5 | 8 | 7 | ரூ. 17,240,343.00 | பரிசு - |
| 1 பரிசு | | 04 | 0 | 3 | 5 | 8 | 7 | ரூ. 2,000,000.00 | பரிசு - |
| 2 பரிசு | | | 0 | 3 | 5 | 8 | 7 | ரூ. 100,000.00 | பரிசு 04 |
| 3 பரிசு | | | | 3 | 5 | 8 | 7 | ரூ. 10,000.00 | பரிசு 28 |
| 4 பரிசு | | | | | 5 | 8 | 7 | ரூ. 1,000.00 | பரிசு 269 |
| 5 பரிசு | | | | | | 8 | 7 | ரூ. 50.00 | பரிசு 2632 |
| 6 பரிசு | | | | | | | 7 | ரூ. 20.00 | பரிசு 25268 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7 பரிசு | | | 0 | 3 | 5 | 8 | | ரூ. 1,000.00 | பரிசு 26 |
| 8 பரிசு | | | 0 | 3 | 5 | | | ரூ. 100.00 | பரிசு 268 |
| 9 பரிசு | | | 0 | 3 | | | | ரூ. 50.00 | பரிசு 2659 |
| 10 பரிசு | V | | | | | | | ரூ. 20.00 | பரிசு 10629 |
| 11 பரிசு | V | 04 | | | | | | ரூ. 100.00 | பரிசு 1221 |

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,106,390.00

வெற்றிபெறும் டிக்கட்கள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ரூ5 இலட்சம் அல்லது அதற்குக் கூடிய பரிசுத் தொகைகள் அரச வரிகளுக்கு உட்படும். பரிசைப் பெற்றுக்கொள்வதற்கு, தேசிய அடையாள அட்டையைச் சமர்ப்பிப்பது கட்டாயமானது.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663 அவசர அழைப்பிற்கு: 2473360, 2433631
இணையத்தளம்: www.nlb.lk

அடுத்த சனிக்கிழமை சுப்பர் பரிசு ரூ. 17,577,737.00


## சமய சந்திதிகளில்

கொழும்புத்துறை, செப். 10

யாழ்.அஞ்சனந்தாழ்வு புனித ஆரோக்கிய மாதா ஆலய வருடாந்தத் திருவிழா நடைபெற்று வருகின்றது.

நற்கருணை பெருவிழா நாளை சனிக்கிழமை மாலை 5 மணிக்கும் திருநாள் திருப்பலி நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிக்கும் இடம்பெற்று திருச்சொரூப பவனியும் ஆசீரும் நடைபெறும். (த-135)

* * *

கொழும்புத்துறை, செப். 10

துன்னாலை புனித சதாசகாய மாதா ஆலய வருடாந்தத் திருவிழா நடைபெற்று வருகிறது.

நாளை சனிக்கிழமை மாலை 5 மணிக்கு நற்கருணைப் பெருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிக்கு திருவிழாத் திருப்பலியும் திருச்சொரூப ஆசீரும் இடம்பெறும். (த-135)

* * *

கொழும்புத்துறை, செப். 10

மல்லாகம் புதுமைமாதா ஆலய வருடாந்தத் திருவிழாவில் நாளை சனிக்கிழமை மாலை 5 மணிக்கு நற்கருணைப் பெருவிழாவும் நாளை மறுதினம் காலை 6.30 மணிக்கு திருநாள் திருப்பலியும் திருச்சொரூப பவனியும் ஆசீரும் இடம்பெறும். (த-135)


## நொதேண் ஸ்போட்ஸ் கிளப்

**HORSE + DOG RACE BETTING CENTRE**

கொமிஷனுக்கு பந்தயச் சிட்டைகள் எடுப்பதற்கு ஆள்கள் தேவை. கொமிசனை நேரில் பேசலாம். உடனே வரவும்.

கிறவுண் அன்ட் அங்கர் (CROWN AND ANCHOR) 11.09.2010 சனிக்கிழமை தொடங்கும்.

**தொடர்பு: 70, சட்டநாதர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.**
**தொ.பே. 2223873**


## மரண அறிவித்தல்

### திருமதி இராசையா பாக்கியம்



மூளாயைப் பிறப்பிடமாகவும் 23, கச்சேரி ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசையா பாக்கியம் நேற்று (09.09.2010) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசையாவின் அன்பு மனைவியும் திருமதி அன்னரத்தினம், காலஞ்சென்ற தருமராசா (தருமு) மற்றும் செல்வராஜா (லண்டன்), தவராஜா (தவம் - வர்த்தகர்) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை, மாரிமுத்து, முத்துக்குமாரு, மீனாட்சி, இராசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் மயில்வாகனம் (இளைப்பாறிய ஊழியர், இல.மின்சார சபை), சுகிர்தா, அன்ரனீற்றா (பவளம்) ஆகியோரின் அன்பு மாமியும் பிரபாகரன் - லோகேஸ்வரி (ஜேர்மனி), கீதா - சுரேஸ், சகிலா - ரமேஸ் (நோர்வே), யதுசா - விஜயகுமார் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் தேனுகன், கீர்த்திகன், கார்த்திகன், விதுசன், மிதுனா, மிதிலன், வர்ணன், மஞ்சுதன், கல்கிதன், திரஷ்வி, பிரகவி ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.09.2010) வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் துண்டி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

23, கச்சேரி ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
T.P: 222 5775, 222 9591

தகவல்: தவராஜா (தவம் - மகன்), அன்னரத்தினம் (மகள்).

## 25 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**சாமுவேல் அருணோதயராஜா**
(முன்னாள் கணக்காளர், சுன்னாகம் மக்கள் வங்கி)

தோற்றம் 10.06.1941
மறைவு 10.09.1985

அன்பிற்கு இலக்கணமாய் பண்பின் ஒளிவிளக்காய்
பாசத்தின் இருப்பிடமாய் எம்முடன் வாழ்ந்து
எம் நல்வாழ்வுக்கு அடித்தளமிட்டவரே
25 ஆண்டுகள் ஓடி மறைந்தாலும் ஒவ்வொரு
விடியலிலும் உங்கள் நினைவுகளைச் சுமந்து
கனத்த இதயங்களோடு உங்கள் ஆத்ம
சாந்திக்காக இறைவனை வேண்டி நிற்கும்

*அம்பலவாணர் வீதி, உடுவில்.* (103145)

உங்கள் மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொழும்பில் லஷ்கர் இயக்க ஆயுதப் பயிற்சி முகாம்:

# பாக். தீவிரவாதியின் வாக்குமூலத்தால் பரபரப்பு! இந்தியாவிடம் விவரம் கோருகிறது இலங்கை!!

கொழும்பு, செப். 10

பாகிஸ்தானின் லஷ்கர்-இ-தொய்பா தீவிரவாதிகள் கொழும்பில் ஆயுதப் பயிற்சி முகாம் ஒன்றை நடத்தி வருகின்றார்கள் என்று அந்த இயக்கத்தைச் சேர்ந்த தீவிர வாதி ஒருவர் இந்தியாவின் மராட்டிய மாநிலப் பொலிஸாருக்கு வாக்குமூலம் வழங்கி இருக்கின்றார் என்று வெளியாகி இருக்கும் செய்திகளை அடுத்து இலங்கை மிகவும் உஷார் அடைந்துள்ளது. இது தொடர்பான பூரண தகவல்களைப் பெற்று அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் புதுடில்லியில் உள்ள இலங்கைத் தூதரகத்துக்கு இலங்கை வெளிவிவகார அமைச்சு உடனடியாக அறிவுறுத்தியுள்ளதுஎன்று தெரிவிக்கப்படுகிறது.

தூதரக அதிகாரிகள் இந்தியப் பாதுகாப்புத் துறை அதிகாரிகளுடன் இது தொடர்பான பேச்சுகளை ஏற்கனவே ஆரம்பித்துள்ளார்கள். இந்தியாவின் மராட்டிய மாநிலப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருக்கும் தீவிரவாதி ஒருவர் அவரது வாக்குமூலத்தில் இந்த அதிரடித் தகவலை வழங்கியுள்ளார்.

மராட்டிய மாநிலம் புனேயில் உள்ள பேக்கரி ஒன்றில் கடந்த பெப்ரவரி மாதம் 13 ஆம் திகதி குண்டுத் தாக்குதல் ஒன்று நடத்தப்பட்டது. இதில் 17 பேர் உயிர் இழந்தனர். இதுதொடர்பாக மராட்டியப் பொலிஸார் விசாரணை நடத்தி குண்டு வைத்தவர்களைக் கண்டு பிடித்துள்ளார்கள்.

இவர்களில் ஒருவர் ஹிமாயத் பெய்க். இவர் பாகிஸ்தானின் லஹ்கர்-இ-தொய்பா இயக்கத்தைச் சேர்ந்தவர். இலங்கையின் தலைநகர் கொழும்புக்கு வந்து அங்குள்ள லஹ்கர்-இ-தொய்பா இராணுவப் பயிற்சி முகாமில் பயிற்சிகள் பெற்றார் என அவர் பொலிஸாருக்கு தெரிவித்துள்ளார்.

லஷ்கர்-இ-தொய்பா தீவிரவாதிகள் கொழும்புக்கு சுற்றுலாப் பயணிகள் போல செல்கின்றனர் என்றும் இரு வகையான இராணுவப் பயிற்சிகளை இங்கு பெறுகின்றனர் என்றும் தானும் அவ்வாறே பயிற்சிகளைப் பெற்றார் என்றும் தீவிரவாதி பெய்க் தெரிவித்துள்ளார். ஆயினும் கொழும்பில் எந்த இடத்தில் இப்பயிற்சி முகாம் உள்ளது? எத்தனை பேருக்குஅங்கு பயிற்சிகள் அளிக் கப் பட்டன போன்ற விவரங்களை பெய்க் இன்னும் தெரிவிக்கவில்லை.

# மக்கள் வழங்கிய ஆணையை எட்டி உதைத்துள்ளது அரசு

கொழும்பு, செப். 10

அரசு தனக்குக் கிடைத்த மக்கள் ஆணையை எட்டி உதைத்துள்ளது என்று ஜே.வி.பி. குற்றம்சுமத்தியுள்ளது.

அரசு மக்களின் ஆணையை காலால் உதைத்தது, 18 ஆவது அரசமைப்புத் திருத்தத்தை கொண்டு வந்தது மாத்திரமல்லாது, அந்தத் திருத்தங்கள் குறித்து மக்கள் மத்தியில் கருத்தாடல்களை ஏற்படுத்த இடமளிக்கவில்லை எனவும் ஜே.வி.பியின் அரசியல் சபை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

மேலும் அந்த அறிக்கையில் -

அரசின் ஜனநாயக விரோத, சர்வாதிகார பயணத்தை உறுதிப்படுத்தும் அரசமைப்புத் திருத்தங்கள் நேற்றுமுன்தினம் நிறைவேற்றப்பட்டன. இலஞ்சம், சலுகைகள் என பல சலுகைகளை வழங்கி, எதிர்க் கட்சியில் இருந்து தம் பக்கம் இழுத்துக் கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டு அரசு அதனை நிறைவேற்றியுள்ளது.

அது மாத்திரமல்லாது கடந்த தேர்தல்களில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழித்து, புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கே அரசு மக்கள் ஆணையைக் கோரி நின்றது - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-சி)

## உயர்நீதிமன்றில் விஜித ஹேரத் உரிமை மீறல் மனுத் தாக்கல்

ஜனநாயக தேசியக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் விஜித ஹேரத் நேற்று உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

காலியில் கடந்த 12 ஆம் திகதி நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தின்போது பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட பலாத்காரம் தொடர்பாகவே அவர் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். இதன் மூலம் தமது உரிமைகள் மீறப் பட்டுள்ளன என அந்த மனுவில் குறிப் பிடப்பட்டுள்ளது. (சி)

## செட்டி குளத்தில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளியிட்டுள்ளனர் எனக் கூறப்படுகிறது.

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து இவர் செட்டிக்குளத்தில் உறவினர்களுடன் வசித்து வந்த நிலையிலே கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவர் முல்லைத்தீவைச் சேர்ந்தவர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஒ-சி)

## பல்டி அடித்த.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டியலில் போட்டியிட்டு வெற்றிபெற்ற லக்ஷ்மன் செனவிரட்ண நேற்று முன்தினம் அரசு டன் இணைந்தார்.

மஹியங்கனை தொகுதியைச் சேர்ந்த இவர் அங்கு நடைபெறும் ஊர்வலமொன் றில் கலந்துகொள்வதற்காகவே ஹெலிக்கொப்டரில் சவாரி செய்தார். (அ-சி)

## தொகுதி முறை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பித்தார்.

இனிமேல் உள்ளூராட்சிச் சபைகளின் தேர்தல்கள் புதிய முறைப்படி நடத்தப் படும். - என்றார். (ஒ-சி)

## ரம்ழானில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்கால சுபீட்சத்துக்காக அல்லாஹ் அருள்புரிவானாக.

நோன்புப் பெருநாளைக் கொண்டாடும் சகல முஸ்லிம் மக்களுக்கும் எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம் - என்றுள்ளது. (ஒ)

## ஆயிரம் கைதிகளைத்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைதியாக வைத்து பல ஆயிரங்கள் செலவிட வேண்டியிருக்கின்றது.

அத்துடன் யாழ்ப்பாணம், போகம்பறை, வெலிகடை, காலி, மாத்தறை முதலான சிறைகள் நகரங்களில் இருப்பதனால் இட நெருக்கடி காணப்படுகின்றது. எனவே இவற்றை வேறு இடங்களுக்கு மாற்றவும் உத்தேசிக்கப்பட்டிருக்கின்றது"-என்றார்.(ஒ-ஐ)

## கட்சியிலிருந்து நீக்கப்பட்டால்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐக்கிய தேசியக் கட்சியின் தற்போதைய பிரதித் தலைவர் கரு ஜயசூரிய சில வருடங்களுக்கு முன் அரசுடன் இணைந்தமைக்காக கட்சி அங்கத்துவத்தை இழக்க வேண்டியிருக்கும் எனவும் ஏர்ள் குணசேகர தெரிவித்தார்.

இதேவேளை, கட்சி அங்கத்துவத்திலிருந்து நீக்கப்பட்டால் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளத் தயங்கப்போவதில்லை என அரசுடன் இணைந்துகொண்ட ஐ.தே. கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார எச்சரித்துள்ளார்.

அத்துடன், மேலும் பல ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும், அரசுடன் இணைவர் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் கூறினார்.

ஏர்ள் குணசேகர, மனுஷ நாணயக்கார, அப்துல் காதர், லக்ஷ்மன் செனவிரத்ன, நில்வல ஜயசிங்க, உபேக்ஷா சுவர்ணமாலி ஆகிய 6 ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் அரச தரப்புடன் இணைந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ஒ-சி)

## கூட்டமைப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் மக்களின் பிரதிநிதிகள் அரசமைப்புத் திருத்தத்துக்கு ஆதரவாக வாக்களிக்கவில்லை. அப்படியானால் தமிழ் மக்கள் இந்தத் திருத்தத்தை விரும்பவில்லை என்று கூறலாமா? இவ்வாறு அந்த வெளிநாட்டு செய்தியாளர் கேள்வி எழுப்பியிருந்தார். (ஒ-சி)

## நம்பி வந்த .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த அரசமைப்புத் திருத்தத்தின் மூலம் வழி செய்யப்பட்டுள் ளது. அவரைத் தெரிவு செய்வதா இல்லையா என மக்களே தமது வாக்குகளால் தீர்மானிப்பர்.இது ஜனநாயக விரோதமா னதா?

தேர்தல் ஆணைக்குழு, பொலிஸ் ஆணைக்குழு தொடர்பாகவும் எதிர்க்கட்சிகள் விஷமப் பிரசாரம் செய்கின்றன. இந்த ஆணைக்குழுக்கள் இயங்குவதற்கு இருந்த தடைகள் இத்திருத்தத்தின் மூலம் நீக்கப்பட்டுள்ளன.

இத்தடைகளை நீக்குவதற்காகவே 17 ஆவது அரசமைப்புத் திருத்தத்தில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. நாட்டின் தேவைக்கேற்பவே அரசமைப்பில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். இந்திய அரசமைப்பில் 400திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. அரசமைப்புத் திருத்தங்கள் மக்களின் நலன் கருதியவையாக இருக்க வேண்டும்.

ஜனாதிபதித் தேர்தலில் மூன்றாவது முறையாகவும் அதற்கு மேலும் போட்டியிடுவது ஜனநாயக விரோதமா? முப்பது வருடங்கள் நீடித்த பயங்கரவாதத்தைப் பூண்டோடு ஒழித்து பிரிந்து கிடந்த நாட்டை ஒன்றுபடுத்தியவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. அத்துடன் உலகில் பொருளாதார வீழ்ச்சி காரணமாகப் பல நாடுகள் தடுமாற்றமடைந்தபோது இலங்கையில் அந்தத் தாக்கம் ஏற்படாமல் பாதுகாத்தவர் அவர். அவருக்கு மூன்றாவது தடவையாகவும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் சந்தர்ப்பம் வழங்குவது ஜனநாயகத்துக்கு விரோதமான செயலா?

ஒருவர் மூன்றாவது தடவையாகப் போட்டியிட்டு வெற்றிபெறுவது இலே [illegible] வில் அவர் சேவை செய்திருக்கவேண்டும். - இவ்வாறு அவர் சொன்னார்.(அ-சி)

## வீடு விட்டு வீதிக்கு சென்ற முதலாம் ஆண்டு நினைவு நாள்



புதிய உயர்கல்வி அதிபர்களான திரு. திருமதி சண்முகநாதன் - அருள்நங்கை அவர்களின் அன்புச்

### செல்வன் சந்துதன்

ஒரு ஆண்டு அல்ல
நூறு ஆண்டுகள் சென்றாலும்
உன் துன்பம் மாறாது ஐயா.
பத்தாம் திகதி இந்நாளில்
வாழ்விடம் விட்டு வீதியில்
பேசா மடந்தையாய் சென்றாய்
மீள் துயில் நிரந்தர உறக்கத்தை
தேடி நீ சென்றாயே!
நாம் எல்லோரும்
நடைப்பிணமாக வந்தோம்.
நீ எங்களை விட்டு சென்றாலும்
எம் கண்களில்தான் ஐயா நிற்கின்றாய்.

உன் துன்பத்தில் துடிக்கும் :-
அன்புச் சித்தப்பா, சகிலா சித்தி,
அன்புத் தம்பி அபிராம், தரணிதரன்

லோட்டன் வீதி,
மானிப்பாய்.

## 2 ஆம் ஆண்டு நினைவலைகள்



### சிவராமலிங்கம் நந்தாஜினி

மலர்வு: 06.04.1988
உதிர்வு: 10.09.2008

எங்கள் அன்புச் செல்வமே
குளிர் விழிகள் ஒளி வீசியது
அர்த்தமற்று ஒளி இழந்தது
உனது ஒலி என்றும் ஒலித்துக்
கொண்டுதான் இருக்கின்றது
உனது ஆத்மா சாந்தி பெற!

கைதடி மேற்கு,
கைதடி.
(103074)
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### கந்தையா சுப்பிரமணியம்

பன்னாலை, நாவலடியைப் பிறப்பிடமாகவும் நெருஞ்சியோலையை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சுப்பிரமணியம் நேற்று (09.09.2010) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் இராசம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சிவராணியின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான கந்தையா சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் மகனும் காலஞ்சென்றவர்களான கந்தையா ஆசைப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்றவர்களான காமாட்சிப்பிள்ளை, வைரமுத்து, மீனாட்சிப் பிள்ளை, சின்னத்தங்கம் ஆகியோரின் சகோதரனும், மகேஸ்வரி, நகுலேஸ்வரி, திருஞானசம்பந்தமூர்த்தி, சிவசோதிலிங்கம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 09.09.2010 வியாழக்கிழமை கேணிப்பிட்டி மயானத்தில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நெருஞ்சியோலை,
பன்னாலை.
(103168)
தகவல் :
மனைவி - இராசம்மா.

### விசுவநாதன் மேகரன்



கொக்கன், கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் துரை வீதி, இணுவிலைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட விசுவநாதன் மேகரன் நேற்று (09.09.2010) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா விசுவநாதன் மற்றும் சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகனும் மேகலா, கருணாகரன் ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்ற இராசா மற்றும் சரஸ்வதி (ராணி) யின் மருமகனும் காலஞ்சென்ற பாலசிங்கம் மற்றும் புஸ்பகாந்தி காலஞ்சென்றவர்களான கந்தையா, சாரதாதேவி, கிருஸ்ணராசா மற்றும் சிவபாக்கியம் ஆகியோரின் மருமகனும் கருணாகரன், கேதீஸ்வரி, தயாபரன் - சர்வேஸ்வரி, நந்தீஸ்வரன் - கலையரசி, பார்த்தீபன் ஆகியோரின் மைத்துனரும் யாகவி, லக்ஷனின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.09.2010) வெள்ளிக்கிழமை மு.ப. 9 மணியளவில் அவரது இல்லத் தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

துரை வீதி,
இணுவில் தெற்கு,
இணுவில். T.P.:0770785658
(103166)
தகவல் :
இராசா சரஸ்வதி
(ராணி).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரு மனமும் ஒரு மனமாகும் திருமண நல்வாழ்த்து



இன்று (10.09.2010)
வெள்ளிக்கிழமை
வடகோவை
ஸ்ரீ சக்கராழ்வார் தேவஸ்
தானத்தில் மங்கல நாண்
பூட்டி திருமண பந்தத்தில்
இணையும்

### ரூபதாஸ் யாழினி

தம்பதியினரை பெறவேண்டிய செல்வங்கள் அனைத்தும் பெற்றுப் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர் :
மிதிலா வெளியீட்டகம், நீர்வேலி.
கஜமுகா காகிதச்சோலை, நீர்வேலி.

(103155)

## அடிக்கல் நடும் விழா



புங்குடுதீவு, 4 ஆம் வட்டாரம் பிட்டியம்பதி ஸ்ரீகாளிகா பரமேஸ்வரி அம்பாள் ஆலய சிவலைப்பிட்டி சனசமூக நிலைய அன்னதான மண்டப (100×25) அடிக்கல் நடும் வைபவம் இன்று (10.09.2010) வெள்ளிக்கிழமை காலை 8.48 - 9.48 வரையுள்ள சுபவேளையில் நடைபெற உள்ளது.

சிவலைப்பிட்டி சனசமூக நிலைய
அன்னதான சபையினர்.

(சி-570757)

## மணமக்கள் தேவை

1) 79 இல் பிறந்த செவ்வாய் இல்லாமல் 55¼ பாவமுடைய கனடா பிரஜா உரிமை பெற்ற மணமகளுக்கு கனடா வில் உள்ள மணமகன் தேவை.

2) 85 இல் பிறந்த செவ்வாய் இல்லாமல் 38 கிரக பாவமுடைய சுவிஸ் பிரஜா உரிமைபெற்ற மணமகளுக்கு நன்கு படித்த மணமகன் தேவை.

3) 75 இல் பிறந்த செவ்வாய் இல்லாமல் 1½ பாவமுடைய கனடா பிரஜா உரிமை பெற்ற எலற்றோனிக்கல் இஞ்சினியருக்கு, படித்த மணமகள் தேவை.

4) 66 இல் பிறந்த 2 இல் செவ்வாய் 62 பாவமுடைய கனடா பிரஜா உரிமை பெற்ற மணமகனுக்கு படித்த அழகான மணமகள் தேவை. மேலும் டாக்டர்கள், இஞ்சினியர்கள், பட்டதாரி ஆசிரியர்கள், லிகிதர்கள், வர்த்தகர்கள், வெளிநாட்டில் பிரஜாவுரிமை பெற்ற மணமக்களும் பாவம் கூடியதும் செவ்வாய் பாவமுள்ள அரச உத்தியோத்தரும் சைவபோசனமுள்ள அரச உத்தியோகத்திலுள்ள மணமக்களும் எம்மிடமுள்ளனர்.

தொடர்பு:
கமலக்கண்ணன் திருமணசேவை,
இல.171/7, மனோன்மணி அம்மன் கோயிலடி,
நல்லூர் வடக்கு வீதி, நல்லூர்.
தொ.பே.: 0214920266, 0776070862

## கும்பாபிஷேகம்

காரைநகர், பயிரிக்கூடல் சுப்பிரமணிய சுவாமி ஆலய கும்பாபிஷேகம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 7.24 மணி தொடக்கம் 8.24 மணி வரையுள்ள சுப நேரத்தில் நடைபெறவுள்ளது. (204)

## நாளை மின் தடை

பருத்தித்துறை- யாழ்ப்பாணம் பிரதான வீதி அகலமாக்கும் பணிகள் இடம்பெற்று வருவதனால் உயரழுத்த மின் கம்பங்களை இடமாற்றி நடவேண்டி உள்ளது. இதன் காரணமாக நாளை சனிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 6 மணிவரை பின்வரும் பிரதேசங்களில் மின்சாரம் தடைப்பட்டிருக்கும்.

புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு மற்றும் வடமராட்சிப் பிரதேசம் முழுவதும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும். (ஒ-15)

## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2154 திகதி 08 - 09 - 2010

ஆங்கில எழுத்திற்கும் H

வெற்றி எண்கள் 26 37 52 67 போனஸ் இல: 07

ஜக்பொட் பரிசு ரூ. 12,513,425/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 194104 | 20/- | 3,882,080/- |
| 2 இல | 13960 | 100/- | 1,396,000/- |
| 3 இல | 293 | 1,000/- | 293,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 7759 | 40/- | 310,360/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 522 | 1,000/- | 522,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 11 | 10,000/- | 110,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 12,513,425/- | - |
| 1 இல + போனஸ் இல | 9276 | 100/- | 927,600/- |
| 2 இல + போனஸ் இல | 440 | 500/- | 220,000/- |
| 3 இல + போனஸ் இல | 04 | 100,000/- | 400,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 340 | 200/- | 68,000/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 20 | 1,500/- | 30,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| மொத்தம் | | | 9,159,040/- |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக சேர்க்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 10 | 60,000/- | 600,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 226740 | | 9,759,040/- |

ரூ. 60,000/- வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 10 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| நுவரேலியா | 202271709-9-27 |
| கொழும்பு | 202276454-3-01 |
| காலி | 202276533-9-36 |
| கொழும்பு | 202277295-6-46 |
| அம்பாறை | 202273863-9-15 |
| மட்டக்களப்பு | 202275274-6-05 |
| இரத்தினபுரி | 202274036-6-28 |
| கம்பஹா | 202272862-6-05 |
| கேகாலை | 202274615-1-02 |
| மாத்தறை | 202270507-0-32 |

வரும் சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு

ரூ. 13,043,225/-

பச்சை நிற டிக்கட்டுகள் 2010 செப்டம்பர் 11 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 06 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே: 2333546/7


## Computer Express
Institute of Information Technology

6வது ஆண்டு நிறைவை முன்னிட்டு
அதிரடிக் கட்டணக் கழிவு

| | | |
|---|---|---|
| * Dip. in computer science. | 4 Months | 1000/= |
| * Dip. in web page Designing. | 4 Months | 1000/= |
| * Dip. in Graphic Designing. | 4 Months | 1000/= |
| * Dip. in Desk top publishing. | 4 Months | 1000/= |
| * Dip. in Hardware Engineering. | 3 Months | 1000/= |
| * Dip. in Auto CAD. | 3 Months | 1000/= |
| * Dip. in MicroSoft Office. | 3 Months | 1000/= |
| * Dip. in Acc.Package. (MYOB,Accpac,Q Book,Tally) | 3 Months | 1000/= |
| * Honours Dip. in computer science. | 5 Months | 1000/= |

20/09/2010 க்கு முன்னர் பதிவுகளுக்கு முந்துங்கள்

Advances Courses
Diploma in Video Editing 4Months 1000/=
Diploma in Multimedia 4Months 1000/=

Batch i -11/09/2010
Batch ii -12/09/2010 } 9-10 am
Batch iii -13/09/2010
Batch iv -15/09/2010 } 3-4 pm

சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ், வரையறுக்கப்படாத கணனிப் பயிற்சி
கொழும்பில் இருந்து வருகை தரும் பிரபல விரிவுரையாளர்களினால் வகுப்புக்கள் நடாத்தப்படும்.

No.15 ,Sirampiyady lane
off Stanly Road,
(Cosy Hotel 2nd floor)
Jaffna.
021 222 8250, 0777222422,
0774907444

மேலும் எமது நிறுவனத்தில்...
Fast track Courses ஆக
1Week course / 1 Month Course
Diploma in Graphic Designing
Diploma in Video Editing
Diploma in Hardware Engineering.
Diploma in Acc.Package.
Course Fee 1000/=
மேலதிக விபரங்களுக்கு எமது நிறுவனத்துடன் தொடர்புகொள்ளுங்கள்...


## யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் 10 ஆவது ஆண்டு நிறைவையொட்டி மாபெரும் கல்விக் கண்காட்சியும் சாகச நிகழ்வுகளும் - 2010

## மாணவர் மகிழ்களம்

* பாடரீதியான புத்தாக்க படைப்புகளும் முன்வைப்புகளும்.
* கல்வி, தொழில்நுட்பம், மருத்துவம் மற்றும் பல்வேறு நிறுவனங்களின் கண்காட்சியும் மலிவு விற்பனையும்.
* சாகச நிகழ்வுகள்: ரயிலில் பயணம், பாதாளக் கிணற்றில் கார் மற்றும் சைக்கிள் ஓட்டம், வட்டக்கூட்டினுள் ஓடும் மோட்டார் சைக்கிள், மெரிக்கோ ரவுண்ட், பலூன் துள்ளல், மந்திர வித்தைகள்.

இடம்: யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி, கோப்பாய்
காலம்: 16 தொடக்கம் 19 செப்ரெம்பர் 2010 வரை கல்விக்கண்காட்சியும்
16 தொடக்கம் 21 செப்ரெம்பர் 2010 வரை சாகச நிகழ்வுகளும்.
கல்விக் கண்காட்சி: இலவசம் (காலை 8 மணி - மாலை 4 மணி வரை)
சாகச நிகழ்வுகள்: நுழைவுச்சீட்டு மாணவர்களுக்கு 30/=, ஏனையோருக்கு - 50/= (காலை 8 மணி - இரவு 10 மணி வரை மாணவர்களும், போதுமக்களும் பார்வையிடலாம்.)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஊடக அனுசரணை
உதயன் — மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி

(சி/570758)


## IELTS அவசியமில்லை
## STUDY IN UK

யாழ்.நகரில் மிகக் குறைந்த செலவில்.........
லண்டனில் தரம் வாய்ந்த பல்கலைக்கழகங்கள், கல்லூரிகளில்
உங்கள் உயர்கல்வியைத் தொடர்வதற்கு



★ Admission within 3 days
★ 100% Visa உத்தரவாதம் - ஆவணங்கள் சரியாக இருப்பது முக்கியம்
★ ஆகக் குறைந்த கல்வித் தகைமை(O/L)
★ விசா நிராகரிக்கப்படுமானால் பணத்தைத் திரும்பப் பெறும் வசதிகள்
★ விரைவான பயண ஏற்பாடுகள்
★ மிகக் குறைந்த கட்டணத்தில் Sponsor வசதிகள்

இறுதிச் சந்தர்ப்பத்துக்கு முந்திக்கொள்ளுங்கள்
தொடர்புகளுக்கு: 0770871616


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்வரும் நவம்பரில் அலுவலகம் மூடப்பட்டாலும்

# மன்னார் பிரதேச மக்களுக்கான ஐ.சி.ஆர்.சியின் ஆதரவுகள் வவுனியா பணியகம் ஊடாகத் தொடரும்

யாழ்ப்பாணம், செப்.10

ஆயுத மோதலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தொடர்ந்து செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு மனிதாபிமான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது. எமது மன்னார் அலுவலகம் மூடப்படவுள்ள போதும் அப் பிரதேச மக்களுக்கு வவுனியா பணியகம் ஊடாக தேவையான ஆதரவு கிடைக்கும்.

செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு விடுத்துள்ள செய்திக்குறிப்பில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது. அச்செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

இறுதியில் இடம்பெற்ற ஆயுத மோதல் ஆனது முடிவடைந்து ஒரு வருடத்துக்கு மேலான காலம் பூர்த்திய அடைந்த நிலையில் தனது பணிகளை மாற்றி அமைக்கும் நடவடிக்கைகளின் ஒரு முயற்சியாக, ஐ.சி.ஆர்.சி. தனது மன்னார் மாவட்டத்துக்கான பணியகத்தை 2010 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தின் இறுதியில் மூடிக் கொள்கிறது.

இப்பகுதியில் மீள்குடியேறிய சமூகங்களுக்கான ஆதரவை ஐ.சி.ஆர்.சி. தொடர்ந்தும் தனது வவுனியா பணியகம் ஊடாக வழங்க உள்ளதுடன் இப் பணியகத்தின் ஊடாக மன்னாரை வதிவிடமாகக் கொண்ட குடும்பங்கள் தடுப்புக் காவலில் உள்ளவர்களைப் பார்வையிடச் செல்ல உதவும் வேலைத் திட்டத்தையும் வழங்கிக் கொள்ளும். இத் திட்டத்தின் மூலம் தடுப்புக் காவலில் உள்ள தமது உறவினரைப் பார்வையிடச் செல்ல உதவி கோரி நிற்கும் குடும்பங்களுக்கு ஐ.சி.ஆர்.சி.யினது பணக் கொடுப்பனவு வழங்கப்படுகின்றது.

''ஆயுத மோதலானது மக்களது வாழ்க்கையில் ஏற்படுத்திய நீடித்த தாக்கத்தையும், இயல்பு நிலைக்கு மீளச் செல்ல மற்றும் மீள்கட்டுமான முயற்சிகள் போன்றவற்றில் ஆரம்பகட்டத்தில் அவர்களுக்கு வழங்க வேண்டிய ஆதரவின் முக்கியத்துவத்தையும் கருத்திற்கொண்டு ஐ.சி.ஆர்.சி. தொடர்ந்தும் இப் பகுதிகளில் மனிதாபிமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது'' என ஐ.சி.ஆர். சியின் இலங்கைக்கான தலைமைப் பேராளர் போல் கஸ்டெல கூறினார்.

இதேவேளையில் ஐ.சி.ஆர்.சியானது தற்போது தேவைகளில் தான் வழங்கி வரும் உதவி நடவடிக்கைகளை தனக்கு உள்ள வளங்களுக்கு ஏற்ப சீர்செய்யப்பட வேண்டியதை உணர்ந்துள்ள நிலையில் மன்னார் பகுதிகளை வவுனியாவில் இருந்து இலகுவில் அனுகக் கூடியதாகவும் உள்ளது என்று அவர் மேலும் கூறினார்.

ஆயுத மோதல்கள் முடிவுற்று அவைகள் ஏற்படுத்திய மனிதாபிமான பிரச்சினைகளுக்கு உதவி வழங்கும் நடவடிக்கைகள் தொடர்பில் ஐ.சி.ஆர்.சி. உலகலாவிய அனுபவத்தைக் கொண்டுள்ளது. இலங்கையில் 1989 ஆம் ஆண்டு முதல் நிரந்தரப் பிரசன்னமாயிக்கும் ஐ.சி.ஆர்.சி. மனிதாபிமான தேவைகளில் உதவிகளை வழங்கவும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு சேவைகளை புரிந்திட சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எடுத்து வரும் முயற்சிகளுக்கு தொடர்ந்தும் தனது ஆதரவையும் வழங்க முன்வருவதாக மீண்டும் கூறிக்கொள்கிறது - என்றுள்ளது. (ஒ-ஐ)

## கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்க புனரமைப்புக் கூட்டம்

தருமபுரம், செப்.10

திருவையாறு, திருவையாறுமேற்கு ஆகிய பிரிவுகளுக்கான கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைக்குழு புனரமைப்புக் கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு திருவையாறு பொது நோக்கு மண்டபத் தில் முன்னாள் தலைவர் எஸ். வெற்றிமோர் தலைமையில் நடைபெறவுள்ளது.

கால்நடை வளர்ப்பு, அபிவிருத்தி, கடன் திட்டம் என்பன தொடர்பாக இதன் போது ஆராயப்படவுள்ளன. எனவே இக் கூட்டத்தில் சகல அங்கத்தவர்களையும் அங்கத்தவர்களாக இணையவிரும்புபவர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

அதேவேளை இன்று பிற்பகல் 2 மணிக்கு இந்தப் பகுதிக்கான மாதாந்தக் கூட்டமும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-440-15)

## 'கேற்வே' சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம், செப். 10

யாழ்ப்பாணம் ''கேற்வே'' நிறுவனத்தில் ஆசிரியர்களுக்கான ஐ.சீ.டீ.எல் பரீட்சை, துரிததிறன் விருத்தி, வாழ்க்கைக்கான கற்கைநெறி (ஏ.எஸ்.ஏ.பி) மற்றும் ஜோன் கீல்ஸ் ஆங்கில புலமைப்பரிசில் திட்டம் ஆகியனவற்றில் சித்தியடைந்தவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு உதயன் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் சான்றிதழ் பெறுவோரின் விவரங்கள் வருமாறு :-

**ICDL சான்றிதழ்**

பி.அங்கசன், ஜீ.ஏ.சார்ள்ஸ், பி.கஜாகரன், வி.முகுந்தன், பி.சிறிகுமரபரன், ரி.முத்துலிங்கம், ஆர்.சுதர்சன், ஆர்.பிறேமளா, கே.கியோஜினி, எஸ்.நந்தகுமார், எம்.வினோஜினி, ஏ.மனோகரன், எஸ்.நிமலன், ஏ.லீனஸ், ஏ.குமுதினி, என்.செந்தில்நாதன், கே.கிருபனா, எஸ்.நகுலன், எஸ்.சுபாலிங்கம், என்.குமரசிறி, கே.பாமினி, எஸ்.வசந்தகுமார், எஸ்.சுபதீபினி, கே.துர்காபரா, பி.ஜானகி, கே.சாந்தி, ஜீ.ஜெகதீஸ்வரன், ஜே.மயில்வாகனம், எம்.விஜயகுமார், எஸ்.சிறிகாந்தன், எஸ்.சிவராஜா, எஸ்.சிவனொளிச்செல்வன், -

எஸ்.ஆர்.மகேந்திரன், எஸ்.தர்மலிங்கம், என்.கே.சந்திரமௌலீசன், பி.சர்மினி, பி.சந்திரமோகன், ஆர்.எல்.றொபின்சன், ஜே.உதயன், என்.பிரதீபன், ஈ.அல்பிரட் மேரி, எஸ்.பிரபாகரன், ரி.ரூபறஞ்சன், எஸ்.ராமநாதன், எஸ்.மேரிஅசும்தா, ஏ.வைகுந்தன், எஸ்.சுதர்சினி, எம்.உசாஜினி, வி.சிவப்பிரகாசம், ஆர்.சுலோசனா, என்.நரேந்திரா, எஸ்.இந்திரராஜா, எம்.ஜெயக்குமாரி, ஆர்.குமுதினி, ஏ.சந்திரமலர், கே.சுதர்சினி, கே.நிர்மலன், எம்.ஜென்சி, எம்.கலாஜினி, எம்.முரளிதரன், ஜே.பிரியதர்சினி, எஸ்.சுசீலா, எம்.சுகாசினி, பி.மதுரா, வி.நாகேஸ்வரி, எஸ்.தேன்மொழி, ஜே.தெய்வரஜனி, ஆர்.காந்தலிங்கம் -

கே.ஈஸ்வரகுமார், வி.சங்கர்ராஜ், கே.குகநாதன், எஸ்.நித்தியா, வி.உசாநந்தி, கே.விஜிதா, கே.அனுஜா, ஏ.ராஜநிதி, ஏ.பிறேமினி, வி.தியாகசொரூபி, பி.சுகிர்தா, எஸ்.சுகன்ஜா, எம்.கபிலன், ரி.முருகையா, ரி.மகிந்தா, பி.விஜயகுமார், வி.சிவானந்தன், ரி.செல்வகுமார், பி.தவரஞ்சினி, அ.சுதர்சினி, பி.மஞ்சுளா, கே.துஷ்யந்தி, எஸ்.சுபாசினி, ரி.புஸ்பமலர், ரி.லிங்கா.

**ASAP சான்றிதழ்**

ரி.சற்குணராஜா, எம்.சிந்துஜா, ஜீ.நிறோசா, பி.சுபாகினி, ஏ.அலக்ஸனா, ஏ.மேரிறிசோதா, எம்.அனோஜா, ஜே.ஏ.மெறின்ஸா, பி.டென்சியானா, ஏ.அசோக், ஆர்.சுதாகர், பி.சசீதரன், ரி.ஏ.விமலராஜன், எஸ்.பிரசாத், ஐ.ரதீபன், எஸ்.நிர்மலலோஜினி, ரி.கௌசிகா, ஜீ.நிறோசினி, எம்.ரஞ்சன், ஆர்.ஜீவிதன், எஸ்.ஜோன்பெனடிற், எஸ்.சுரேஸ்குமார், ரி.ஜினேஸ், இ.துஸ்யந்தினி, ஏ.ஜீ.டயன்டா, ரி.பிரவாஜினி, எம்.ஈழவதனி, எஸ்.எம். பசூரியா, ஆர்.எச்.ஆர்.சாளினி மைத்திரிபாலா, ஆர்.எச்.ஆர்.நடேசானி, மைத்திரிபாலா.

**English for Life சான்றிதழ்**

ரி.ஜெயந்தி, ரி.ஜாலினி, சி.கேமலதா, பி.யூடிநிரோசா, எஸ்.அஜந்தன், கே.ஜவாஸ்கர், ஏ.கோபிகா, என்.வாணி, எஸ்.துஸ்யந்தினி, ரி.கொன்சிகா, என்.தமிழ்பிரியா, ஜெ.கஜானா, எஸ்.மரில்யான், எஸ்.சிந்துரேகா, ஆர்.துளர்சா, பி.புவிதாஞ்சலி, கே.ஜெசிந்தா ஜெபாலினி, எஸ்.வானதி, இ.அதன்னியா, எஸ்.சிவமங்கை, எஸ்.சுகன்ஜா. (ஒ-ஐ)

## நல்லைக் கந்தன் உற்சவம் பூர்த்தி; சகலருக்கும் நன்றி கூறுகிறார் மேயர்

யாழ்ப்பாணம், செப். 10

நல்லைக்கந்தன் ஆலய உற்சவம் பக்தி பூர்வமாக இடம்பெற்று பூர்த்தியடைய ஒத்துழைப்பு வழங்கிய சகலருக்கும் யாழ். மாநகர முதல்வர் திருமதி யோ.பற்குணராஜா நன்றி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யுத்த சூழ்நிலை அகன்று சமாதானம் நிலவுகின்ற இன்றைய காலகட்டத்தில் நல்லைக் கந்தனின் வருடாந்த மகோற்சவம் பாதுகாப்பான சூழ்நிலையில் பக்தி பூர்வமாகவும் தமிழர் தம் கலாசார விழுமியங்களை எடுத்தியம்பும் வகையிலும் நடந்தேறுவதற்கு பூரண ஒத்துழைப்பு வழங்கிய ஆலய அறங்காவலர், பிரதி மாநகர முதல்வர், அங்கத்தவர்கள், காவல் துறையினர், பாதுகாப்புப் பிரிவினர், இலங்கை மின்சார சபை, வடபிராந்திய போக்குவரத்துச்சபை, மினிபஸ் சங்கம், தொண்டர் நிறுவனங்களான பரியோவான் முதலுதவிப்படை, சாரணர் இயக்கம், இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் (யாழ். கிளை), மக்கள் சேவைச்சங்கம், மக்கள் நலன்புரிச்சங்கம், இலங்கை முதலுதவிச் சங்கம் ஆகியோருக்கும், -

வர்த்தகப் பெருமக்களுக்கும், கால நேரம் பாராது மிகுந்த அர்ப்பணிப்புடன் கடமை செய்த மாநகரசபையின் சுத்திகரிப்புப் பகுதியினர், நீர்வேலைப் பகுதியினர், வருமானப் பகுதியினர், வேலைப்பகுதியினர், சுகாதாரப்பகுதியினர் மற்றும் வீதித்தடைகளிலும், பாதணிப் பாதுகாப்புப் பிரிவிலும் பணியாற்றிய அனைவருக்கும் எமது சார்பிலும் யாழ். நகர மக்களின் சார்பிலும் நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்வதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன் - என்றுள்ளது. (ஒ-ஐ-7)

# மனித உரிமைகள் அழிக்கப்படும்போது மக்கள் வெடிகொளுத்தி மகிழ்கிறார்களே!

## மனம் வெதும்புகின்றார் ஐ.தே.க. எம்.பி

கொழும்பு, செப். 10

18ஆவது அரசமைப்புத் திருத்தத்தால் ஜனநாயகமும், மனித உரிமைகளும் இல்லாதொழிக்கப்படும்போது பாற்சோறு உண்டு வெடிகளைக் கொளுத்தி ஆரவாரம் செய்யும் மக்கள் சமூகம் இந்நாட்டில் இருப்பது குறித்து நாம் உண்மையிலேயே கவலையடைகின்றோம்.

ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர நேற்று எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

உண்மையிலேயே இந்நாட்டில் பிறப்பது பெரும் அதிர்ஷ்டமாகும். இருந்தும் இதுபோன்ற மக்களுடன் வாழ நேர்ந்தது குறித்து நான் மிகவும் கவலையடைகின்றேன்.

18ஆவது அரச்மைப்புத் திருத்தத்தினால் ஜனநாயக சுதந்திரம், மனித உரிமைகள், சுயாதீன ஆணைக்குழுக்கள் இல்லாதொழிக்கப்பட்டு ஏகாதிபத்தியம் இந்த நாட்டில் உருவாகப் போவதை மக்கள் அறியவில்லை.

வாக்குறுதியளித்தபடி அரச ஊழியர்களுக்கு 2,500 ரூபா சம்பள உயர்வு, பட்டதாரிகளுக்கு தொழில்வாய்ப்பு, பல்கலைக்கழக பேராசிரியர்கள், விரிவுரையாளர்களின் சம்பள முரண்பாடு, வாழ்க்கைச் செலவு போன்ற அநேக விடயங்களுக்குத் தீர்வுகாணவேண்டியுள்ள நிலையில், அவசர அவசரமாக இந்த அரசமைப்புத் திருத்தத்தை முன்வைத்தது ஏன்?

அரசு 18ஆவது அரசமைப்புத் திருத்தத்தை நிறைவேற்றிக்கொள்ள பல்வேறு உபாயங்களை மேற்கொண்டது. பணம் மற்றும் பல்வேறு சலுகைகளை வழங்கி பலரை வலை வீசிப்பிடித்தது. ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் சலுகைகளுக்காகவும், பணத்துக்காகவுமே அரசமைப்புத் திருத்தத்துக்கு ஆதரவளிக்கின்றனர். மக்கள் நலனை கருத்தில்கொண்டு அவர்கள் வாக்களிக்கவில்லை.

இந்த நிலையின் கீழ் நாடாளுமன்ற முறை குறித்த எமது நம்பிக்கை சீர்குலைந்துள்ளது. அரசு நாடாளுமன்றத் தேர்தலின் போது மூன்றில் இரண்டு பெரும்பான்மையைக் கோரியது. இருந்தும் மக்கள் 144 ஆசனங்களையே பெற்றுக்கொடுத்தனர். 144 ஆசனங்களை 161 ஆக மக்களின் சுயாதிபத்தியத்தை விலை பேசியே அதிகரித்துக்கொண்டது.

இவ்வாறு அவர் தெரிவித்தார். (ஒ-சி)

## புலி உறுப்பினர் என்ற சந்தேகத்தில் சன் சீ கப்பல் பயணி தடுத்துவைப்பு

கொழும்பு, செப்.10

சன் சீ கப்பல் மூலம் கனடாவைச் சென்றடைந்த ஈழத் தமிழ் அகதிகளில் ஒருவர் தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினராக இருக்கலாம் என்ற சந்தேகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இவர் கனேடிய குடிவரவு மற்றும் அகதிகள் சபையினால் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இவர் தமிழீழ விடுதலைப் புலிகள் சார்பில் ஆழிப்பேரலை [illegible]கப்பட்டவர்களுக்காக புலம்பெயர்ந்த தமிழர்களிடம் நிதிகளை சேகரிப்பதற்காக 12 ஐரோப்பிய நாடுகளுக்கு விஜயம் செய்த குழுவில் உறுப்பினராக இருந்தார் என்பது விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

எனினும், இந்த உறுப்பினர், இலங்கையைத் தவிர தாம் எந்த ஒரு நாட்டுக்கும் செல்லவில்லை என்று தெரிவித்துள்ளார் என கனேடியத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, குறித்த இலங்கையர் வெளிநாட்டுக்குச் சென்று வந்துள்ள போதும் அவர் தமிழீழ விடுதலைப் புலிகளின் சார்பில் சென்று வந்தவர் என நிரூபிக்க [illegible] என்று அவரின் சட்டத்தரணி தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் விசாரணை 30 நாள்களுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (ஒ-சி)


CSE COLOMBO STOCK EXCHANGE

பங்குச்சந்தை - யாழ்ப்பாணம்
புரட்டாதி 09, 2010
பங்குச்சந்தைச் சுட்டிகள்

அனைத்துப்பங்கு(ASPI) 6023.41↑
மிலங்கா(MPI) 6,278.31↑
உரிமைமுதல் தகவல்கள்
வியாபாரப்புரள்வு(Rs.)4,193.61Mn
பங்குகளின் அளவு(No.)101.23Mn
வியாபாரம்(No.) 23,256
சந்தை முதல்(Mkt.Cap) 1,983.09Bn
விலை அசைவுகளின் அடிப்படையில்
அதிகரிப்பு(Top 5 gainers)விலை Rs.
றிச்சட் பீரிஸ் எக்ஸ்போட் 35.20
ஹபுகஸ்தென்ன 59.40
போகல கிறபை(f)ற் 27.50
அலயன்ஸ் 736.80
போ(f)ட் லான்ட் 191.80
குறைவு(Top 5 losers) - விலை Rs.
த பினான்ஸ் 48.10
ஈ.பி. கிறேசி 871.40
கொழும்பு பார்மசி 1036.40
ஈகுயிற்றி 66.00
ஈகுயிற்றி - ரூ 26.10
மேலதிக தகவல்கள் -www.cse.lk


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

திலாந்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்

### கிழக்குப் பல்கலைக்கழகத்தின்

# சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞான பீடத்தில் புதிய மாணவருக்கு பாடநெறி 15 இல்

யாழ்ப்பாணம், செப் 10

கிழக்குப் பல்கலைக்கழக சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞான பீடத்தின் வைத்திய மற்றும் தாதியப் பாடநெறிகளுக்குத் தெரிவு செய்யப்பட்ட முதலாம் வருட மாணவர்களுக்கான பாடநெறிகள் எதிர்வரும் 15ஆம் திகதி புதிய வீதி, மட்டக்களப்பில் உள்ள பீடத்தில் ஆரம்பமாகும் என்று பதிவாளர் அறிவித்துள்ளார்.

விடுதி வசதிகள் வழங்கப்பட்டுள்ள மாணவர்கள் எதிர்வரும் 14ஆம் திகதி மாலை 5 மணிக்கு முன்னர் இல.50, புதிய வீதி, மட்டக்களப்பிற்கு சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

மேலதிக விவரங்களுக்கு மாணவர்கள் தமது பீடாதிபதியுடனோ அல்லது சிரேஷ்ட உதவிப் பதிவாளர் அல்லது பரீட்சைக் கிளையுடனோ தொடர்புகொள்ள முடியும்.

சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞான பீடத்தின் பீடாதிபதியை 0652227286 என்ற தொலைபேசி இலக்கத்துடனும், சிரேஷ்ட மற்றும் உதவிப் பதிவாளரை 0652240584 என்ற தொலைபேசி இலக்கத்துடனும் தொடர்புகொள்ளலாம்.

மேலதிக விவரங்களைப் பல்கலைக்கழக இணையத்தளமான esn.ac.lk என்பதனூடாகவும் அறிந்துகொள்ள முடியும் எனவும் பதிவாளர் மேலும் அறிவித்துள்ளார்.

(ஒ-14)

## பாணின் விலை உயருமா?

கொழும்பு, செப. 10

கோதுமை மா கிலோ ஒன்றின் விலை மூன்று ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதன் காரணமாக பாணின் விலையை அதிகரிக்க வேண்டிய நிலை ஏற்படும் - என்று வெதுப்பக உரிமையாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக இன்று விசேட கலந்துரையாடல் ஒன்று இடம் பெறவுள்ளது என வெதுப்பக உரிமையாளர்கள் சங்க தலைவர் தலைவர் என்.கே.ஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில் தமக்கு கிடைக்கப் பெற்றுள்ள விலை கட்டணங்களுக்கு அமைய பாணின் விலை ஒரு ரூபா முதல் மூன்று ரூபா வரை அதிகரிக்கப்படலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

எனினும் ஏனைய வெதுப்பக உற்பத்திகளின் விலை அதிகரிக்கப்படமாட்டாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

### இராமாவில் முகாமில் இருந்து கூட்டிச் செல்லப்பட்டோர்

# வடமராட்சி கிழக்குப் பாடசாலைகளில் தற்காலிகமாகத் தங்கியிருக்க ஏற்பாடு

கொடிகாமம் இராமாவில் இடம்பெயர்ந்தோர் முகாமில் தங்கியிருந்த வடமராட்சி கிழக்கைச் சேர்ந்த 586 குடும்பங்களைச் சேர்ந்த 1,080 பேரும் ஏற்கனவே அறிவித்தபடி நேற்று சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்தப்பட்டனர்.

படை அதிகாரிகளும் அரச அதிகாரிகளும் இணைந்து இந்தப் பணியை முன்னெடுத்தனர்.

காலை முதல் பிற்பகல் வரை இடம் பெற்ற இந்தப் பணியில் 20 இற்கு மேற்பட்ட பஸ்கள் பயன்படுத்தப்பட்டன.

ஆழியவளைப் பகுதியைச் சேர்ந்த மக்கள் ஆழியவளை சி.சி.தமிழ்க்கலவன் பாடசாலையிலும்- உடுத்துறை மக்கள் உடுத்துறை ம.வியிலும்- வத்திராயன் மக்கள் வத்திராயன் பொதுமண்டபத்திலும்- மருதங்கேணி வடக்கு, மருதங்கேணி தெற்கு, தாளையடி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் தாளையடி புனித அந்தோனியார் தேவாலயத்திலும்- செம்பியன் பற்று தெற்கு, செம்பியன்பற்று வடக்கு, மருதமுனை ஆகிய இடங்களைச் சேர்ந்த மக்கள் செம்பியன்பற்று அ.த.க பாடசாலையிலும் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான சமைத்த உணவு, குடிதண்ணீர் மற்றும் ஏனைய வசதிகளை மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனை மேற்கொண்டு வருகின்றது. மூன்று நாள்களின் பின்னர் இம்மக்கள் அவர்களது சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்தப் படவுள்ளனர். அதேவேளை, அடுத்த கட்டமாக கட்டைக் காடு, கேவில், வெற்றிலைக் கேணி, குடாரப்பு ஆகிய பகுதிகளில் மக்கள் குடியமர அனுமதிக்கப்படுவர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-ஐ-15-190-131)

# கல்வி அமைச்சருக்கு எழுத, வாசிக்க தெரியுமா எனக் கேட்கிறார் சஜித்

கொழும்பு, செப். 11

எனது கேள்வியை வாசித்து தெரிந்து கொள்ள முடியாத கல்வி அமைச்சர் முதலில் எழுத, வாசிக்கப் படித்துக் கொள்ளவேண்டும் என்று ஐ.தே.க. அம்பாந்தோட்டை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாச, கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தனவிடம் விநயமாகக் கேட்டுக்கொண்டார்.

நேற்று நாடாளுமன்றத்தில் வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் அம்பாந்தோட்டை கோட்டக்கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளின் உட் கட்டமைப்பு வசதிகள் தொடர்பான கேள்வி ஒன்றை எழுப்பி இருந்தார் சஜித் பிரேமதாச.

இக்கேள்வி தொடர்பாக வியாக்கியானம் செய்த கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன -

கௌரவ உறுப்பினர் பாடசாலைகளில் எத் தனை வாங்குகள், மேசைகள் இருக்கின்றன, எத்தனை ஆசிரியர்கள் திருமணம் முடித்துள்ளனர், திருமணம் முடிக்காத ஆசிரியர்கள் எத்தனை பேர் என்றெல்லாம் கேட்டுள்ளார். இந்த விவகாரங்களைத் திரட்ட ஒருமாத கால அவகாசம் வேண்டும் - என்றார்.

அமைச்சின் இந்தக் கூற்றைக் கண்டித்த சஜித் பிரேமதாச இந்தக் கல்வி அமைச்சரின் படித்தவர் என்று நினைத்தேன். ஆனால் அவருக்கு எனது கேள்வியைக் கூட வாசித்துப் புரிந்துகொள்ள முடியாதவராக இருக்கின்றார்.

அவர் கூறியது போல் நான் எதையும் கேட்கவில்லை. எனவே கல்வி அமைச்சர் சிங்களத்தையாவது எழுத வாசிக்கப் படித்துக்கொண்டு வரவேண்டும் -என்றார் சஜித் பிரேமதாச.

(ஒ-சி).

NEC
Point Pedro Road, Jaffna.
A/L 2011, 2012
கலை, வர்த்தக பிரிவுகள்
புதிய பிரிவுகள் ஆரம்பம் 11-09-2010
சனி காலை 8.00 மணி
வர்த்தகப்பிரிவு
கணக்கீடு : P. பகீரதன் பொருளியல் : NB. கஜீதரன்
வணிகக்கல்வி : S. யசோ
கலைப்பிரிவு
Tam : A.K. கிருத்திராஜன் Log : P கமல்
Eco : NB. கஜீதரன் Geo : M செல்வா
Hin Cul : S. ஜெயக்குமார் His : A.A ஆனந்தன்
Pol Sci : A.K. ஜொப்சன் Chri : R. ரஞ்சித்
Dram : K கஜீதரன் Agri : S. ஜெயந்தன்
Sati : T. தவசேகர் English : S. Jaisan

NEW EDUCATION WORLD
ஆனைப்பந்தி
G.C.E. (A/L) பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான மீட்டல் வகுப்புக்கள் சனி, ஞாயிறு-
பௌதிகவியல்-7 am
இரசாயனவியல்-8.30 am
கணிதம்/உயிரியல்-10 am
ஆரம்பம்-11.09.2010

கணக்கீடு
A.P. பகீரதன்
B.B.A(FM.Spl.)
A/L 2011
பங்குடமை
Sat., Sun 12 -1
ஆரம்பம்: 11.09.2010 (Sat)
A/L 2011
சொத்து விற்பனை
Sat., Sun. 9 -10
ஆரம்பம்: 11.09.2010 (Sat)
விக்னா
52, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

Diploma Courses... புதிய பிரிவுகள் ஆரம்பம்
*MS Office *Accounting *Graphics 3D *Printing & Typing, Kids Programs
*Web Development *Video Editing *AutoCAD *VB.net, *LINUX, *ICT
International Courses...
Computer Engineering - USA, CIMA - UK, Toefl / IELTS
Java programmer, Linux, BCS, CCNA, CCNP ICDL, Hacking
MCS Free ICDL, BCS, Hardware, English
Supported By UNDP/JRRP
உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உயர் வேலைவாய்ப்பு
324, Palaly Road, Parameswara Junction
Web site : www.mcsitcampus.org
SMS your name & course to 0772 395 895
90% OFF
Degree Course
BIT
University of Colombo
Closing Date 12.09.2010



வேலை ஆள் உடன் தேவை
எமது ஸ்தாபனத்துக்கு பொதி செய்வதற்கு 25 வயதுக்கு உட்பட்ட பெண்கள் தேவை.
மாநகர சபை எல்லைக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.
நியூ ராஜா கிறீம் ஹவுஸ்
37/1, கச்சேரி நல்லூர் றோட்,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 0212223857

பொருளியல்
N.B கஜீதரன்
2011-A/L பிரிவிற்கான புதிய பாடத் திட்டத்திற்கமைவான
Model Paper Class
NEC
பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி.
Sat, Sun. 1-2 pm.

A/L கணக்கீடு
A/L 2011/ Day
சொத்து விற்பனை
ஆரம்பம்: நாளை 1.30 p.m
A/L 2012
வங்கிக் கணக்கிணைக்கக் கூற்று
ஆரம்பம்: நாளை 12 p.m
NEW SCIENCE HALL
Jaffna
'நவிப்பா அனுமதி'
A/L 2011/ Day
வருமானச் செலவுக் கணக்கு
ஆரம்பம்: இன்று 4 p.m
Paper Class - செவ்வாய் 6 a.m.
A/L 2012
வங்கிக் கணக்கிணைக்கக் கூற்று
ஆரம்பம்: நாளை 10 a.m
SHAMROCK
Eachchamoddai
ஆசிரியர்: எஸ்.தவா B.Com (Hons) (Acc.Spl.)

புலமைப்பரிசில் மாணவர்களுக்கு இதோ! ஒரு புதிய உதயம்
முதன்முறையாக தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான பாடங்களுக்குத் தனித்தனி ஆசிரியர்களுடன் 11.09.2010 சனிக்கிழமை வகுப்புகள் ஆரம்பமாகின்றன.
"மழலைகள் கல்வியகம்"
மகிழ்ச்சியான கற்பித்தல்
ஆசான்கள் :-
(1) திரு.மு.ஜெயமதன் } பகுதி I, II
(2) திரு.S. நவகாந்தன் }
(3) திரு. V. சசிகுமார் - ஆங்கிலம்
(4) செல்வி N. சிவகாமி - சிங்களம்
(5) செல்வி S. தர்சினி - அழகியல்
(6) திரு. S.கிருபன் - வழிகாட்டல் ஆலோசனை
2011 - தரம் 2, 3, 4 02.10.2010 ஆரம்பமாகின்றது
கட்டுரை வகுப்பு தனியே இடம்பெறும்
உடன் பதிவுக்கு : நாள்தோறும் பிற்பகல் 3.30 மணி.
மழலைகள் கல்வியகம்
இந்துக்கல்லூரி அருகில்,
கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
(102943)

இன்று மாலை மெகா மெஜிக்
இந்தியாவில் இருந்து உலகப் புகழ்பெற்ற மாயஜால நிகழ்ச்சி
இன்று மட்டும் மாலை 6.30 மணிக்கு
இடம்: நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம்
ரிக்கற் மண்டபவாயிலில்..
100/= 200/=
T.P: 077 8060 225



முக்கிய அறிவித்தல்
BEACON- S.S.மனோகரன் அவர்களின் வகுப்புக்கள் வழமைபோல் சனி, ஞாயிறு நடைபெறும்.

வீடு விற்பனைக்கு
பலாலி றோட், கோண்டாவில் கிழக்கில் (மேற்குப் பக்கம் வரும் றோட்டில்) கனகசபை லேனில் உள்ள லொறிச் சங்கத்திலிருந்து மூன்றாவது வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு: பொ.சண்முகலிங்கம், கோண்டாவில் கிழக்கு.

போட்டிப் பரீட்சை வகுப்பு
★ 18ஆம் திகதி நடைபெற இருக்கும் ஆலோசனையும் வழிகாட்டலும் உத்தியோகத்தர் தெரிவுக்கான பரீட்சைக்கான வகுப்பு சனி, ஞாயிறு 1 தொடக்கம் 5 மணிவரை நடைபெறும்.
★ பொதுஅறிவு, பொது உளச்சார்பு வழமையான வகுப்பு 2 தொடக்கம் 5 மணிவரை நடைபெறும்.
யாழ்ப்பாணக் கல்லூரி,
பட்டப்படிப்புக்கள் பிரிவு,
(யாழ்.போதனா வைத்தியசாலை எதிரே)

இன்று உதயமாகின்றது... KKJ இன் புதிய காட்சியறை யாழ்.நகரில்...
KKJ Furniture Sales Center
தளபாட விற்பனை நிலையம்



விரும்பிய தளபாடங்களை விரும்பிய வடிவத்தில் மொத்தமாகவும் சில்லறையாகவும் செய்து பெற்றுக் கொள்ள முடியும்
தலைமையகம்: இல. 11, ... யாழ்ப்பாணம்
T.P No: 0213218501 0779037293
Show room: No.393K.K.S Road, Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 10.09.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.